

# ஞானச்சுடர்

சித்திரை

2011



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ



# குறள்வழி

**புறத்துஉறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.**

**பொருள் :** மனத்தில் அன்பில்லாதவர்க்கு வெளி அவயவங் களால் பயனில்லை. (79)

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்(கு)**
**என்புதோல் போர்த்த உடம்பு.**

**பொருள் :** அன்பு சம்பந்தப்பட்டு நின்ற உடலே உயிர்நிலை பெறும் உடம்பாகும்; அன்பில்லாதவர்க்கு உடம்புகள் எலும்பாலும், தோலினாலும் மூடப்பட்டவைகளே யன்றி உயிர் உள்ளனவாகா. (அன்பில்லார் உயிரில் லார் என்றவாறு) (80)



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### யோகநெறி

**ஐவருமுன் ஏவல்செய்வார் தெய்வமுன்னை விரும்பிவிடும்**
**கைவல்ய முத்தியடி - தங்கமே**
**கண்ணைத் திறந்துவிடு** 9

**கூறும்நாவே முதலாகக் கூறும் கரணமெல்லாம்**
**கோமானுக் கொப்புக்கொடு - தங்கமே**
**குறைவொன்றும் வாராதடி** 10

**சீமானைப் போலிருந்து செகத்திலே வாழ்ந்திடலாம்**
**ஓம்ஆம்ஊ மென்றுசொல்லி - தங்கமே**
**உருவேற்றி நின்றிடடி** 11

**உருவேற வேசெபித்து ஓங்காரக் கம்பத்திலே**
**திருவேற நின்றிடடி - தங்கமே**
**சீவன் சிவன் ஆச்சதடி** 12

உ





# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 160

2011 சித்திரை

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தமிழர் சித்திரைமாதப்..... | நா. நல்லதம்பி | 01- 02 |
| வித்தகா! உன்....... | திருமதி பா. சிவனேஸ்வரி | 03- 06 |
| ஆலயங்களை அடித்தள... | எஸ்.ரி. குமரன் | 07- 10 |
| எது பக்தி? | கு. நவரத்தினராஜா | 11- 13 |
| தவமுனிவனின் தமிழ்... | சிவ மகாலிங்கம் | 14- 18 |
| தகவற் பக்கம் | காஞ்சிப்பெரியவர் | 19- 21 |
| யாழ்ப்பாணத்தில்.... | மூ. சிவலிங்கம் | 22- 24 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 25- 27 |
| நித்திய அன்னப்பணி | | 28- 29 |
| படங்கள் தரும் பதிவுகள் | | 30- 31 |
| அவலக் கடலைக் கடக்க | செல்வி பா. வேலுப்பிள்ளை | 32- 33 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 34- 36 |
| திருவாவடுதுறையிலும்.... | தி. மயூரகிரிசர்மா | 37- 38 |
| சிறுவர் கதைகள் | | 39- 41 |
| கந்தனே கலியுகத்... | கே.வி. குணசேகரம் | 42- 44 |
| தினம் தினம் ஆனந்தமே.. | ஜக்கி வாசுதேவ் | 45- 47 |
| சந்நிதி- ஆச்சிரமம்... | வை.க. சிற்றம்பலம் | 48- 49 |
| ஆலயங்களில்.... | காரை எம.பி. அருளானந்தன் | 50- 51 |
| சண்முகப்பெருமான் | க. சிவசங்கரநாதன் | 52- 54 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 55- 57 |
| இருள்வெளி... | சிவ சண்முகவடிவேல் | 58- 59 |
| படகுப் பயணம் | திருமதி சி. யோகேஸ்வரி | 60- 61 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 62- 64 |


**அன்பளிப்பு:**

**மலர் ஒன்று 30/- ரூபா**


**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# பங்குனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

பங்குனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு வ. கணேசமூர்த்தி (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது உரையில் ஞானச்சுடர் மலரானது 14ஆவது ஆண்டில் தடம்பதித்தாலும் புதுப்பொலிவுடன் பல்வேறு அம்சங்களைக் கொண்டு வெளிவந்துள்ளது.

அடுத்து அவர் தனது உரையில், ஆச்சிரமமானது பல்வேறுபட்ட சேவைகள், பணிகளைச் செய்துவருகின்றது. அச்சேவைகள், பணிகள் மூலம் மக்களுக்கு ஏற்படும் இடர்களைத் தீர்க்கின்றது என்று கூறியதோடு, ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமையிலும் ஞானச்சுடர் சஞ்சிகையை தவறாது வெளியிட்டு வருவதோடு, இச்சஞ்சிகையானது சைவ மக்களுக்கு ஓர் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து ஒளி பரப்புகின்றது என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:**

பங்குனிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை காரை எம்.பி. அருளானந்தன் (ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது உரையில், மானிடத்தை மேம்படுத்தும் ஓர் செயற்பாடாக ஞானச்சுடர் சஞ்சிகை வெளிவருகின்றது எனக் குறிப்பிட்டார்கள்.

அடுத்து அவர் தனது உரையில், சுடரில் இடம்பெறும் அத்தனை விடயமும் தெய்வீக சிந்தனையைக் கொண்டதாக அமைந்துள்ளது எனவும், வீட்டிலே பூசை அறையில் வைத்து வழிபடப்படும் ஒரு நூலாகவும் இது விளங்குகின்றது எனவும் குறிப்பிட்டார்கள். மேலும் ஞானச்சுடர் மலரில் ஆன்மீக சிந்தனை படைத்த எழுத்தாளர்களின் ஆக்கங்கள் மாதாமாதம் அலங்கரித்து வருகின்றன என்றும் கூறினார்.

ஞானச்சுடர் சஞ்சிகையானது சிறந்ததொரு மகத்துவத்தை தன்னிடத்தே கொண்டுள்ளது. அது என்னவென்றால் இச்சுடரை கையிலே தூக்கிப்பிடித்தால் கவலை, துன்பங்களை நீக்கும் தன்மை வாய்ந்தது. அத்தோடு இந்நூல் ஆற்றங்கரையானது ஆசிபெற்ற ஓர் நூலாக விளங்குகின்றது என்று சபையோருக்கு விளக்கம் கொடுத்தார்.

ஆச்சிரமத்தினூடாக ஏழை எளியவர்களுக்கு உதவுவதற்கு நாம் அனைவரும் எம்மால் இயன்றதை வாரிவழங்கவேண்டும் என்று கூறினார். மேலும் இச்சுடரானது அனைத்து சைவ மக்களதும் அறிவுப்பசியைப் போக்குகின்ற ஓர் நூலாக அகில உலகம் முழுவதும் திகழவேண்டும் என்று கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்கள்.

"ஞானச்சுடர் வாழி!
உலகம் போற்ற வாழி!
அறிவைப் பெருக்கும் சுடரே வாழி! வாழி!!




இந்தியாவிலும் ஏனைய உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள தமது கோடிக் கணக்கான பக்தர்களுக்கு ஆன்மீகத் தலைவராகத் திகழ்ந்த பகவான் ஸ்ரீ சத்திய சாய்பாபா அவர்கள் கடந்த ஞாயிறு (24.04.2011) காலை 7.45 மணிக்கு ஜீவ முத்தியடைந்தார் எனும் செய்தி சாயி பக்தர்களுக்கும் ஆன்மீக உலகுக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

ஆந்திராப் பிரதேசம்- அனந்தபூர் மாவட்டம்- புட்டப்பர்த்தி கிராமத்தில் 1926 நவம்பர் 23இல் பாபா மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்தார். தனது 14ஆவது வயதில் இருந்தே தனது ஆன்மீகக் கருத்துக்களை போதிக்கத் தொடங்கினார். படிப்படியாக அவரது உரைகளையும் கருத்துக்களையும் கேட்க மக்கள் கூட்டம் அலைமோதியது.

1950இல் "பிரசாந்தி நிலையம்" என்ற ஆச்சிரமம் நிர்மாணிக்கப்பட்டது. அதன் பின்னர் அந்த நிலையத்தினைத் தலைமையகமாகக் கொண்டு தமது அளப்பரிய சமூக சேவைகளை ஆரம்பித்தார். வெளிநாடுகளில் உள்ள ஏனைய மதத்தவர்கள் பலரும் இவரது கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு இவரது சீடர்களாயினர். அவர்களுக்கூடாக வெளிநாடுகளிலிருந்து பிரசாந்தி நிலையத்திற்கு வந்து சேர்ந்த நிதி உதவியினால் அவரது சமுதாயப் பணிகள் விரிவடைந்தன.

சுவாமி இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்றவர்கள் மனித குலத்துக்கு ஏற்படுத்திய உன்னதமான விழிப்புணர்வுக் கருத்துக்கள் அனைத்தையுமே பின்பற்றும் ஒரு ஆன்மீகவாதியாகவே பாபா விளங்கினார்.

மனிதத்துவத்திற்கான அவரது சேவைகள் யாவும் கடவுளுக்கான சேவையாக அவர் கருதிச் செயற்பட்டு வந்தார். அவரது சொல்லும் செயலும் பக்தர்களின் இதயங்களில் அன்பெனும் ஒளிவிளக்கை ஏற்றின.

அதிஉயர் மனித விழுமியங்களைப் போதிக்கும் உயர்ந்த மனிதராகவிருந்த ஸ்ரீ சத்திய சாய்பாபா போதித்த கருத்துக்கள் இன்று உலகின் 114 நாடுகளில் இயங்கி வரும் சாயி நிலையங்களினூடாக மக்களைச் சென்றடைகின்றன.

அரசியற் தலைவர்கள், ஆன்மீகப் பிரமுகர்கள், சாய் அறக் கட்டளையினர், உறவினர்கள் முன்னிலையில் ஸ்ரீ சத்யசாய் பாபா அவர்களின் பூதவுடல் 27.04.2011 புதன்கிழமை ஜீவ சமாதி வைக்கப்பட்டது. பாபா அவர்களின் ஆன்மீகக் கருத்துக்களை உள்வாங்கி நாமும் அதன்வழி நடப்போமாக.

# "மாநிலத்தின் முதுசொம்"

மாதமொரு பிறப்பாய் முருகபதம் போற்றி
மோகனமாய் வருகிறாய் சுடரே வருக,
மன்னிய இவ்வுலகமதில் திண்ணிய நற்பணிகளோடு
மகிழவரும் சுடரே மலர்ந்து வருக,

நாதமொடு தேன்தமிழ், நல்லசிவ கைங்கரியம்
நல்ல முருகனுக் கேற்ற ஆச்சிரமம்- முருக
நம்பிக்கை வைத்தவர்க்கு நாளுமே விடிவுதரும்
நற்றமிழ் மணக்கும் விநோத ஆலயம்

பேதங்க ளங்கு இல்லை, வீண் பேச்சுக்களங்கு இல்லை,
பெருமெடுப்பு மனிதர்களும் அங்கு இல்லை,
பெரிதாகத் தம்மையும் முகம்நீட்டி வரவேற்கும்
பிசகு தரு பிரசாரர்களும் அங்குஇல்லை,

மேதகு யாவரும் மோதலின்றிச் சமனாகும்
மீன்பாயு தேனாற்றங் கரையில் – முருகன்
மகிழ்வாகும் கதைசொல்லும் இதழாகும் சுடரே'
மாநிலத்தின் முதுசொமாய் வருகிறாய்.

–கே.எஸ் –

# சித்திரை மாத சிறப்பும் பிரதி பெறுவோர் விபரம்

சி. கணபதிப்பிள்ளை
(பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்)
நா. உமாசங்கர்
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)
நா. குகன்
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)
பொ. பாலசிங்கம்
(பத்தமேனி, அச்சுவேலி)
இராசையா சற்குணதாஸ்
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
திருமதி. ஸ்ரீனிவாசன்
(பழம் றோட், கந்தர்மடம்)
த. சிவலிங்கம்
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)
திருமதி சிவராஜா
(நல்நடத்தை உத்தியோகத்தர், கல்வியங்காடு)
க.வ. இரவீந்திரராஜா
(விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
கு.மு. இராஜேந்திரா
(வட்டுக்கோட்டை)
கு. சண்முகநாதன்
(ஸ்ரீ ராமகிருஷ்ண பவனம், கொக்குவில்)
த. இராமச்சந்திரன்
(ஊரெழுகிழக்கு, சுண்ணாகம்)
வீ. கிருஷ்ணராஜா
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)
சி. கனகசபாபதி
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)
ம. குலநாதன்
(நாதன் கராஜ், ஆவரங்கால்)
க. பாலசுப்பிரமணியம்
(பதிவாளர், இமையாணன்)

**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசோதகர்)
**கனகலிங்கம் சந்திரவாசன்**
(சிறுப்பிட்டி மேற்கு)
**செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
**S. தர்மபாலகிருஷ்ணன்**
(தும்பளை, பருத்தித்துறை)
**த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
**க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)
**மா. சண்முகநாதன்**
(வியாபாரி மூலை, பருத்தித்துறை)
**வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
**க.கு. கிருபாகரராசா**
(பிரதான வீதி, ஆவரங்கால்)
**இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)
**அ. தவராசசிங்கம்**
(களஞ்சியப் பொறுப்பாளர், உடு. ப.நோ.கூ. சங்கம்)
**சி. நந்தகுமார்**
(வங்கி ஊழியர், உரும்பராய்)
**கு. லோகேந்திரன்**
(மில் ஒழுங்கை, மல்லாகம்)
**ச. கனகராசா**
(துஷி மினிசினிமா, ஆவரங்கால்)
**சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
**இ. விஜயகருணா**
(விதுரன் மோட்டோர்ஸ், ஆவரங்கால், புத்தூர்)
**செயலாளர்**
(நகரசபை, வல்வெட்டித்துறை)
**வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
**சு. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
**சு. கந்தசாமி**
(கரணவாய் தெற்கு, கரவெட்டி)

**சி. சக்திகிரீவன்**

(கிராம சேவையாளர், ஏழாலை)

**உரிமையாளர்**

(ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)

**தி. பாலசிங்கம்**

(அச்சுவேலி தெற்கு அச்சுவேலி)

**இ. ஜெயபரிபாலன்**

(உரும்பராய் கிழக்கு, உரும்பராய்)

**சி. சுகிர்தலிங்கம்**

(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

**T. இரவீந்திரதாஸ்**

(சாமியன் அரசடி, கரவெட்டி)

**ச. மகாதேவன்**

(ஜெயந்தி என்ரபிறைஸ், ஆவரங்கால்)

**தலைவர்**

(சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்)

**கு. மாணிக்கராசா**

(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கம்)

**உரிமையாளர்**

(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

**ஆ. மணிமாறன்**

(அராலிமத்தி, அராலி)

**ந. ஜெயக்குமார்**

(விற்பனையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

**க. ஞானச்சந்திரன்**

(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)

**ஐ. வேலாயுதர்**

(வேல்வாசம், கோப்பாய்)

**ஐ. நற்குணநாதன்**

(உடுவில், சுன்னாகம்)

**தம்பு சற்குருநாதன்**

(ஏழாலை மேற்கு, சுன்னாகம்)

**வே.க. கந்தையா**

(வியாபாரிமூலை, பருத்தித்துறை)

**திரு. இரா. சிவலிங்கம்**

(கேசரிவிலா, கரவெட்டி)

**வே. சந்திரசேகரம்பிள்ளை**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**K. இராமச்சந்திரன்**
(சங்கானை)
**த. இராஜசிங்கம்**
(நீர்வேலி)
**கு. செல்வலட்சுமி**
(உடுவில், சுண்ணாகம்)
**திருமதி P. நந்தகோபால்**
(பிளாக்றோட், சங்கானை)
**ம. புலேந்திரன்**
(கரணவாய், கரவெட்டி)
**த. விமலேஸ்வரன்**
(மாலிசந்தி, அல்வாய்)
**வீ. செல்வராஜா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**கி. தவராசா**
(காந்தியூர், புலோலி)
**சி. பாலபாரதி**
(கற்கோவளம், பருத்தித்துறை)
**V. கனகநாயகம்**
(கனகேந்திரா தொலைத்தொடர்பு நிலையம், இணுவில்)
**உரிமையாளர்**
(அரவிந் போட்டோ, ஆனைப்பந்தி)
**இராசையா சுகுமார் (பொலிஸ் பரிசோதகர்)**
(ஆத்தியடி துன்னாலை வடக்கு, கரவெட்டி)
**செ. ஜெகதீஸ்வரி (ஆசிரியை)**
(அந்தோணியார் வீதி, மாதகல்)
**ஜ. சத்தியபாலன்**
(பலாலி வீதி, உரும்பராய்)
**அதிபர்**
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
**இ. ஸ்ரீஸ்கந்தாரம்**
(உப தபாலதிபர், உப அஞ்சல் திணைக்களம், சுண்ணாகம்)
**செல்வி சந்திரலிங்கம் மாதுமை**
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
**ம. சிவானந்தம் ஆசிரியர்**
(அல்வாய் தெற்கு அல்வாய்)

# தமிழர் சித்திரைமாதப் பிறப்பும் சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பும்



**நா. நல்லதம்பி** அவர்கள்

தமிழர்தம் சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் ஒன்றுதான். தமிழர்களுடைய ஆண்டின் முதல்மாதமாக உள்ளது சித்திரைமாதம்; ஆண்டு முழுவதும் செல்வாக்குச் செலுத்துவதும் சித்திரை மாதந்தான். அதனாற் போலும் சித்திரைப் புத்தாண்டு எனச் சொல்லப்பெறுகிறது!

பருவ காலங்களிற் சிறந்ததான இளவேனிற்காலம் சித்திரை மாதத்தில் ஆரம்பமாகிறது. இளவேனிற் காலத்தை வசந்தகாலம் என்று சொல்வர். "வசந்தருதுவாக நான் இருக்கிறேன்" என்று கண்ணன் கீதையில் கூறியிருப்பது நம் சிந்தனைக்குரியது.

கார்காலமும் இலையுதிர்காலமும் பின்னிட, தாவரங்கள் எல்லாம் தழைத்துப் பூத்துக் காய்த்துப் பச்சைப் பசேலெனக் காட்சியளிப்பது இந்த இளவேனிற்காலத்தில் என்பது யாவரும் அறிந்ததே.

"மூவேந்தர் ஆட்சிசெய்யும் தமிழ்நாட்டில் மன்மதனுடைய ஆட்சியும் சிறப்புடன் அமைந்திருந்தது இதற்கு அனுசரணையாக இருப்பதுபோல மதுரைக்கு இளவேனிற்காலம் வந்தது" எனவும்

"செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தார் அசோகம் மடல் அவிழக்- கொந்தார்
இளவேனல் வந்ததால், என்னாங் கொல்? இன்று
வளவேனற் கண்ணி மனம்" எனவும்,

இளவேனிற்காலச் சிறப்புஞ் செழுமையும் பற்றிச் சிலப்பதிகாரம் கூறுவதும்,

வியக்கும் தன்மையவாய், மணம் பரப்பும் மலர்களையுடைத்தாய் விளங்கும் சோலைகளையுடைய இளவேனிற்காலம் வந்ததுபற்றி,

"இளவேனில் வந்திறுப்ப, இறும்பூது சான்ற
பூநாறு சோலை"

என மணிமேகலை கூறுவதும் நாம் கற்று உணரத்தக்கது.

மேலும், சித்திரைப் புத்தாண்டு பிறப்பதோடு தமிழர்தம் வாழ்விலும் புதுவாழ்வு பிறப்பதாக, ஒரு அசையாத நம்பிக்கை இருக்கின்றது. நல்லநாள் நேரம் பார்த்து கருமங்களை மீள ஆரம்பித்தல், பணம், பொருள் என்பவற்றை நல்லவர்களிடமிருந்து (கைவிஷேசம்)

பெறுதல் உறவினர் வீட்டுக்கு விருந்தினராகச் செல்லுதல் ஆகிய எல்லாக் கருமங்களிலும் மிக நுட்பமாக ஈடுபடுவார்கள். விருந்தினரை உபசரிப்பதில் புகழ்பெற்றவர்கள் நம் தமிழர்களே.

இனி, சித்திரைப் புத்தாண்டு தினத்திலே முற்றத்தில் நிறைகுடம் வைப்பதும் பொங்கல் பொங்குவதும் வழக்கமாகும். ஆலயங்களில் விஷேட பூசனையும் பொங்கலும் இடம்பெறும்.

இலங்கையில், தமிழர்களைப்போலவே பௌத்த மக்களும் சித்திரைப் புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். புத்தாண்டுக் கொண்டாட்டங்களும் பெரும்பாலும் தமிழரைப்போலவே நடைபெறுகின்றது எனலாம். சித்திரைப் பூரணை தமிழருக்கு மிகவும் சிறந்த தினமாக இருப்பதுபோல, ஆண்டின் எல்லாப் பூரணைகளும் தமிழருக்கும் பௌத்தர்களுக்கும் சிறப்புடைய தினங்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமை நாம் அறிந்ததே.

சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் அமையும் சித்திரா பூரணையில் கோவில்களில் சித்திரகுப்த விரதம் அனுட்டிப்பதோடு சித்திரைக் கஞ்சி காய்ச்சி அடியார்கள் உண்டு மகிழ்வார்கள்.

பிறவிகளில், நாம் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கேற்ப மறுபிறப்பு அமையும் என்பதால், இயமதர்மனின் கணக்கப் பிள்ளையாக இருந்து நமது நல்வினை தீவினைகளின் கணக்கை வைத்திருப்பவர் "சித்ரகுப்தன்" என்பது புராணக்கதை. அதனால் சித்ரகுப்தன் கதையைச் சித்திரைப் பூரணை தினத்தில் கோவில்களில் படிப்பார்கள்.

நமது ஆயுட்காலத்தை அறிந்து வைத்திருக்கும் இயமதர்மனுக்குக் "காலன்" என்றும் பெயர் உண்டு. இந்தக் காலனுக்குக் காலனாய் இருப்பவர் சிவன். சிவன் அன்பிற்குக் கட்டுப்பட்டவர். அன்பே சிவம். அதனால்தான் நாம் அன்பின் துணைகொண்டு சிவனைப் பற்றி நின்றால் இயமபயம் இல்லை என்கிறது சைவசித்தாந்தம்.

புராணங்கள்கூறும் மெய்யடியார்களெல்லாம் அன்பின்வழியில் இறைவனை அடைந்து இயமபயமகன்ற பிறப்பில்லா வாழ்வு பெற்றவர்களேயாவர்.

ஆனால், மார்க்கண்டேயரும் சாவித்திரியும் நேரடியாக இயமதர்மனோடு அறப்போர் செய்து வெற்றி பெற்றவர்கள். இயமனைப் பற்றிய எண்ணமே இன்றி முற்றும் சிவமே என அன்புவைத்து என்றும் பதினாறு வயதாக சிவனிடம் (காலகாலனிடம்) வரம்பெற்றவர் மார்க்கண்டேயர். இந்த மார்க்கம் **"காலவஞ்சனம்"** என்று சொல்லப்பெறுகிறது. நேராக இயமனை வந்தனை செய்து, இயமதர்மனிடம் பெற்ற வரத்தினால் இயமனை வென்றவர் சாவித்திரி. இதனை சாவித்திரி மார்க்கம் அல்லது **"காலவந்தனம்"** என்பர் மேலோர்.

ஆகவே, அன்பே சிவமாவதும் அறவினை அன்பின் வழியென்பதும் அறிந்து, இயமபயமின்றிச் சிவமயமாய் வாழ முயல்வோமாக.

முத்தமிழ்போல் முக்கடல்சூழ் குமரிமுனை வளரும்
உத்தமியே ஸ்ரீசக்கரந்தன்னில் உதித்தவளே
எத்தருணத்திலும் எனைப் பிரியாமல் எனக்கிரங்கிச்
சித்திரைத் திங்களில் வந்தருள் செய்வாய் சிவக்கொழுந்தே.

-அகத்தியர்-

உ

(தொடர்ச்சி...



# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள்

ஆறுபடை வீடுகளில் அருளைப் பொழியும் அருட்கடல், முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் செந்தமிழ்ப் பரமாசாரியனாம் செவ்வேட்பெருமான் அருளாலும், பொருளாலும், அறத்தாலும், ஏனைய திறத்தாலும் மங்காப் புகழுடன் விளங்குகின்ற திருச்செந்தூர்ப் பதியிலே, தாயாகித் தந்தையாகி எம்மையெல்லாம் தாங்கும் தயாபரன் நாம் உய்யும்பொருட்டு ஆடுகின்ற திருவிளையாடல்கள் தான் எத்தனை! எத்தனை!. இத்தலம் அலைக்கும் அலைகளின் அருகில் இருப்பதால் "அலைவாய்" எனப்பட்டது. மேலும், நீ செந்தில் வேலனை மறந்தால் அலைவாய், அலைவாய்!" என்று அறிவுறுத்துவது போலுமுள்ளது. அவனை நம்பினார் கெடுவதில்லை. புன்முறுவல் தவழும் ஆறு திருமுகமும், பன்னிரு திருக்கரங்களும் கொண்டு சுடர்ப்பிழம்பாகத் திகழும் இச் சுந்தரக்கடவுள் ஓர் அற்புதத் தெய்வம். இரண்டாவது படைவீடாகிய திருச்செந்தூரிலேதான் கலியுகவரதனாம் கந்தவேற்பெருமான் தேவசேனாதிபதியாகி, அசுரர் குலத்தை வென்று தேவேந்திரனுக்கு இராச்சியத்தை பெற்றுக் கொடுத்து எல்லோருக்கும் வாழ்வளித்தார். இன்றும் வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறார். நினைத்த மாத்திரத்திலேயே முத்தி அடைதற்குரிய இடம் முருகனின் திருச்செந்தூராகும். பிறவிப் பெருங்கடலுக்குத் துறைமுகம் திருச்செந்தூர். "எனது சரணமாகிய கப்பலில் ஊர்ந்தோரை நான் முத்திக் கரை சேர்ப்பேன்" எனக் கடற்கரையில் திருவடியாகிய ஓடத்துடன் இருக்கின்றான் முருகன்.

கோயிலைச் சுற்றி வேதங்களே பன்னீர் மரங்களாக முளைத்திருக்கின்றன. அவற்றின் இலை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மந்திர ஏடாகும். முருகனுக்கு அபிஷேகமாகும் திருநீற்றை அப்பன்னீர் இலையிலே வைத்து வணங்குபவர்க்கு எல்லாநோய்களும் நீங்கிவிடும். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் வள்ளல் பெருமான் இத்தலத்திலே எத்தனை அருள் ஆடல்களைப் புரிகின்றார். குன்ம நோயினால் பீடிக்கப்பட்ட விசுவாமித்திரர் திருச்செந்தூரின் இலைவிபூதியை அணிந்து மகிழ அவருடைய குன்ம நோயும் மாறுகிறது.

ஆதிசங்கரர் நோயின் வேதனை தாங்காது செந்தில் நாதனைப் பூஜித்து ஸ்ரீ சுப்ரமணிய புஜங்கஸ்தோத்திரம்பாடி நோய் நீங்கப் பெற்றார். பாண்டியன் மகளாகிய அங்க சுந்தரிக்கு குதிரைமுகத்தை மாற்றி மனித முகத்தை நல்கிய மகிமையுடையது. தெய்வீகக் கலைஞர் பகழிக்கூத்தர் சூலைநோயால் வருந்தி, வந்தாரை வாழவைக்கும் வள்ளல் பெருமான் கோயில் கொண்ட, ஒருகோடி முத்தம் தெள்ளித் தெளிக்கும் செந்தில்ப் பதிக்கு வருகிறார். அலைகடல் ஓரத்தில் அழகன் முருகனைக் கண்டு ஆனந்தப் பரவசமடைகிறார். வல்வினை தீர்த்தருளும் வேலவனின் அருட்கோலம் உள்ளத்தை

உருக்க, "திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ்" எழுகிறது. பொல்லாத சூலைநோய் நில்லாது செல்கிறது. "வா வா என்று உனைப்போற்றி பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால் வாராதிருக்க வழக்குண்டோ" என அடித்துக்கேட்கிறார்.

நாமும் அந்தச் சின்னஞ்சிறு பிள்ளையிடம் அசைக்கமுடியாத பக்திகொண்டு, தணியா வேட்கையுடன் முருகனைக் கூவி அழைத்தால் அவன் மயிலேறி நடமாடி காட்சி அளிப்பான்.

ஓராறு முகமாட ஈராறு புசமாட
ஓங்கு வடிவேலுமாட
உச்சிதக் குண்டலமும் கச்சித முடியாட
ஒளிவான சுட்டியாட
பாரான தண்டையும் பாதச்சிலம்பாடப்
பணிந்திடும் பக்தர் ஆட
பன்னிரு கரமாட பணிந்த பூஷணமாடப்
பவளவெண் குடைகள் ஆட
தோராத மயிலாடக் கோழித் துவசமாடத்
துலங்கு நீர் காவியாட
தொண்டர்கள் முதலான சண்டி கேஸ்வரராடத்
தொந்த நவவீரர் ஆட
தாராத தவமுனிவர் தானாட நீயாடித்
தமியனேன் முன்பு வருவாய்
தகதகென மயிலேறித் திருநடன மாடிவரும்
தணிகாசலக் கடவுளே

என் அப்பா வா, என் கண்ணே வா, என் ஆருயிரே வா, என் இன்அமுதேவா, தெவிட்டாத தேனே வா, கனியே வா, கனி ரசமே வா, கந்தனேவா, கடல்வண்ணன் மருகனே வா, கருணைப்புயலே வா, உமையவள் பெற்ற இலஞ்சியமே வா, குஞ்சர முதற் கிளைய கோவே வா, வா வா முருகையா என கண்கள் குளமாக, நெஞ்சம் நெக்குருகி கூவி அழைத்தால், அழைப்பவர் குரலுக்கு வருவான் சிங்காரவேலவன்.

இறைவன் செய்வனயாவும் விளையாடல் என்று சொல்கிறோம். அவன் குழந்தையாக நின்றால் நிச்சயமாக அவன் செய்வன விளையாட்டுக்கள் என்பது மனதில் உறுதியாகப்படும். தெய்வமே குழந்தையாக உருக்காட்டி, "என்னைப்பார், என் அழகைப் பார், என் வேலைப்பார், என் மயிலைப்பார்" என்று சொல்கிறது. அந்தத் தெய்வக் குழந்தையை மனத்திலே இணைத்துப் பழகி விளையாடக் கற்றுக்கொண்டால் இந்த வாழ்வே இன்பவாழ்வு ஆகிவிடும். மனம் தெய்வக் குழந்தையோடு ஒட்டிக்கொண்டால் எந்நாளும் இன்பத்தையே பெறலாம். இக லோகமே பரலோகமாகிவிடும். உள்ளத்தே முருகக் குழந்தை விளையாடினால் நாமும் அவனோடு குழந்தையாக விளையாடலாம். அவன் உருவைக் கண்டும், அவன் திரு நாமத்தைக் கூறியும், அவன் புகழைப் பாடியும். அவனுடைய கருணைச் செயல்களை உணர்ந்தும் அவனுடைய தத்துவத்தை தெளிந்தும் பழகினால் அவன் நம் உள்ளத்தில் விளையாட வருவான். அந்தத் தெய்வக்

குழந்தையுடன் உண் முகத்தே விளையாடியவர் அருணகிரிநாதர். அந்த விளையாட்டிலே எல்லாம் கடந்த தனி மோன இன்ப நிலை சித்திக்கிறது.

அடியார்க்கு முருகன் அருள்செய்யும் கோலம் அழகிய குழந்தைக்கோலம். தனது பக்தர்களுக்கு அருள்செய்யும்போது சின்னஞ் சிறு பாலகன் வடிவிலேயே வந்து ஆடல் புரிகிறான். உலக வாழ்விலே சிக்கி அல்லற்பட்டு ஆற்றாது துயருறும் உயிர்களுக்கு உதவி இடுக்கண் எல்லாம் பொடிபடுத்தி ஒப்பற்ற பேரின்ப நலத்தைத் தந்தருளுவான் முருகப்பெருமான். அவனைச் சேர்ந்துவிட்டால் துன்பமில்லை. கவலை இல்லை, சோகம் இல்லை, சோர்வு இல்லை. அப்போது அப்பெருமானுடைய அருள்நிலைகள், வெளிப்பாடுகள் நம் உள்ளத்தில் எழும். அவற்றின் எழுச்சியால் நம் உள்ளம் குதூகலிக்கும். பேசா அநுபூதி பிறக்கும். நம்மைக் காக்கும் கருணையாளன் அவனன்றி வேறு யார்? அவன் அருந்துணை, வருந்துணை, பெருந்துணை பூரண சரணாகதி நமக்கு வேண்டும். எல்லா வல்வினைகளையும் வேலின் காவலுக்குட்படுத்திவிட்டு, அந்தச் சிவபாலனின், வெற்றி வடிவேலனின் காவலிலே எல்லாவற்றையும் மறந்து, கவலைகள் நம்மை அணுகாதவாறு நிம்மதிபெற வேண்டும்.

திருச்செந்தூர் முருகனைச் சரணடைந்து "பிள்ளைத்தமிழ்" பாடிய பகழிக்கூத்தரின் வயிற்றுநோய் நீங்குகிறது. திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய பல நலன்களும் அமைந்தது. பக்திப் பெருக்கும் கேட்டார்ப் பிணிக்கும் தகைமையும் உடையது. இருந்தும் அரங்கேற்றவிழாவில் இருந்தோர் பகழிக்கூத்தருக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்யாது இருக்கிறார்கள். அதனை எதிர்பாராது வயிற்றுவலி தீர்த்த செந்தில் வேலவனின் திருவருளைப் பொருளாகக் கொண்டு பேரின்பப் பெருவாழ்வில் துயில் கொள்கிறார் பகழிக்கூத்தர். தமிழில் தன்னைப் பாடுவோர்க்கு வேண்டிய வரம் கொடுக்கும் திருவருளைப் பிறர்க்கு அறிவிக்கத் திருவுள்ளம் கொள்கிறான் சிவ குமாரன். தனது மார்பில் இருந்த மாணிக்கப் பதக்கத்தைக் கழற்றித் துயில்கொள்ளும் புலவரது மார்பில் அணிகின்றான். சுவாமியின் மார்பில் இருந்த மாணிக்கப்பதக்கம் மறைந்தமையைக்கண்டு மதிமயங்கி எங்கும் காணாது போகவே எல்லாரும் தடுமாறுகிறார்கள். பகழிக்கூத்தரின் மார்பில் பதக்கத்தைக் காண்கிறார்கள். திருச்செந்தூர்ச் செல்வனின் திருவருளை வியந்து, பகழிக்கூத்தரைப் பல்லக்கில் ஏற்றி அநேக விருதுகள் வழங்கி வாத்தியங்கள்சூழ ஊர்வலம் வருகிறார்கள். வயிற்றுவலியினால் சுழன்று துடித்த புலவர், "பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால் வாரா திருக்க வழக்குண்டோ?" என்று பாடிய பிள்ளைத்தமிழைக்கேட்டு, அவருக்கு இருந்த வயிற்றுவலியைப் போக்கிவிட்டு, மாணிக்கப் பதக்கத்தையும் அணிவித்து மகிழ்ந்திருக்கிறான் வள்ளல் முருகன்.

எம்மிடம் உள்ள வலிகளுக்கோ அளவில்லை. அத்தனை வலிகளையும் அவன் மந்திரமும், தந்திரமும் மருந்துமாகித் தீர்த்து அருளுவான். நல்ல வெற்றிப் பதக்கங்களை கந்தவேள் நமக்கும் அணியத்தந்து மகிழ்விப்பான். பாட்டுக்கு உருகும் சொக்கநாதனின் சுந்தரவேலனல்லவா அவன்! நாமும், "வரவர வேலாயுதனார் வருக, வருக வருக மயிலோன் வருக" என்று மனமுருகிப் பாடிப்பரவுவோம். இன்னும் செந்தில் நாதன் நிகழ்த்திய திருவிளையாடல்களைக் காண்போம்.

செந்தில் குமரனே செல்வக் கணபதிக் கிளையோனே
பிள்ளைப் பெருமாளெனும் பேராளனே
இரப் போர்க்கு இல்லையெனா தருளும் வள்ளல்பெருமானே
எந்நாளும் உனை மறவா வரமருள்வாய்

திக்கெல்லாம் வென்று திருச்செந்தில மர்ந்தவனே
தித்திக்கும் உன் நாமம் சொல்லி மகிழ்ந்திடுவேன்
சுப்பிரமணிய ஜோதியே செந்தூரின் சுந்தரா
மும்மல மகற்றி முத்தி தந்தருள்வாய்.

(தொடரும்...

# கண்ணோட்டம்

சுமார் எட்டு வருடங்களுக்குப் பின்பு சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வரும் பாக்கியம் கிட்டியது. ஆச்சிரம சுவாமிகளதும் தொண்டர்களதும் செயற்பாடுகளில் மெய்சிலிர்த்துப் போனேன். மோகனதாஸ் சுவாமிகளின் சிவபுராணம் எம்மையெல்லாம் மயிர்கூச்செறிய வைத்து விட்டது. எல்லாப் பிணிகளும் தீர்க்கும் நிலையமாக அது விளங்கி வருகின்றது. எவ்வித பாகுபாடுகளுமில்லை. அடியவர்கள் என்ற ரீதியில் எல்லோரும் சமமாக நேசிக்கப்படுகின்றார்கள். அங்கு இருக்கும் ஒழுங்கு முறையும், சுத்தமும் நேரத்தை மிக நிதானமாகக் கடைப் பிடிக்கும் பண்பும் எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டிய விடயமாகும். அன்னதானப் பணியோடு அங்கு சேவை நிறைவடைந்து விடுவதில்லை. சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சமூகத்திற்கு ஆற்றும் தொண்டை அங்கே நேரடியாகக் காணலாம். அங்கு வாராந்தம் நடைபெறும் சொற்பொழிவுகளை மக்கள் கேட்டுப் பயனடைய வேண்டும். சமூகத்திற்கு வேண்டிய அனைத்து நற்சிந்தனைகளும் அங்கே இலவசமாகக் கிடைக் கின்றன. பாலை வனத்தில் தாகத்தோடு அலைபவனுக்கு ஒரு குவளை நீரே அந்த நேரத்தில் கடவுள். ஏழைகளின் மகிழ்வில் இறை அன்பைக் காணும் ஆச்சிரமத்தின் நற்பணிகளுக்கு அனைவரும் கை கொடுத்து உதவ வேண்டும்.

-ஷாந்தன் சத்தியகீர்த்தி-
ஆசிரியர் "காந்தீயம்"

உ




**எஸ்.ரி. குமரன்** அவர்கள்

சமய நாகரீக வளர்ச்சியில் கலைகள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. கலை என்னும் சொல்லானது கலா என்னும் சொல்லில் இருந்து தோற்றம் பெற்றதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இதன் பொருள் "சதா வளர்தல்" என்பதாகும். ஆரம்பத்தில் வேலைப்பழுவினை இலகுபடுத்தவும் பொழுது போக்கிற்கும் உருவாக்கப்பட்ட கலைகள் கால ஓட்டத்தில் பல கருத்தம்சங்களை உள்வாங்கி சமய தத்துவ, நாகரிக வளர்ச்சிக்கு ஊற்றுக்காலாக அமைந்துள்ளது. இத்தகு கலைகளில் நாட்டியக் கலையும் ஒன்றாக விளங்குகின்றது.

## நாட்டியக்கலை

நுண்கலைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. நாட்டியம் என்னும் சொல்லானது நிருத் என்னும் வினையடியில் இருந்து தோற்றம் பெற்றது. நிருத், நிருத்திய, நாட்டிய என மருவியே நாட்டியம் என்னும் பதம் உருப்பெற்றது.

சாஸ்திரங்களானவை நாட்டியக் கலையின் நோக்கம் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை பெற்றுக்கொள்வதே ஆகும் என்கின்றன. மக்களை நல்வழிப்படுத்தி அவர்களை இம்மையிலும், மறுமையிலும் நன்மை அடையச் செய்தலே இக்கலையின் பிரதான கடனாகின்றது.

சிவன், பார்வதி ஆகியோரால் ஆடப்பட்ட நாட்டியக் கலை தண்டு முனிவருக்கு வெளிப்படுத்தப்பட தண்டு முனிவரால் பரதருக்கு வெளிப்படுத்தப்பட பரதரால் நாட்டிய சாஸ்திரத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது. ஆட்டவல்லானின் நாட்டியக் கலையானது பிரமாவினால் பரத முனிவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. சிவனின் தாண்டவமும், பார்பதியின் லாசியமும் பரத முனிவரின் மூலம் இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டு இன்றுவரை நிலைத்துள்ளது.

நாட்டியம் ஒரு கூட்டுக்கலை ஆகும். ஆடல், பாடல், இசை, வாத்தியம், நடிப்பு, ஒப்பனை என்பன இணைந்தது. மிகவும் பழமையான காலத்தில் இருந்தே தெய்வீகக் கலையாக விளங்கும் இக்கலைபற்றி நாட்டிய சாஸ்திரம் அபிநய தர்ப்பனம், தசரூபம், கூத்தநூல், பலராம பாரதா, சங்கீதரத்னாகரம் போன்ற நூல்கள் விளங்குகின்றன. பரத நாட்டிய சாஸ்திரம் எழுதப்பெற்ற காலத்தில் நடனக்கலை சமயநெறியில் ஓர் விழுமியக்கலையாக தோற்றம் பெற்றுவிட்டது எனக் கருதமுடிகின்றது.

## சிந்துவெளியில் நாட்டியக்கலை

மண், கல், வெண்கலம் போன்றவற்றிலான நடன உருவச் சிலைகள் பெறப்பட்டிருந்தன. மொஹஞ்சதாரோ மணல் மேட்டில் பெறப்பட்ட முழுமையற்ற சம்பநிற சுண்ணாம்பு சிலைபற்றி சேர் ஜோன் மார்ஷல் கூறும்போது அது நடராஜர் வடிவத்தின் முன்னோடி என்கிறார். ஒருவர் மேளம் அடிக்க சிலர் நடனமாடுவது போன்ற முத்திரையும் நேர்த்தியான வெண்கலத்திலான நடனமாதுவின் சிலையும் தொல்பொருள் ஆய்வில் கிடைக்கப்பெற்றுள்ளது.

## வேத உபநிடதங்களில் நாட்டியக்கலை

இந்திரன், மருத்துகன், அக்கினிதேவர், உஷை போன்ற தேவகால தெய்வங்கள் நாட்டியத்தில் வல்லுனர்களாக குறிக்கப்பட்டுள்ளது. வேதங்களில் நாட்டியத்தில் கைதேர்ந்தவர்களாகிய அப்சரஸ், அவர்களது கணவர்களாகிய காந்தர்வர்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றது. வேதகால வழிபாட்டின் வேள்விகளின்போது மக்களை மகிழ்விக்கவும் இறைவனை வழிபாடு செய்யவும் நாட்டியம் பயன்படுத்தப்பட்டது. உபநிடதங்களில் பழமையான சாந்தோக்கிய உபநிடதம் வைதீக கல்விகற்றோர் பயின்ற பாடங்களில் நுண்கலையும் ஒன்று என்கின்றது.

## இதிகாசத்தில் நாட்டியக்கலை

அர்ச்சுனன் நடனக்கலையில் தேர்ச்சி பெற்றதாக குறிப்பு உண்டு. இராஜசூய யாகத்தில் அந்தணரை மகிழ்விப்பதற்கு நடிகர்களும் நடனக்காரர்களும் நடனமாடி இருந்தனர்.

இராவணனது மனைவி இசை நடனத்தில் தேர்ச்சி பெற்றதாகவும் பரத்துவாசர் ஆச்சிரமத்தில் பரதனது சேனைகள் ஆடல் பாடலினால் மகிழ்விக்கப்பட்டதாகவும் தசரதனது அஸ்வமேத யாகத்திற்கு நடனமாதர்கள் அழைக்கப்பட்டமையும் இராவணனை இராமன் போரில் வென்றபின் ஊர்வசி, ரம்பை, மேனகை, பஞ்சசூடா திலோத்தமை போன்றோர் நடனமாடியமை பற்றியும் இராமாயணம் குறிப்பிடுகின்றது.

## மௌரியர் குப்தர் காலத்தில் நாட்டியக்கலை

கௌடில்யரது அர்த்த சாஸ்திரத்தில் நாட்டிய அரங்கம் பெண்களுக்கான அரங்கம், அரசாங்கம் நடனக் கலைஞர்களுக்கு ஆதரவளித்தமை போன்ற குறிப்புக்கள் உண்டு. புலத்திபத், பட்னா போன்ற இடங்களில் மௌரியர்காலத்தை சேர்ந்த மாதர்சிலைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. காஞ்சி உதயகிரி போன்ற இடங்களில் மனைவி கணவனை நாட்டியத்தின் ஊடாக மகிழ்ச்சியடையச் செய்தல், திருமகள் நடனம், நாகராஜனும் நாக கன்னிகளும் நடனமாடுதல் போன்ற சிற்ப ஓவியங்கள் பெறப்பட்டுள்ளன.

## சங்ககாலத்தில் நாட்டியக்கலை

சங்ககால மக்கள் உலகியல் இன்பங்களிலே வெற்றி கொள்வதற்காக கடவுளைவேண்டி குரவைக்கூத்து, குன்றக்குரவை, துணங்கைக்கூத்து, வேலன் வெறியாட்டு போன்றவற்றை ஆடியதாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் நூல்களில் கூறப்பட்டுள்ளது.

## சங்கமருவிய காலத்தில் நாட்டியக்கலை

சிலப்பதிகாரத்தில் மாதவியாடிய 11 ஆடல்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இக்காலத்தில் ஆடல்பாடல் அழகு ஆகிய மூன்றும் இணைந்த பெண்களுக்கு தலைக்கோலி என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டத்தை மாதவி பெற்றதாகக் கூறப்படுகின்றது. விழாக்களின்பொழுது நடனம் ஆடப்பட்ட குறிப்பை சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் காணலாம்.

## பல்லவர் காலத்தில் நாட்டியக்கலை

இங்கு நாட்டியக் கலையானது பக்திநெறியோடு தொடர்புபட்டு வளர்ச்சியுற்றிருந்தது. திருஞானசம்பந்தர் தனது பாடலில் "வலம் வந்த மடவார்கள் நடமாட....." என பாடியதன் ஊடாக அக்கால ஆலயங்களில் நடனமாதர் நடனமாடிய தன்மையினை அறியக்கூடியதாக உள்ளது. இராஜசிம்மனால் கட்டப்பட்ட காஞ்சி கைலாச நாதர் கோவிலில் சிவனது குஞ்சிதபாத நடனம், நந்தி நடனம், கணங்களின் நடனம் பொறிக்கப்பட்டுள்ளது. 1ம் மகேந்திரவர்மனால் கட்டப்பட்ட சிற்றன்னை வாசல் குகைக் கோவில்களில் நாட்டிய கரணங்களை விளக்கும் சிற்ப ஓவியம் காணப்பட்டன. 2ம் பரமேஸ்வரவர்மனால் கட்டப்பட்ட திருச்சி வைகுந்தப் பெருமான் கோவிலில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து நடனமாடும் நிலை பொறிக்கப்பட்டுள்ளது.

## சோழர் காலத்தில் நாட்டியக்கலை

இராஜராஜசோழன் நடனமகளீரை தஞ்சை பெருவுடையார் ஆலயத்தின் நான்கு திசைகளிலும் உள்ள சேரிகளிலே குடியமர்த்தி வீடு, காணி, பரிசில்கள், தலைக்கோலி போன்ற சிறப்புப் பட்டங்களை வழங்கி கௌரவித்தான். தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தில் 108 நாட்டியக் கரணங்களில் 81 கரணங்கள் வரிசைக்கிரமமாக அமைத்து ஏனைய 27 கரணங்களை அமைப்பதற்கு இடம் ஒதுக்கியிருந்தான். ஆலயங்களில் நாட்டிய அரங்கேற்றம் இடம்பெற்றுள்ளது. நிருத்த மண்டபம் ஆடல் அரங்கமாக விளங்கியது.

இக்காலத்தில் வாழ்ந்த நடனமாதர்கள் கணிகையர்கள் உருத்திர கணிகையர்கள், தேவதாசிகள், தேவர் அடியார்கள் போன்ற பல பெயர்களினால் அழைக்கப்பட்டனர். இவர்கள் ஆலயங்களிலே இறைசேவை புரிந்து வந்தனர்.

## ஆலயங்கள்மூலம் வளர்ந்த வளர்ச்சி

ஆலயங்கள் வளர்த்த அரிய கலையில் ஒன்றாக நடனக்கலை விளங்குகின்றது. அரச சபைகளிலும் வேறு இடங்களிலும் ஆடப்பட்டு வந்த நாட்டியக்கலை காலப்போக்கில் ஆலயங்களுடன் இணைந்து ஆலயங்களிலே பேணப்பட்டு வந்த கலையாக வளர்ந்திருப்பதனைக் காணலாம். ஆலயங்களில் முதன்மைப்படுத்தப்பட்டு ஆலயங்களின் ஊடாக வளர்ச்சியுற்றிருந்தது. நடனம் இறைவனுக்குரிய உபசாரங்களில் ஒன்றாக விளங்குகின்றது. ஆகமங்கள் ஆலய பூசைகளில் 15ஆவது பூசையாக நிருத்தியோபசாரத்தை குறிப்பிடுகின்றது. காமிக ஆகமம் கீதம், வாத்தியம், தோத்திரம் என்பவற்றோடு நிருத்தியோபசாரம் பற்றியும் கூறுகின்றது.

ஆலயங்களில் உற்சவங்கள் விழாக்களின்பொழுது நடனம் ஆடப்பட்டிருந்தது. கலிங்க தேசத்தில் உள்ள ஆலயங்களில் "நாடமந்திரம்" எனும் மண்டபங்கள் நாட்டியம் பயில்வதற்கு என்றே அமைக்கப்பட்டிருந்தன.

இறைவனிடம் தோன்றி வளர்ந்த இக்கலையானது ஆலய வழிபாட்டில் முக்கிய இடம்பெற்று இறைவனுக்கே அர்ப்பணம் ஆகும் கலையாக அமைந்துள்ள தன்மையினை அவதானிக்க முடிகின்றது.

# இருள் நீக்கி ஒளியூட்டும் சந்நிதி வேலன்

கலைமாமணி க. தெய்வேந்திரம் A.I.J.P

கருணை விழி ஒளியான கந்தவேள் பதிசந்நிதியாம்
காவடியாடி ஓடிவந்தேன் கலாபத்தில் வந்திடுவாய் முருகா
மேவுநின் மலர்ப்பாதம் மெய்யடியார் சார்வதென்றால்
மாயுமோ என்பாவம் நின்னருள்க்கரத்தால் ஓச்சிவிடு!

பாய்ந்து வரும் பல வினைகள் பாரினிலே கொஞ்சமல்ல!
படர்மணித் தண்டையும் சிலம்பும் பவக்கடல் மாய்த்திடவே
பாசமும் நேசமும் பற்றும் வேலாக பூவரச மரத்தடியில் நின்றபரனே
பூர்வீகக் கந்தாவுன் பொற்பதப் புனிதம் எங்குமொழியூட்டியதே

சேருமோ என் நாவோதும் செந்தமிழ்ப் பாமலரே வேலா!
சோர்விலாத் தாழ்வுநீக்கி சோதிகொள் ஞானமாக்கி
சொர்ணமே நின் பால்மேவும் சொப்பனம் காட்டிநீத்து
பானமில் அவுண மாந்தர் ஏற்றிடும் பழச்சுவையானாய் நித்தம்!

அன்பினர்க் கெளிது வந்துள்ள ஆதியாம் பரமன் சேயே
அன்புடையாகச் சீயத்தவிசன்மேல் களித்து நின்று ஆடி
துன்பகன் றிருபாலாகி துவன்றிடுமுள்ள மெல்லாம் ஓங்க
இன்பொடுபோக மாற்றி இனிதருள் ஞான மீவாய்வேலா!

ஆதியும் நடுவுமாகி அருவமும் உருவமானாயரனே
அருள் ஒளிவரவும் காட்டி இன்பமும் துன்பமும் காணா
~ஆலிலைப்பரனே
வேதமும் கடந்து நின்ற விமலனார் குமரா சந்நிதியானே யென்றும்
அண்ணலார்கதிர் காமர் நின்பால் நின்னையே சிறக்க வைத்த
~வேலகப்பெருமானே!

தகாத இடத்தில் காட்டும் தாராளம் தீமையாகி விடும்.

உ

# எது பக்தி?

**கு. நவரத்தினராஜா** அவர்கள்

ஸ்ரீமத் பகவத்கீதையிலே ராஜ வித்யா ராஜகுஹ்ய யோகத்தில் பகவான் கண்ணன் சொல்லுகிறான்

"யார் எனக்கு இலை, மலர், கனி, அல்லது நீரை பக்தியோடு படைக்கிறானோ,



அத் தூய மனத்தானது அன்பளிப்பை நான் (இன்புடன்) அருந்துகிறேன்" என்று கூறுகிறார்.

ஒரு பொருளின் விலை மதிப்புக்கு ஏற்றபடி அதைப் பெரிய சன்மானமாகக் கருதுதல் உலகத்தவர் இயல்பு. இந்திராதி தேவர்களது போக்கும் அத்தகையதே. ஆனால் லஷ்மி தேவியையே பணிப்பெண் ணாகவுடைய பகவானுடைய பண்பு வேறா னது. ஜகத்துக்கெல்லாம் நாதன் எனினும் தன்னில்தானே திருப்தியடைந்திருப்பவன் அவன். எப்பொருள்ளக்கொண்டும் அவனைப் பெறமுடியாது. நல்ல மனமுடையாரது பக்தி வலையொன்றில் மட்டும் அவன் படுகிறான். பக்திக்கு அறிகுறியாக இயற்கையில் எளிதில் அகப்படுகின்ற கனி, மலர், இலை, நீர் ஆகிய எதைப் படைத்தாலும் அவன் மகிழ்ச்சியோடு வாங்கிக் கொள்கிறான். விதுரர் வார்த்த கஞ்சியை அமிழ்தெனப் பாராட்டி அவர் அருந்தினார். சுதாமா என்று அழைக் கப்பட்ட குசேலர் கொண்டு வந்த அவலை அவர் வலிதிற் பிடுங்கி வாயில் போட்டுக் கொண்டார். சபரி கொடுத்த உயர்ந்த காய் கனிகள் இராமனுக்கு ஏற்புடையவாயின. கண்ணப்பனது உமிழ்நீரும் அவன் மென்ற மாமிசமும் சிவனாருக்கு ஒப்பற்ற நைவேத் தியமாயின. பக்தியானது பகவானுக்கு அவ்வளவு பெரியது.

"பக்திதான் இறைவனை அடையச் சிறந்த வழி" இதைப் புராணச் சிறுகதை ஒன்றின்மூலம் பார்ப்போம்.

காஞ்சி மன்னன் திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட நிலையில் திருமாலின்

விக்கிரகம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்தான். தினந்தோறும் திருமாலின் திருமேனி முழுதும் மிகச்சிறந்த முத்து, ரத்தினம், மாணிக்கங்களால் விதம் விதமாக அலங்கரித்து, விலை உயர்ந்த பட்டாடைகளையும் அணிவித்து வாசனை மிகுந்த மலர்மாலைகளையும் அணிவித்து வணங்கி வந்தான். விதம் விதமான உணவுகளையும் படைத்தான்.

இவ்வாறு செய்துவந்த மன்னனின் மனதில், "என்னைப்போல் இறைவனை வழிபடுவோர் எவருமில்லை" என்ற செருக்கு ஏற்பட்டது.

இந்நிலையில் ஒருநாள் காஞ்சி மன்னன் மாலைநேரம் உலாவச் சென்றான். அவன் வந்த வழியருகில் ஒரு பக்தன் மரத்தடியில் அமர்ந்து கண்களில் நீர்மல்க கடவுள் விக்கிரகத்துக்கு துளசிமாலை அணிவித்து, துளசி தளங்களை அர்ச்சித்துக் கொண்டிருந்தான். அரசன் அவனருகில் நின்று அவனைப் பார்த்து "இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று வினாவினான். மேலும் "நான் எவ்வளவு சிறப்பாக வழிபாடு நடத்துகிறேன் இறைவனுக்கு எவ்வளவு அணிகலன்களைப் பூட்டி சிறப்பான அன்னங்களை தினந்தோறும் படைத்து வருகிறேன். இவ்வளவு சிறப்பாக நான் இறைவனை வழிபடும்போது நீ வெறும் துளசி மாலையை மட்டும் அணிவித்து இறைவனை இழிவுபடுத்தி விட்டாயே" என்றான்.

அந்தப் பக்தனின் தூய்மையான மனதை சுக்குநூறாக உடைத்துவிட்டான் மன்னன். மன்னனின் செயலுக்கும் ஏழையின் எளிய பக்திக்கும் முடிச்சுப்போட முடியுமா? பகவானைத் துதிப்பதையே முக்கியமாகக் கொண்ட பக்தன் "அரசே! இறைவனைத் துதிப்பதற்கு தூயமனம் என்ற மலர் ஒன்றே போதும் அதைவிடச் சிறந்தது எதுவுமே இல்லை. பொன்னும் மணியும் ஆடம்பரமும் கொண்டு இறைவனை அளந்துவிட முடியாது, உண்மையான மனப்பூர்வமான பக்தியால் மட்டுமே இறைவனின் அருளைப் பெற முடியும். அத்தகைய உணர்வோடுதான் இறைவனை நான் வழிபட்டு வருகிறேன்" என்று கூறி, இறைவனை வழிபடத் தொடங்கினான்.

இதனைக் கண்ட மன்னன் கோபமடைந்தான். "இரவலனே! உன் பக்தியை நான் பார்த்து விடுகிறேன் ஆண்டவனை முதலில் நான் பார்க்கிறேனா அல்லது நீயா என்பதைப் பார்த்து விடுவோம்" என்று சூளுரைத்தான். ஆனால் அந்தத் தூய பக்தனோ எதையும் பொருட்படுத்தவில்லை. அரசனுக்கு அஞ்சவும் இல்லை. அரசன் ஆத்திரத்துடன் சென்றான்.

நாட்கள் நகர்ந்தன. ஒரு மகா முனிவரை வரவழைத்தான். பகவானைத் தரிசிக்க மாபெரும் யாகத்தைத் தொடங்கினான். நகரெங்கும் மன்னன் அலங்காரங்கள் செய்தான். தானங்களை ஏராளமானபேருக்கு வாரி வழங்கினான். மன்னன் மிகவும் "பக்திமான்" என்று கருதி அனைவரும் போற்றினர்.

ஏழை பக்தன் "சேத்திர சந்நியாசம்" என்ற ஒருவகைத் துறவை மேற்கொண்டான். அனந்தசயனத் தீர்த்தத்திலேயே தங்கி பகவானை ஆராதனை செய்து விரதம் உபவாசம் ஆகிய கடமைகளைச் செய்து வந்தான். அவன் ஒரு சபதத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். பகவானின் தரிசனம் கிடைக்கும்வரை காஞ்சி திரும்புவதில்லை என்று உறுதிபூண்டிருந்தான்.

பகலில் ஒருவேளை மட்டும் உணவு தயாரித்து பகவானுக்குப் படைத்து தானும் உண்டு வந்தான். ஒருநாள் வழக்கம்போல் உணவு தயாரித்து வைத்தான். பகவானுக்குப் படைத்த உணவைப் பார்த்தபோது உணவு பாத்திரத்தில் இல்லாதது கண்டு திடுக்கிட்டான். இதேபோல் சிலநாள்கள் தயாரிக்கப்பட்ட உணவு திருட்டுப்போய்க்கொண்டே இருந்தது.

மீண்டும் உணவு தயாரித்தான். இறைவனை வழிபடும் நேரம் குறைந்து போய்விடும் என்று எண்ணி பட்டினியாகவே வழிபாட்டில் ஈடுபட்டான். ஒருநாள் இந்த உணவுத் திருட்டைக் கண்டுபிடிக்க முடிவு செய்தான். எனவே உணவைத் தயாரித்து வைத்துவிட்டு மறைவிடத்திலிருந்து கவனிக்க ஆரம்பித்தான்.

அப்போது வறுமையில் மிகவும் வாடுபவன்போல் காட்சியளித்த ஒருவன் வந்து உணவை எடுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தான். இதனைக் கண்ட ஏழை பக்தன் மனம் அனலில் இட்டப்பட்ட மெழுகுபோல் உருகியது. அந்த வறியவன்மேல் இரக்கம் கொண்ட பக்தன் ஒரு பாத்திரத்தில் சிறிது நெய்யை எடுத்துக்கொண்டு அவன் பின்னால் ஓட ஆரம்பித்தான். பக்தன் தன்னைத் தொடர்ந்து வருவதைக் கண்ட வறியவன் பயந்துபோய் வேகமாக ஓட ஆரம்பித்தான். அவனால் ஓடமுடியாமல் கல் தடுக்கிக் கீழே விழுந்து விட்டான். பக்தன் அவன் அருகில் வந்து உதவி செய்து ஆசுவாசப்படுத்தினான். அவ்வளவுதான் வறியவன் இருந்த இடத்தில் சாட்சாத் திருமாலே சங்கு, சக்கரம், கதை, பீதாம்பரம் ஆகியவற்றோடு காட்சியளித்தார். திருமாலின் தரிசனம் கிடைத்த பக்தன் மெய்மறந்து நின்றான். பகவான் பக்தனுக்கு தரிசனம் தந்ததுடன் விமானத்தில் ஏற்றி அவரை வைகுண்டம் அனுப்பி வைத்தார். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். கந்தர்வர்கள் பாட தேவ கன்னியர் ஆடினர்.

ஏழை பக்தன் வைகுண்டத்திற்குப் புறப்பட்ட விமானம் காஞ்சி மன்னன் கண்ணில் பட்டது. விஷ்ணு யாகம் நடந்து கொண்டிருந்தது. திடீரென்று "பக்திதான் பகவானை அடையச் சிறந்தவழி" என்பது மன்னனுக்குப் புலனாயிற்று! உடனே யாகத்தை நிறுத்தச் சொன்னான். தனது அரச உடைகளைக் களைந்து வீசி எறிந்தான். பகவான் திருமாலை நினைத்துக் கண்ணீர் விட்டபடியே யாககுண்டத்தில் திடீரென்று பாய்ந்து விட்டான் உடனே திருமால் அவனுக்குக் காட்சியளித்து வைகுண்டம் அழைத்துச் சென்றார்.

## முழுமுதலே முருகப் பெருமானே!

தலைவிருட்சமாய் திகழ்கின்ற
திருவருள்மிகு பூவரசே சரணம்!
ஆலமிலையமுதாய் திகழ்கின்ற
திருவருள்மிகு அருமருந்தே சரணம்!
கோல வடிவழகாய் திகழ்கின்ற
திருவருள்மிகு மயில்வாகனமே சரணம்!
ஞால வொளியாய் திகழ்கின்ற
திருவருள்மிகு ஞானச்சுடரே சரணம்!
மூலவேலவரான முழுமுதலே முருகப்
பெருமானே சரணம் சரணம்
சந்நிதியனாய் திகழ்கின்ற திருவருள்
மிகு ஆற்றங் கரையானே சரணம்!

-இரா ஜெயமாலா-

உ

(தொடர்ச்சி...

# திருமூலரின் தமிழ் மந்திரம்

## தொடர்-45

**சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்** அவர்கள்

மனித உடல் அழிவுக்குரியது. ஆனால் உடம்பினுள்ளே நின்று இயங்கும் ஆன்மா அழிவற்றது என்றே இந்துசமயத் திருநூல்கள் அனைத்தும் கூறுகின்றன. ஆன்மா நீரில் நனைவதும் இல்லை, நெருப்பில் எரிவதும் இல்லை, வெயிலில் காய்வதும் இல்லை, குளிரில் நடுங்குவதும் இல்லை எனக் கீதையிலே கிருஷ்ண பரமாத்மா ஆன்மா பற்றி விளக்குகிறார்.

ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரான் தஞ்சமடி

என்றே தவத்திரு யோகர் சுவாமிகளும் பாடுகின்றார். காண்பது கண்ணல்ல கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆன்மா, பேசுவது நாக்கல்ல நாக்கைக் கருவியாகக் கொண்டு பேசுவது ஆன்மா என ஆன்மா பற்றி இந்திரனுக்கு பிரஜாபதி விளக்குவதை உபநிடதங்களிலே காணலாம்.

இந்த மனித உடம்புக்குள் அழிவற்ற நித்தியப் பொருளாக நிற்கிற ஆன்மாவும், விண்ணிலே நின்று கதிர் வீசுகின்ற சூரியனும், மண்ணுலகம் முழுவதும் பரந்துவீசுகின்ற காற்றும் எல்லாம் இறைவனே என்கிறார் திருமூலர். புலன்களின் வழியே நாம் அடையும் உணர்வு முழுவதும் இறைவனுடைய சக்தியே என்று பாடுகின்றார்.

உள்நின்று ஒளிரும் உலவாய் பிராணனும்
விண்நின்று இயங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்நின்று இயங்கும் வாயுவுமாய் நிற்கும்
கண் நின்று இயங்கும் கருத்தவன் தானே

சிவமூல மந்திரமாகிய ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரிப்பவர்கள் இகபர நலன்கள் அனைத்தையும் பெறுவர். தூய பஞ்சாட்சரமாகிய நமசிவாய மந்திரம் இம்மை வாழ்வின் சிறப்புக்கு உதவும். சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு கிடைப்பதற்குத் துணை செய்யும். சூக்கும பஞ்சாட்சரமாகிய சிவாயநம மந்திரம் ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டும். முக்தி காமிகள் உச்சரிக்கவேண்டிய மந்திரம் இதுவாகும். இம் மந்திரத்தை ஓதுபவர்களுக்குத் தகமை சிவஞான முத்தியும் பரகதியும் கிடைக்கும்.

சைவர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் நாளாந்தம் எண்ணுகின்ற அல்லது தியானம் செய்கின்ற எழுத்தாக நமசிவாய மந்திரமே இருத்தல் வேண்டும். சிவவாழ்வு வாழ்கின்றவர்கள், சிவகதியை என்றும் விரும்புகிறவர்களின் நெற்றியிலே திருநீறு என்றும் ஒளிவிட்டுப் பிரகாசித்தவண்ணம் காணப்படல் வேண்டும். "வாயே வாழ்த்து கண்டாய்" என்ற வாக்கிற்கு அமைய நா என்றும் இறைவன் புகழையே பாடித் துதித்தல் வேண்டும். இவ்வாறு அகப்புறக் கரணங்களையெல்லாம் இறைவன் பால் செலுத்திப் பரம்பொருளை அகக்கண் கொண்டு வழிபடச் சிவன் சீவனின் உள்ளே பொருந்தி விடுவான். சீவன் தன் இயல்புநிலை கெட்டுச் சிவநிலையை அடையும்.

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட" என மணிவாசகரும் இதனையே குறிப்பிடுகின்றார். உயிர்க்குயிரான சிவப்பேறு பேரின்பமே ஆகும்.

எண்ணும் எழுத்தும் இனம் செயல் அவ்வழிப்  
பண்ணும் திறனும் படைத்த பரமனைக்  
கண்ணில் கவரும் கருத்தில் அது இது  
உள் நின்று உருக்கி ஓர் ஆயமுமாமே

நமது புலன்களினாலோ அறிவினாலோ இறைவனைக் காண நினைப்பது ஒருவன் தனது தோளிலே தான் ஏறி நிற்பதைப் போன்றதாகும் என உபநிடதங்கள் கூறுகின்றன. நம்முடைய கண்ணுக்குப் புலனாகின்ற ஒரு பொருளைப்போல இறைவனைப் பார்க்க முடியாது. உள்ளத்தினுள்ளே உணர்வு மயமான அனுபவத்தில் கண்டு இன்புற வேண்டிய பொருள் இறைவன் என்கிறார் திருமூலர்.

"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்  
தேடித் தேடொனாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்"

என் அப்பர் பெருமானும்,

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்  
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்"

எனத் திருமூலரும் இறைவன் அனுபவத்தில் உணரவேண்டிய பொருள் என்பதைத் தெளிவாக விளக்குகின்றார்கள்.

தேனுக்குள் தித்திப்பு கறுப்பாக இருக்குமோ, சிவப்பாக இருக்குமோ என்று கண்ணினால் பார்க்கமுடியாது. தேனின் இனிப்புக்கு நிறம் ஏதும் இல்லை. வானத்தில் இறைவன் இருக்கிறான் என்று எண்ணுவது தேனின் தித்திப்புக்கு நிறத்தைத் தேடுவதை ஒக்கும் எனத் திருமூலர் கூறுகின்றார். தேனுக்குள் பரந்து நிற்கிற இனிப்பு என்ற சுவையைப்போல இந்த ஊனுக்குள் இறைவன் ஒளிந்து நிற்கிறான் எனத் திருமந்திரம் கூறுகிறது.

வானுக்குள் ஈசனைத் தேடும் மருளர்கள்  
தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ  
தேனுக்குள் இன்பம் சிறந்திருந்தாற்போல்  
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.

இறைவனின் சர்வ வியாபகம் பஞ்சபூதங்களிலும் வியாபித்துக் காணப்படுகிறது. வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி எனத் திருவாசகமும் இதனைக் குறிப்பிடுகிறது. நீர், நிலம், ஆகாயம் (விசும்பு), நெருப்பு (அங்கி), காற்று (மாருதம்) என உள்ள

ஐம்பூதங்களையும் தாங்கும் ஆதார நிலைக்களனாகவும் ஆன்மாக்களின் உள்ளத்துள்ளே ஒளிவிடும் சோதிச் சுடராகவும் இறைவன் விளங்குகின்றான். பரம்பொருள், பராபரன், பிஞ்ஞகன், இறைவன் எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகின்றான். எல்லாவற்றோடும் ஊறிக் கலந்து நிற்பவனாகிய இறைவன் எல்லையற்றவனாகவும் அழிவற்றவனாகவும் திகழ்கிறான். அணு சொரூபமாகிய இறைவன் எல்லாத் தத்துவங்களோடும் கூடி அழிவில்லாதவனாகத் திகழ்கிறான்.

நீரும் நிலனும் விசும்பங்கி மாருதந்
தூரும் உடம்புறு சோதியுமாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊருஞ் சகலன் உலப்பிலிதானே

தவமுனிவர் திருமூலர் தமது நூலின் முடிவில் குருநாதனாகிய நந்தியெம்பெருமானை வழிபடுகின்றார். பாடலின் ஒவ்வொரு அடியிலும் குருவின் திருவடிகளை வாழ்த்துகின்றார். என் சிவகுருநாதனாகிய நந்தியின் திருவடி வாழ்க, மலக்கட்டினை நீக்கியருளிய அவனது திருவடி வாழ்க, மலங்களை நீக்கியதோடு உண்மை ஞானத்தையும் அருளிய அவனது திருவடி வாழ்க, நின்மலனாகிய அவனது திருவடி வாழ்க எனக் குருவின் திருவடியை வாழ்த்தி வணங்குகின்றார்.

வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலம் அறுத்தான் பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத்தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலன் இலான் பாதமே

திருமூலர் தனது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தினை தனது குருநாதராகிய நந்தியெம்பெருமானை வாழ்த்தி வணங்குவதோடு பூர்த்தி செய்கின்றார். சைவத் தமிழர்களுக்கு கிடைத்த ஞானக் கருவூலமாகிய திருமந்திரத்தினைத் தந்த திருமூல தேவரைத் துதித்து வணங்கும் பாடல்கள் சிலவும் உண்டு. திருமூலரையும் திருமந்திரத்தையும் சிந்திப்பவர்களுக்கு பிறவிநோய் முற்றாக நீங்கிவிடும்.

"திருமூலதேவனையே சிந்தை செய்வார்க்கு
கருமூலம் இல்லையே காண்"

என்ற பாடல் இதனை விளக்குகிறது.

சந்தேகம் என்னும் பெருங்கடலுக்குள் மூழ்கித் துயர்ப்படும் மனிதருக்கெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல உண்மையை விளக்கிக்காட்டும் பாடல்களாகத் திருமூலரின் திருமந்திரம் காணப்படுகிறது. மனிதர்களின் சிற்றறிவில் ஏற்படும் மயக்கத்தினைத் தீர்த்து வைக்கின்ற ஞானக் களஞ்சியமாகிய திருமந்திரப்பாடல்களை நமக்குத் தந்த தவயோகி திருமூலதேவரை நாம் அனைவரும் தியானித்து வணங்குவோமாக.

ஐயமாக்கடல் ஆழ்ந்த உயிர்க்கெல்லாம்
கையில் அமலகம் எனக் காட்டுவான்
மையல் தீர்தரு மந்திரம் செப்பிய
செய்ய பொற்திரு மூலனைச் சிந்திப்பாம்

## நிறைவுரை

தமிழனுக்கென்று சொந்தமாகச் சமயமோ மெய்யியலோ இல்லை. இவன் எல்லாவற்றையும் மற்றவர்களிடம் கடன்வாங்கித்தான் காலத்தைத் தள்ளுகிறான் என்று கருதுகிறவர்களின் கருத்துக்கு ஆப்பு வைக்கும் நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய சைவ சித்தாந்தம் என்ற தமிழ்ச் சைவ மெய்யியற் கொள்கைக்கு மையம் வழங்கி வரம்பு கற்பித்த முதல் நூலாகத் திருமந்திரம் காணப்படுகிறது. அரச மரமாகிய போதிமரத்தின் கீழிருந்து புத்தர் மட்டும் ஞானம் பெறவில்லை. திருமூலராகிய சித்தரும் திருவாவடுதுறையில் போதிமரத்தின் கீழிருந்துதான் ஞானத்தினைப் பெற்றார். ஞானிகளின் வாயில் இருந்து வரும் வார்த்தைகளில் தெளிவு இருக்கும். சொற்சிக்கனம் காணப்படும். தேவையற்ற வார்த்தை அலங்காரங்கள் எதுவும் இருக்காது. வார்த்தைகள் அனைத்தும் மந்திர சொரூபமாகவே காணப்படும். இதனால்தான் திருமுறை வரிசையிலே திருமூலரின் பாடல்கள் மந்திரம் என அழைக்கப்படுகிறது.

திருமந்திரப் பாடல்களில் வாழ்வியற் கருத்துக்கள் நிறைய உண்டு. சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் பலவற்றைத் திருமூலர் கூறியுள்ளார். மெய்யுணர்வாளர்கள் சட்டத்தையும் அதிகாரத்தையும் முன்வைத்துச் சமூகத்தைச் சீர்திருத்த முயலவில்லை. இறைவனை முன்வைத்துச் சீர்திருத்த முயன்றார்கள். இதனால் தங்களுடைய செயற்பாடுகளில் வெற்றியும் கண்டார்கள்.

சமயச் சடங்குகள் பக்திக்கும் ஆன்ம விடுதலைக்கும் வழிகாட்டல் வேண்டும் என்பதைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது. கிரியைகள், சடங்குகள் பக்தி என்ற பெரு வழியின் வாயிலாக ஆன்மாவை முத்திக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்பதே திருமூலரின் சிந்தனையாகும்.

மானிடப்பிறவியை எடுத்த மனிதன் அற விழுமியங்களைப் பேணி வாழுதல் வேண்டும் என்பதையும் உடலின் கருவி கரணங்களை அறநெறி பிசகாது பயன்படுத்துதல் வேண்டும் என்பதையும் திருமந்திரம் வலியுறுத்துகிறது. உயிரின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கருவியாக உடலை ஆசைக்குரியதாகக் கருதாமல் பூசைக்குரியதாகக் கருதல் வேண்டும் என்பது திருமூலரின் சிந்தனையாகும். அறத்தைப் பேணுவது இன்றியமையாதது போலவே உடலைப் பேணுவதற்கு அறத்தைப் பேணுவது இன்றியமையாததாகும். அறம் பேணலும் உடல் பேணலும் ஒன்றையொன்று சார்ந்தவை ஆகும். அறத்துக்கு உடல் ஆதாரமாக அமைவதுபோல உடலுக்கு அறம் ஆதாரமாக அமைகிறது எனத் திருமந்திரம் கூறுகிறது.

அனுபவ ஞானத் திருநூலாக அமைந்துள்ள திருமந்திரம் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் அமைந்துள்ள பெரு நூலாகும். யோகம், வைத்தியம், வாழ்வியல், தத்துவம் அறிவியல் ஆகிய அனைத்தையும் விளக்கும் அறிவுக் களஞ்சியமாகவும் திருமந்திரம் திகழ்கிறது.

திருமந்திரம் சிவநெறித் தந்தையாகிய திருமூலர் வழங்கிய கலைப் பெரும் பொக்கிஷம். கற்பன கற்று நிற்குநெறி நிற்கப் பழக்கிப் பயிற்றுவிப்பது திருமந்திரம். ஆன்மீக நெறியில் நிற்கும் மக்களுக்கு திசை காட்டும் மெய்ஞ்ஞான இறைபோதமாகத் திருமந்திரம் திகழ்கிறது. சித்தத்தின் உள்ளே சிவனைக் காண வழிகாட்டியவர் பாவச்சுமை மானிடப் பிறவி என்ற கருத்தை நீக்கி "உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம்" என நிறுவியவர், "ஒன்றே

குலம் ஒருவனே தேவன்" என்ற ஆன்ம நேயத்தினைப் பாடியவர், ஈசன் அருள் பெற்றுவிட்டால் விதியையும், வினையையும் வெல்லலாம் என்ற துணிவைத் தந்த வீரபுருஷர், புலனடக்கம் உடையவனே மேன்மையான முத்தியை அடையத் தகுதி உடையவன் எனக் கூறிய ஞானச்செல்வர், ஆகிய திருமூலர் அருளிய திருமந்திரம் சைவத் தமிழ் மக்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய ஒப்பற்ற நூலாகும். நாம் அனைவரும் பிறவிப் பயனை அடையத் தவயோகியாகிய திருமூலதேவரைச் சிந்தை செய்து தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தைப் படித்துப் பயனைப் பெறுவோமாக. (முற்றும்)

# நீ வரத் தாமதித்தால் என் கண்ணீர் கால்வாயாகப் பெருகும்

நாதயோகியாம், ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் இதய சாம்ராஜ்ஜியத்தில், இராமபிரான் விரும்பி வாசம் செய்த காரணத்தினால், ஆயிரக்கணக்கான இசை உருப்படிகளைச் சுவாமிகள் எமக்கருளியுள்ளார். அருளிய உருப்படிகள் யாவும், ஸ்ரீராமபிரானையும், சீதா பிராட்டியாரையும், ஸ்ரீமத் நாராயண இலட்சுமி கடாட்ச வியாபகத்தையும், அற்புதங்களையும் விளம்புவதாக- மட்டுமல்லாமல், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும், அதற்கு என்ன செய்யவேண்டுமென்றும், இராமபிரானை நோக்கிய வேண்டுதல்களாகவும் அமைந்துள்ளன.


"மந்தரகிரியைத் தாங்கியவனே! சூரியகுல அதிபனே! இராகவனே! உன் பரிவாரங்களுடன் வைகுண்டத்தில் இருந்துகொண்டு என்னை மறந்தால் நான் என்ன செய்வேன்? நான் நினைக்கும்போது வேகமாக வருவேன் என்று எனக்கு ஆணையிட்டுச் சொல்லு. அப்படி நீ வரத் தாமதித்தால் என் கண்ணீர் கால்வாயாகப் பெருகும்" என்று- அந்துண்டகனே வேகவச்சே- எனும் பந்துவராளி இராக உருப்படியில் ஆன்ம தெய்வீக பலத்தை உலகத்தவர்களுக்கு அந்நியோன்யப்படுத்தியுள்ளார். நம்மிடம் உள்ள தட்டுப்பாடு அதுவேயாகும்.

சிவபிரானின் நண்பரான ஸ்ரீமத் நாராயணனுடைய தத்துவத்தைப் புவியில் கேட்கும் பாக்கியம் பெற்றவர்களுக்குச் சர்வகாலமும் ஜெயமே உண்டாகும் என அறுதியிட்டுக்கூறும் 'நாரதமுனி வெடலின' எனும் தெலுங்குக் கீர்த்தனை, சௌபாக்கியம் தரும் பந்துவராளி இராகத்தில் வல்லமை பெறுகிறது. சுவாமிகளின் ஐந்நூற்றுக்குமேற்பட்ட உருப்படிகள் திராட்சைப்பழம் போன்ற சுவையுடையதாய், என்றுமே வாழ்வளித்துக்கொண்டு இருக்கின்றன. சிறப்பாக நாட்டை, கௌளை; ஆரபி, ஸ்ரீராகம், வராளி ஆகிய கன இராகங்களில் அமைந்த பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் பாடுந்தோறும் சீதாராமா பேரின்பத்தையும், வேண்டும் வரங்களையும் அள்ளித் தருவனவாக அமைந்துள்ளன.

இராகத்தின் சாராம்சங்களை உருக்கி, வார்த்த உருப்படிகள் வாயிலாக ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் "சிவ- நாராயண- இராம- சீதா- இலட்சுமண- பரமானந்த- தெய்வீக" வாழ்வினை எமக்கு மிகவும் நெருக்கமாகத் தானமாக்கியுள்ளார். ஆனகாரணத்தினால் இறைவனிடம் உருகியழைத்தால் ஓடி வருவான் அல்லவா! அல்லாவிடின் எமது கண்ணீரானது தாமதிக்காது இறைவனை வரவழைத்தே தீரும். இப்போது இறைவன் மனித உருவிலேதான் நடமாடுகிறான்! அதனை உணர்வோமாக.

**-கே.எஸ். சிவஞானராஜா-**

உ




-காஞ்சிப்பெரியவர்-




அறிவியல், டெக்னாலஜி, மருத்துவம், பொறியியல், எல்லாம் மேல்நாட்டிலிருந்துதான் இந்தியாவுக்கு வந்திருக்கிறது என்று சிலர் சொல்வது உண்டு. இதுவே உண்மை என்று நம்மவர்களும், நம்பி, “ஏதோ கண்ணுக்குத் தெரியாத கடவுளையும், ஆத்மாவையும் பற்றித்தான், ஹிந்து சாஸ்திரங்கள் இருக்கின்றன. லோக வாழ்க்கைக்கு உபயோகமாக அவற்றில் ஒன்றும் இல்லை” என்று கண்டனம் செய்வதுமுண்டு.

உண்மையில் நம்முடைய சாஸ்திரங்களில் இல்லாத (science) விஞ்ஞானம் எதுவுமே இல்லை. நமது புராதன சாஸ்திரங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், இந்த உண்மை தெரியும். ஆயுர்வேதத்தை உருவாக்கிய- சரகர், சுச்ருதர் முதலானவர்களின் கிரந்தங்களைப் பார்த்தால், இப்போதைய பெரிய டாக்டர்களும் அதிசயிக்கும் படியான மருத்துவ முறைகளையும், ஸர்ஜரி விஷயங்களையும் அதில் தெரிந்து கொள்கிறோம்.

காயங்களைக் குணப்படுத்தும் மூலிகைகள், சிகிச்சைமுறை, முதலியவற்றைப்பற்றி இவற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் இப்பொழுதும் ரொம்பவும் உபயோகமாக இருப்பதாகச் சமீபத்தில், காசி- சர்வகலா சாலையில், ஒருவர் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்.

என்ஜினியரிங் டெக்னாலஜியிலும், ஆதியிலேயே அபாரமான திறமையை நம்மவர்கள் காட்டியிருக்கிறார்கள். போஜராஜன் செய்த “ஸமராங்கண சூத்திரத்தில்” ஆகாய விமானம் உள்பட, பலவிதமான மிஷின்களைச் செய்வதற்கான அடிப்படைத் தத்துவங்கள் விவரிக்கப்பட்டிருக்கிறது.

சுமார் இரண்டாயிரம் வருஷங்களாக ஓர் இரும்பு ஸ்தம்பம், இன்றைக்கும் தில்லி குதுப்மினாருக்கு பக்கத்தில், துருப்பிடிக்காமல் இருக்கிறது. டாடா தொழிற்சாலை இல்லாமலே, இப்படிப்பட்ட பெரிய தூணை எந்த உலையில் (Furnace) அடித்து உருவாக்கினார்கள்? என்று ஆச்சரியப்படும்படி இருக்கிறது.

தமிழ்நாட்டிலே, இப்படிப் பல நூற்றாண்டுகள் முன் கட்டப்பட்ட கல்லணை, எந்தக் கலவையால் கட்டப்பட்டது என்று இன்றும் புரியவில்லை. ஆவுடையார் கோயில் கொடுங்கையில், பாறாங்கல்லை ஒரு காகிதத்தின் அளவுக்கு, மெல்லியதாக இழைத்திருக்கிறார்கள். திருவீழிமிழலை 'வௌவால் ஒட்டி மண்டப'த்தின் பிரம்மாண்டமான வளைவை எந்த ஆதாரத்தில் கட்டியிருக்கிறார்கள்? என்று என்ஜினியரிங் நிபுணர்களும் வியக்கிறார்கள்.

வான நூலில் நமக்கு இருந்த பாண்டித்யத்தால்தான், எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக, இன்று அமாவாசை, இன்று கிரகணம் என்று கொஞ்சம்கூடத் தப்பாமல், பஞ்சாங்கம் கணிக்க முடிகிறது.

அறுபத்திநான்கிற்கு மேற்பட்ட கலைகளும், சாஸ்திரங்களும், அறிவியலும், பாரத தேசத்தில் புராதன காலம் முதலே தோன்றி நன்றாக வளர்ந்து வந்திருக்கின்றன.

இப்போது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளால் அணுகுண்டு போன்ற எத்தனையோ அனர்த்தங்கள் உண்டாகியிருப்பதைப் பார்க்கிறோமல்லவா? இப்படி நேரக்கூடாது என்பதாலேயே, பக்குவமானவர்களுக்கு மட்டும், நம் தேசத்தில் விஞ்ஞான நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்தார்கள். சாதாரண ஜனங்களுக்குப் புரியாத பரிபாஷையில், இந்த சாஸ்திரங்கள் அமைந்திருப்பதற்கு இதுவே காரணம்.

இப்போது நிபுணர்கள் ஆராய்ச்சி செய்தால், நமது சாஸ்திரங்களிலிருந்து, பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியும். சில சமாச்சாரங்கள் நமக்குப் புரியாமல் இருக்கும். அதற்காக அவற்றை ஒதுக்கிவிடக் கூடாது. நமக்குப் பின்னால் வருபவர்களுக்காவது அது புரியக்கூடும் என்பதால், நமக்குப் புரிகிற சாஸ்திரங்கள், புரியாத சாஸ்திரங்கள், எல்லாவற்றையும் நாம் காப்பாற்றி, அடுத்த தலைமுறையினருக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

நாம் ஆதியில் நமக்கென்றே இருந்த இந்த மகிமை வாய்ந்த சம்பவத்தை மறந்துவிட்டு, மற்றவர்களிடமிருந்து இப்போது கற்றுக்கொள்கிறோம். இதில் ஒரு முக்கியமான வித்தியாசம்; இந்த வித்தைகள் யாவும் பிரம்மவித்தை என்கிற ஆத்ம சிரேயஸுக்கு அனுசரணையாகவே நம் தேசத்தில் வைக்கப்பட்டிருந்தன. வெறும் லௌகிக சௌக்கியத் துக்காகவே அவற்றை உபயோகப்படுத்தினார்கள்.

மேல் நாடுகள் உண்டாக்கியிருக்கிற நாகரீகத்திலும், விஞ்ஞானத்திலும் ஆத்ம சாந்தி அடியோடு போய்விட்டது. இதைமேல் நாட்டுக்காரர்கள் நன்றாக உணர்ந்திருக் கிறார்கள். விஞ்ஞானத்தின்மூலம் படிப்படியாக நாகரிகத்தில் முன்னேறி, இப்போது அவர்கள் அதில் உச்ச நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஆனாலும் எதிலும் அவர்களுக்கு ஆத்ம திருப்தி இல்லை.

இதனால் அவர்கள் தங்கள் நாட்டைவிட்டு, நம் நாட்டிற்கு வந்து, நமது தேசத்தின் வைதீக, தார்மீக, ஆன்மீக விஷயங்களைத் தெரிந்துகொள்ள முயல்கிறார்கள். ஆனால், நாம் நம்முடைய லௌகிக வித்தை, ஆத்ம வித்தை இரண்டையும் அலட்சியம் செய்துவிட்டு, மற்ற நாட்டவர்கள் அடைந்திருக்கிற இரண்டுங்கெட்டான் நாகரிகத்தை தேடி ஓடுகிறோம்.

அவர்கள் இரும்பு யுகத்திலிருந்து (iron age) தங்க யுகத்துக்கு (golden age)- அதாவது, இருட்டு யுகத்திலிருந்து, பிரகாச யுகத்துக்கு- வந்துகொண்டிருக்கிறார்கள்.

நாமோ பிரகாச யுகத்திலிருந்து, இருட்டு யுகத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறோம்! குறைவிலிருந்து அவர்கள் நிறைவுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றால், நாமோ நிறைவிலிருந்து குறைவுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். இன்னும் சில காலத்தில் இது மாறும். இதை மாற்ற வேண்டும். நமது இளைய சமுதாயம் அடுத்த நூற்றாண்டில் நமது புண்ணிய பாரதத்தின், வேத சாஸ்திர இதிகாச புராணத்தில் காணப்படும் விஞ்ஞான உண்மைகளை ஆராய்ந்து, உலகோரைக் கவர வேண்டும். உலகுக்கு வழிகாட்ட வேண்டும். அதனால் உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவ வேண்டும்.

நன்றி: "ஞானபூமி 2000"

# சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை - 18

-இராமையா தேவதாசன்-



### பல்லவி

அள்ளியருள் எனக்குத் தாராயோ? – முருகா!
துள்ளியலை புரளும் தொண்டைமா னாற்றுவாசா!

### அநுபல்லவி

வள்ளிகுஞ்சரி நாதா! வடிவேல் முருகேசா!
தெள்ளுதமிழ் கேட்டுன் திருவுள மிரங்கியே

### சரணம்

அள்ளுகாசு போட்டுக் குழந்தையை விற்றுவாங்கி
துள்ளிடு கிழவிக்குத் தூயவுன் பால்பருக்கி
பிள்ளைக்கு மொட்டைபோட்டு தென்னம் பிள்ளைகொடுத்து
உள்ளுறு அன்போடு உனைத்தொழு அருள்வேலா!

துள்ளியே வெறியாடி துடியொடு பறைமுழங்க
உள்ளிருந் துருவேறி உருவிற்சந் நதமாடி
தெள்ளிய உளத்தோடு தெய்வத்தன்மை நாடி
வள்ளல் விபூதிதன்னை வாயிலிட் டடக்குவேலா (அள்ளி)




# யாழ்ப்பாணத்தில் சிறப்பான முருகன் ஆலயங்கள்

**ஜூ. சிவலிங்கம்** அவர்கள்

இலங்கையில் வடபுலம் யாழ்ப்பாணம் முருகவழிபாட்டின் உறைவிடமாக அமைந்துள்ளது. இங்குள்ள எண்ணற்ற அருள்சுரக்கும் திருக்கோயில்களிற் பல முருகன் ஆலயங்கள் இருந்தபோதும் அதியற்புதமான ஒரு சில முருகன் ஆலயங்கள் உலகெங்கும் பரந்து வாழும் எம்மினத்தவரின் சிந்தையிற் பதிந்துள்ளது.

## நல்லைக்கந்தன்:

முற்காலத்தில் யாழ் மண்ணில் அரசாண்ட தமிழ் மன்னர்களின் தலைநகராகவும், இன்று யாழ் மாநகரசபையினரால் நெறிப்படுத்தப்படும் புனிதபூமியாகவும் உள்ள நல்லூரில் உறைந்து அருளாட்சி செய்யும் நல்லைக்கந்தன் ஆலயம் சிறப்புடையது. இடம், பொருள், ஏவல் யாவும் துணைசெய்கிறது. இத்திருத்தலத்தை வழிநடத்தும் அறங்காவலரின் தூய சிந்தனையில் தோன்றும் புத்தம்புதிய எழில் வடிவமும், முருகன் அருளும் இங்கு பிரகாசிக்கின்றன. வருடம் முழுவதும் நல்லைக் குமரனுக்கு விசேட அலங்கார தினமாகும். உற்சவகாலம் மேலும் சிறப்பானவை. முருகன் வீதியுலா வரும்போது ஆடைகள், அணிகள், நவமணிகளின் பிரகாசமும், முருகனின் அழகான அருட்பொலிவும், பக்திவயலில் உலாவரும் அற்புதமான ஊர்திகளின் எழிலான கவர்ச்சிமிகு தோற்றமும் நாளுக்குநாள் வேறுபட்டே காணப்படும் மாற்றங்களின் கவர்ச்சியும் முருகனின் கருணையின் புகழை வியக்கவைக்கிறது.




தம்மை நாடிவரும் பக்தர்களுக்கெல்லாம் அருள்சுரக்கும் ஞானசுரபி, அலங்காரக் கந்தன், நல்லூர்ப் பெருந் திருப்பதியில் ஊன்றி நிற்கும் அருட்சக்திவேல் இன்று எமது மன அமைதியைத் தருவது எம்மினத்தவரின் இடையறாத பக்தியின் பேறாகும்.

வெற்றி எண்ணத்தைப் பொறுத்தது.

## மாவைக் கந்தன்:

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரத்தில் அமைந்திருக்கும் மாவைக்கந்தன் ஆலயமும் அருட்சிறப்புடையது. இப்பதியின் சூழல் செம்மண்ணின் பெருமையில் பல வளங்களும் நிறைந்துள்ளன. முக்கனிகளையும் வாரிவழங்கும் நறுங்கனிச்சோலைகளாகக் காணப்படுகின்றன. இக் கனிச் சோலைகளில் பழச்சாறு பெருக்கெடுக்கிறது. வண்டினங்களுடன் தேனீக்களும் தேடிச் சேர்க்கும் (முருகனுக்குகந்த) நறுந்தேனும் ஆங்காங்கே மரங் களில் பொதிகளாக காட்சிதருகின்றன. இவ்வரிய சூழலின் ஒருபால் செந்தினையும் செங்கரும்பும் நன்று விளைந்திருக்கும். இப்புனித மண்ணின் வளத் தால் போதியளவு புல் போன்ற தீவனத்தை உப யோகிக்கும் பட்டிப் பசுக்கள் எங்கும் மிகுந்து முரு கனுக்கெல்லாம் பால் சுரக்கின்றன. இவ்வியற்கைச் சூழல் அனுபவிக்கும் எம்மக்கள் தமது முதற் கடமையாக அழகன் முத்தமிழ்க் கந்தனுக்குத் தமது இதயபூர்வமான அர்ப்பணிப்பை அளிக்க முன்வருகின்றனர்.




இயற்கையாகவே பால் சுரக்கிறது. பழங்கள் கனிந்திருக்கின்றன. போதிய செவ்விளநீர் குலை குலையாகத் தொங்குகின்றன. நறுந்தேன் சொரிகின்றது. செங்கரும்பும் விளைந்து கருப்பஞ்சாற்றைப் பெருகத் தயார் நிலையில் உள்ளன. செந்தினையும் பருவகாலத்திற்கேற்ப விளைந்து வீடுகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வரிய அரும்பொருட்களாற் தமது பக்திமேலிட மாவைக் கந்தனுக்கு தினமும் அபிஷேகஞ் செய்து அகமகிழ்கின்ற பக்திமிகு அடியார்கள் முருகன் புகழ்பாடி மகிழும்போது செந்தினை மாவும் புனிதமான நறுந்தேனும் கொண்டு செந்தமிழ்க் கந்தனுக்கு மாவிளக்கேற்றி மனம் நெக்குருகி வழிபடுகின்றனர்.

இதனால் நல்ல பக்தி வயலில் உலாவந்து தமது இல்லக விளக்கேற்றிப் போற்றுகின்றனர். இடையறாத அபிஷேகத்தை பெருவிருப்புடன் அகங்குளிர அனுபவிக்கும் மாவைக்கந்தன் அபிஷேகக் கந்தனென்றே போற்றப்படுகிறார். (ஆனால் பல்வேறு காரணங்களால் யாவும் செயலற்றுவிட்டன.)

## சந்நிதி முருகன்:

வடமராட்சியின் ஏகப் பெரு நிலப்பரப்பில் நடமாடிய சித்தர்களும், முனிவர்களும், அருளாளர்களும் தவநெறி பேணி உலா வந்து அமர்ந்து முருகனை வழிபட்ட இடம் செல்வச்சந்நிதி வேலவனின் உறைவிடமானது. இங்கு முருகன் அருள்மழை சுரக்கிறது. மக்கள் இறையருள் பருகவேண்டித் தூர இடங்களிலிருந்து அணி அணியாக இங்கே ஓடோடி வந்து சந்நிதி முருகனை வணங்கி முருகன் அருள்பெற்று மன அமைதி பெறுகின்றனர்.

பக்தர்களின் உள்ளப் பசியை நீக்கிய கந்தன் தம் பக்தர்களின் உடற்பசியைப் போக்கவென்று தமது சூழலில் எண்ணற்ற அன்னதான அறச்சாலைகளைத் தோற்றுவித்து அருள் புரிந்தார். மக்களும் தம் பசி போக்கினர். காலப்போக்கில் அறச்சாலைகள் அருகிய போதும் சந்நிதியான் ஆச்சிரமம் என்னும் புனித அறநிலையம் முருகன் அருளால் தோற்றுவிக்கப் பட்டது. இப்பணியை அறப்பணிக்கென்றே தம்மை அர்ப்பணித்த மோகனதாஸ் சுவாமிகள் இருபது வருடங்களுக்கு முன் ஆரம்பித்தார். உணவுப் பற்றாக்குறை இருந்த காலத்தில் மிகக் கொடிய துன்பங்களுக்கு மத்தியில் இப்பணியை மேற்கொண்டார். துவிச்சக்கர வண்டி மூலம் யாழ் கடலேரியைத் தாண்டி வன்னிப் பெருநிலப்பரப்பை அடைந்து நெல் எடுத்துவந்து அன்னதானப் பணியை மேற்கொண்டார். இவ்வாறு பல இன்னல்களிடையே அன்னதானப்பணி தொடரவும், சந்நிதியானின் திருவருள் கைகூடவும் உள்ளூர் வெளியூர்ப் பெருமக்கள் தாராளமாக நிதி வழங்கியதால் தேவைக்கேற்ப மண்டபங்கள் அமைக்கவும், வாராந்த அன்னதானப் பணியை நித்திய பணியாகத் தொடரவும் இறையருள் உதவியது.



இன்றைய நிலையில் நித்திய அன்னதானப் பணி மாலை வரையும் அடியார்களின் தேவைக்கேற்ப வழங்குவது முருகனின் அற்புதமே. சந்நிதி முருகனை உள்ளன்போடு வழிபட வருவோருக்குத் திவ்விய மருந்தாக இறைவனின் அமுதாக சைவாசார முறைப்படி தயாரித்த பல்வேறு கறிவகைகளுடன் நிறைவான நல்ல சத்துணவு வழங்கப்படுகிறது. இவ்வகை அன்னதானத்தை வாரிவழங்க வகைசெய்த அன்னதானக் கந்தனின் பெருமை பாரெல்லாம் பரவி வருகிறது.

முருகனின் அருளால் நித்திய அன்னதானப் பணியின் பேரில் தமிழர் வாழும் எல்லாப் பிற நாடுகளிலிருந்தும் சந்நிதி முருகன் அடியார்களின் வசதி கருதி அனுப்பப்படும் நிதிக்குவியல் அளவற்றது. முருகனின் கருணையால் எஞ்சிய பணம் சமய, சமூகப் பணிகள் பலவற்றை நிவர்த்தி செய்யவும் அறப்பணி மேலோங்கவும், நாடெங்கும் ஆன்மீக சிந்தனை மேலோங்கவும், அன்னதானக் கந்தன் அருளும் புகழும் பாரறிந்த விடயமாகவே அமைந்துள்ளமை முருக வழிபாட்டில் சிறப்பாகும்.

முருகனின் தெய்வீக அலை எம்மண்மீது வீசி யாவரையும் புனிதமாக்குகிறது. இப்புனிதமான புண்ணிய பூமியின் பெருமையை நன்குணர்ந்த பாமர மக்களும் தம் அயலில் முருக வழிபாட்டை உள்ளன்போடு பேணிச் செயற்படுகின்றனர். இதற்கமைவாக மக்களின் பக்தியுணர்வும், பெரியோர்களின் உற்சாகமான வழிகாட்டலும், இயற்கைச் சூழலும் உதவ யாவும் நல்லபடியே சிறப்புடன் அமைகிறது.

(தொடரும்....

உ

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய

# கந்தரநுபூதி



-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

2. உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ
எல்லாமற என்னை இழந்தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

## பதவுரை

முருகா- முருகப்பெருமானே, சுர பூ பதியே- விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவரே! உல்லாச- இன்பமுடையவரும், நிர் ஆகுல- துன்பம் இல்லாதவரும், யோக- சிவயோக மூர்த்தியும், இத- இனிமையாகப் பேசுகின்றவரும், சல்லாப- மகிழ்ச்சியைத் தருகின்றவரும், விநோதனும்- அருள் விளையாடல்களைப் புரிபவரும், நீ அலையோ- தேவரீரல்லவோ? ஆதலினால், எல்லாம் அற- புறப்பற்றுக்கள் யாவும் அற்றுப் போகவும், என்னை இழந்த நலம்- யான் என்ற அனப்பற்றும் அற்றுப் போகவும், அதனால் எய்தும் பேரின்ப நலத்தை, சொல்லாய்- அடியேனுக்கு உபதேசித்தருளுவீராக.

## பொழிப்புரை

முருகப்பெருமானே! பொன்னுலகிற்கும், பூவுலகிற்கும் தலைவரே! இன்பமுடையவரும், துன்பம் இல்லாதவரும், சிவயோக மூர்த்தியும், இனிமையாகப் பேசுகின்றவரும், மகிழ்ச்சியைத் தருகின்றவரும், அருள் விளையாடல்களைப் புரிகின்றவரும் நீரேயாதலால், அடியேனுக்கு, எனது யான் என்ற புறப்பற்று அகப்பற்றுக்கள் நீங்க அதனால் உண்டாகும் பேரின்ப நலத்தை உபதேசித்தருள்வீராக.

## விரிவுரை

**உல்லாச:-**

உல்லாசம்- இன்பம். சூராதியவுணர்களை வதைத்த பின் முருகவேள் தெய்வயானையம்மையை மணந்து, உயிர்கட்கு இன்பத்தை தரும் பொருட்டு திருப்பரங்குன்றத்தில் அமர்ந்த அருள் திறத்தைக் குறிக்கின்றது.

**நிராகுல:-**

ஆகுலம்- துன்பம். நிராகுலம்- துன்பம் இல்லாமை. கடல் அலைகள் சதா வந்து கரையில் மோதுவது துன்ப அலைகளைக் குறிக்கும். இது செந்திலம்பதியைக் குறிக்கும்.

பிறவிப் பெருங்கடலில் தோன்றும் துன்ப அலைகள் அப்பெருமானுடைய திருவடியில் வந்து ஓய்ந்து அமைதி பெறுகின்றன. இன்பத்தைத் தந்து துன்பத்தைத் துடைக்கின்ற மூர்த்தி.

**யோக:-**

ஞானத்தண்டினை யூன்றித் துறவுக்கோலத்துடன் பழநியில் எம்பெருமான் சிவயோக தயாபரனாக நிற்கின்ற அருட்கோலத்தை இது குறிக்கின்றது.

**இத:-**

திருவேரகத்தில் எந்தை கந்தவேள் குருபரனாக இருந்து தந்தைக்கு ஞான உபதேசத்தை இதமாக உரைத்த அருள் திறத்தை இது குறிக்கின்றது.

**சல்லாப:-**

குன்றுதோறாடிய குருபரன் திருத்தணிகையில் இச்சாசக்தியாகிய வள்ளிபிராட்டியைத் திருமணம் புரிந்து எல்லா ஆன்மாக்களுக்கும் மகிழ்ச்சியை வழங்குகின்ற வள்ளன்மையைக் குறிக்கின்றது.

**விநோதனும் நீ:-**

பழமுதிர்ச்சோலையில் ஞான தயாபரனாக வேதாகமங்களுடன் விளையாடி அருள்புரியும் ஞானத்திறத்தை இது குறிக்கின்றது.

எனவே, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணிகை, பழமுதிர்சோலை என்ற ஆறுபடை வீடுகளில், ஆறுமுகப்பெருமான் புரியும் அருள் திறங்களை இந்த ஆறு சொற்கள் குறிக்கின்றன.

"வேதாகம ஞான வினோத மனோதீதா" -கந்தரநுபூதி

**முருகா:-**

இச்சொல்லுக்கு அழகு, இளமை, தெய்வத் தன்மை, ஞான மணம், மகிழ்ச்சி, இனிமை என்ற ஆறு பொருள்கள் உண்டு.

"முருகு கள் இளமை நாற்றம் முருகவேள் விழா வனப்பாம்" -நிகண்டு

**எல்லாமற என்னையிழந்த நலம்:-**

வானில், மண்ணில், மனைவி மக்களில், நில புலங்களில், பொன் பொருள்களில் வைக்கும், புறப்பற்றும், யான் என்ற அகப்பற்றும் அறவே அற்ற இடத்தில் பேரின்ப நலம் சித்திக்கும். முதலில் புறப்பற்றும் முடிவில் அகப்பற்றும் நீங்கும்.

"வானத்தில் மண்ணில் பெண்ணில்
மைந்தரில் பொருளில் ஆசை
தானற்றுத் த்னையும் அற்ற தத்துவம் உணர்ந்த யோகர்"
-பரஞ்சோதி முனிவர்

யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் -திருவள்ளுவர்

**இழந்த நலம்:-**

இழப்பதில் நலம் விளைகின்றது என்ற அரிய உபதேசத்தை ஆழமாகச் சிந்தியுங்கள்.

ஒரு பெண் உற்றார், பெற்றார், நண்பர், பழகிய பொருள் அத்தனையையும் துறந்து கணவனைத் தனிமையான இனிமையில் சந்தித்து நலம் பெறுகிறாள்.

அதேபோல ஆன்மா, தன் ஆன்ம நாயகனாகிய கந்தவேளை நாடி, அகம், புறம் என்ற எல்லாப் பற்றுக்களையும் வேருடன் களைந்து, அப்பெருமானுடன் அத்துவிதமாக ஒன்றுபட்டுப் பேரின்ப நலத்தைப் பெறுதல் வேண்டும்.

**சொல்லாய்:-**

'அந்த அருள் நலத்தைப் பெறும் உபதேச மொழியை அடியேனுக்கு உபதேசித்தருள்' என்று அடிகளார் குருபரனை வேண்டுகின்றார்.

அப்படியருளுகின்ற அப்பரம நாயகனை மேலேயுள்ள இரண்டு அடிகளில், "உல்லாசனும் நீ, நிராகுலனும் நீ, யோகனும் நீ, இதனும் நீ, சல்லாபனும் நீ, வினோதனும் நீ" என்று கூறியருளினார்.

"ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்" என்றதையும் இங்கு உன்னுக.

**சுரபூபதியே:-**

சுரபதியே! பூபதியே என பிரித்துப்பொருள் கொள்க.

தேவலோக பதியென்றதனால் பரலோக இன்பத்தையும்; பூபதியென்றதனால், இகலோக இன்பத்தையும் எனவே இகபர நலன்களை, அருள வல்லான் முருகன் எனத் தெளிக.

## கருத்துரை

ஆறுபடை வீட்டிலமர்ந்த முருகா! பற்றற்ற நிலையில் விளையும் பேரின்ப நலத்தை அடியேற்கு உபதேசித்தருள்.

(தொடரும்...

## வைகாசி மற்றும் ஆனிமாத குருபூசை தினங்கள்

**20.05.2011 வைகாசி 6 வெள்ளி**

திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை
திருஞானசம்பந்தர் குருபூசை

**06.06.2011 வைகாசி 23 திங்கள்**

சேக்கிழார் குருபூசை
நமிநந்தியடிகள் குருபூசை

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விஷேட தினங்கள்

**வைகாசி**

**04.05.2011 சித்திரை 21 புதன்**

கார்த்திகை விரத தினம்
பகல் விஷேட உற்சவம்

**17.05.2011 வைகாசி 3 செவ்வாய்**

வைகாசி விசாகம்
விஷேட உற்சவம்

**31.05.2011 வைகாசி 17 செவ்வாய்**

கார்த்திகை விரத தினம்
பகல் விஷேட உற்சவம்

உ

(தொடர்ச்சி...

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்


| | | | |
|---|---|---|---|
| ஜெயேந்திரன் செகலோபன் | | சுவிஸ்லாந்து | 5000. 00 |
| வேல்முருகன் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஜெயப்பிரகாஷ் | நவாலிறோட் | ஆனைக்கோட்டை | 5000. 00 |
| ஜெகதீஸ்வரன் மகிராம் | | புத்தூர் | 5000. 00 |
| இளையப்பு அப்பாக்குட்டி (இராசம்மா குடும்பம்) | விளையாட்டரங்கு | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| திரு கண்ணன் | | ஆவரங்கால் | 2000. 00 |
| S. மனோகரன் | | பருத்தித்துறை (சுவிஸ்) | 14000. 00 |
| M. கஜேந்திரன் | மாயவன் புடவையகம் | நெல்லியடி | 1மூடை அரிசி |
| S. சிவநாதன் | | கொழும்பு-6 | 5000. 00 |
| திரு சந்திரதாஸ் | | தொண்டைமானாறு | 2000. 00 |
| கந்தசாமி கஜேந்திரகுமார் | | இடைக்காடு | 5000. 00 |
| ஐ. கணேசநாதன் | | அளவெட்டி | 6500. 00 |
| பேரின்பநாயகம் | | கொழும்பு-6 | 5000. 00 |
| நடேசமூர்த்தி பிரசாத் | | அச்சுவேலி | 6000. 00 |
| நடராஜா நகுலாம்பிகை | | அச்சுவேலி | 5000. 00 |
| வ. சடகோபன் | | நோர்வே | 3000. 00 |
| திவாகர் துவாரகன் | | மானிப்பாய் | 2000. 00 |
| S. முருகுப்பிள்ளை | | லண்டன் | 20 பவுண்ஸ் |
| தியாகலிங்கம் திருக்குமரன் | | மட்டக்களப்பு | 5000. 00 |
| கைலாயநாதன் Dr கணேஸ்குமார் குடும்பம் | | | 3000. 00 |
| தி. துஷிதா | | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| திருமதி மகேஸ்வரி இராஜரட்ணம் | | தாவடி | 3200. 00 |
| த. கண்மணிதேவி | | சங்கானை | 3மூடை அரிசி சாமான் |
| திருமதி கமலா விவேகானந்தராசா | | கனடா | 5000. 00 |
| க. கந்தசாமி | | வடலியடைப்பு | 1000. 00 |
| சிவனேசன் வாசுகி (கு. தாஸன்) | | லண்டன் (கந்தசஷ்டி காலம்) | 35000. 00 |
| இரத்தினம் தவராசா | | குப்பிளான் 1மூடை அரிசி | 2000. 00 |
| நாகலிங்கம் சபாரத்தினம் | | மயிலிட்டி | 3000. 00 |
| ச. வைத்தியநாதக் குருக்கள் | | பொலிகண்டி | 1000. 00 |

| | | | |
|---|---|---|---|
| Dr. சண்முகப்பிரியா | | பொலிகண்டி | 1000. 00 |
| திரு சுஜித்கண்ணா | | கனடா | 5000. 00 |
| தேவகி அருமைச்சந்திரன் | ஆத்தியடி | பருத்தித்துறை | 2000. 00 |
| செல்வி த. அம்பாலிகா | | மானிப்பாய் | 1000. 00 |
| யோகரமணன் திலகரட்ணம் | | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| யோகசாந்தினி லோகேஸ்வரன் | | லண்டன் | 5000. 00 |
| இ. தவமணி | வசந்தகிரி | கரணவாய் | 2000. 00 |
| பார்வதி ராமநாதன் | | கரணவாய் மத்தி (கனடா) | 10000. 00 |
| விசுவலிங்கம் சரவணன் | | இன்பர்சிட்டி | 10000. 00 |
| ந. இராகுலன் | | சிறுப்பிட்டி | 1000. 00 |
| அ. துரைசாமி ஐயர் | | மாவிட்டபுரம் | 10000. 00 |
| சண்முகநாதன் தமயந்தி | | புத்தூர் மேற்கு (பிரான்ஸ்) | 10000. 00 |
| கணபதி பவித்திரா | | காரைநகர் | 5000. 00 |
| சி. ஸ்ரீ ஆனந்தபாபு | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| கந்தையா ஏகாம்பரம் | பத்தமேனி | அச்சுவேலி | 5000. 00 |
| இராம ஜெயபாலன் | | | 1000. 00 |
| பு. கதிரித்தம்பி | | இடைக்காடு | 5000. 00 |
| திரு நவரத்தினம் குடும்பம் | | வசந்தகிரி | 1000. 00 |
| ம. துவாரகா | | குப்பிளான் | 10000. 00 |
| சண்முகசுந்தரம் கோபிராம் | | புலோலி வடமேற்கு | 1000. 00 |
| தி. ரவீந்திரநாதன் கலைமதி | | கட்டைப்பிராய் | 5000. 00 |
| T. சிவாஜி | | குடத்தனை | 1500. 00 |
| செ. சூரியகுமார் | | இன்பர்சிட்டி | 1000. 00 |
| கௌரி சிவபாலகன் | | அவுஸ்திரேலியா | 12000. 00 |
| அனுஷியா மாதவன் | | லண்டன் | 18500. 00 |
| இரத்தினசிங்கம் இரத்தினகுமார் | | ஏழாலை | 5000. 00 |
| கி. கிஷோபன் | பத்தமேனி | அச்சுவேலி | 5000. 00 |
| Dr. குகதாசன் குடும்பம் | | கோண்டாவில் | 10000. 00 |
| திருமதி வல்லவைசக்தி மகேந்திரன் | | கொழும்பு | 1000. 00 |
| திரு கந்தவனம் | | கனடா | 100 டொலர் |
| ச. ஆறுமுகநாவலன் | துர்க்காபுரம் | தெல்லிப்பளை | 2000. 00 |
| அ. இன்பராணி | | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| பொ. சிவராஜா | (C.T.B) | வளலாய் | 1000. 00 |
| சண்முகதர்ஷன் சங்கீதா | | சங்கானை | 5000. 00 |
| செல்வமோகன் பாலமனோகரி (கந்தப்புமூலம்) | | தோப்பு அச்சுவேலி | 5000. 00 |
| பரஞ்சோதிமூலம் S. கிருபானந்தன் | | சுவிஸ் | 20000. 00 |
| மோகன் கடை | ஆவரங்கால் | 4மூடை அரிசி, 2புட்டி மா, 1புட்டி பருப்பு | |

(தொடரும்...

உ

# படங்கள் தரும் பதிவுகள்



கடந்தவருட ஞானச்சுடர் வாசகர் போட்டிக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு





ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூகப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டியினையும், முன்பள்ளி மாணவர்களுக்கான புத்தகப்பைகளும் வழங்கும் நிகழ்வு.



உ

# அல்லல் கடலைக் கடக்க

**செல்வி பா. வேலுப்பிள்ளை** *அவர்கள்*

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று

இவை ஔவையார் சொன்னவை. இவற்றை சற்று விரிவாக,

"கற்றதனால் ஆய பயன் வாலறிவன் நற்றாள் தொழு"

"மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்" என வள்ளுவர் குறள் செய்துள்ளார். "உலகத்துக்குக் கருத்தா யார்? அவர் எங்கே இருக்கிறார்? எப்படிப்பட்டவர்?" என வினாவும் விடையுமாக நாவலர் ஐயா பாடம் நடாத்துகிறார். பாடம் விரிவடைந்து,

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுதற் பொருட்டேயாம்" என முடிக்கிறார். இவை யாவும் நன்னெறியில் வாழ்வதற்குரிய ஆரம்பப் பாடங்கள்.

இன்று நவீன விஞ்ஞான உலகில் இந்தப் பாடங்கள் நினைவில் வருவதில்லை. 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' உல்லாச வாழ்வு, நண்பர் கூட்டம், களியாட்டங்கள், தொலைக்காட்சி ஒருபுறம்; அழுக்காறு, அவா, வெகுளி கொண்டு கொலை, கொள்ளை, களவு, வழிப்பறி மறுபுறம். அதனால் நல்ல காரியங்கள் செய்ய மறந்து விடுகிறோம். நமக்கு மேலாக ஒரு பொருள் உண்டு எனும் கடவுள் சிந்தனை எள்ளவும் இல்லை. நான் ஆர்? என் உள்ளம் யார்? இந்த உடம்பு எப்படி வந்தது? எப்போ அழியும்? இளமை ஒருநாள் மாறும்; முதுமை வந்தடையும். கண் பார்வை குறையும். காது மந்தமடையும்; கைகால்கள் சோரும், நடை தளரும் என்ற எண்ணம் தோன்றும்போதுதான் பிற உதவி தேவைப்படும். இறை சிந்தனை தோன்றும். பிறவிப்பயனை அடைய நல்லன செய்யவில்லையே, "வாழ்த்தவாயும், நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை மறந்துவிட்டேனே" என்ற நினைவும் வரும். எமன் வரப்போகிறான். மரணம் நிச்சயம். இந்நாள்வரை மாடு, மக்கள், மனை சுற்றம்தான் பெரிதென வாழ்ந்தேன். வாஞ்சையோடு பணம் பொருள் தேடினேன். யாவற்றையும் விட்டுப்போகப்போகிறேன். அறிவு உதயமாகிறது. அப்போதுதான் கடவுளைத் தேடவேண்டும் என்ற அவா உதயமாகின்றது. அருளாளர்களின் சிந்தனை என்ன சொல்கிறது?

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாது

சூழ்கின்றாய் கேடுனக்கு சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் அவலக் கடலாய வெள்ளத்தே”

இறைவனை வணங்காது காலத்தை வீணாக்கி உனக்கே துன்பத்தைத் தேடுகிறாய். அதோ பார் பச்சைப் பசிய தோகையை விரித்தாடும் மயில்மீது வள்ளி தெய்வயானையோடு காணும் முருகனைப் பார்.

“முழுமதி அன்ன ஆறுமுகங்கள்
முன்னான்கு (பன்னிரு) அருள் சொரியும் கண்கள்
அழகிய கரம் ஈராறு, அவைகளின் கைகளில் உள்ள வேல்
வாள், அங்குசம், குலிசம் ஆகிய படைக்கலங்கள்
அணிமணித் தாண்டைச் சிற்றடி” தெரிகிறதேயென அருணகிரியார் கூற,

“ஆறுமுகமும் அணிமுடி ஆறும், நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும் பன்னிரு கண்ணும், பவளச் செவ்வாயும்..... என்று தொடங்கி திருவடியதனில் சிலம்பு ஒலி” என பாலன் தேவராஜன் வர்ணிக்கிறான். அந்த அழகினை மனக்கண்ணில் பார். என்னேரமும் இக்காட்சியை மனதில் தியானி. கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தஷஷ்டி கவசங்களைப் பாராயணம் செய். சூலாயுதம் கொண்டு யமதூதர் வருவார்கள், தொடர்ந்து பாசக்கயிறுடன் வருவான். அஞ்ச வேண்டாம். “விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்பாதங்கள், மெய்ம்மை குன்றா மொழிக்குத்துணை முருகா எனும் நாமம் முன்பு செய்த பழிக்குத் துணை அவன் பன்னிருதோள்கள், பயந்த தனி வழிக்குத் துணை செங்கோடன் மயூரம் (மயில்) முருகன் கைவேல் ‘அஞ்சாதே’ என அபயம் அளிக்கும்.

“முருகா” என்று அழை இருமுறை வருவான்
“கந்தா” என்று அழை வந்த வினையும் வரும் வினையும் அழியும்
“வேலா” என்று அழை வல்வினைகள் அழியும்.

## கடலில் ராமர் கட்டிய பாலம்

இலங்கைக்கு சீதையை மீட்க வானரப் படைகளுடன் சென்ற ராமர், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள கடல்பரப்பில் பாறைகள்போட்டு பாலம் அமைத்தார். அந்தப் பாறைகள் எல்லாம் மிதந்தன. அதன் வழியாக வானரப்படைகள் இலங்கைக்குச் சென்று போரிட்டன. ராவணன் வதம் செய்யப்பட்டான். சீதை மீட்கப்பட்டாள் என்பது வரலாறு.

பாறைகள் எப்படி தண்ணீரில் மிதக்கும்? என்று சிலர் கேள்வி எழுப்பினாலும், ராமேஸ்வரத்திற்குச் சென்றால் பாறைகள் தண்ணீரில் மிதப்பதை நீங்கள் பார்க்கலாம். இந்தப் பாறைகளுக்குள் நிறையக் காற்றறைகள் இருப்பதால் அவை நீருக்குள் மூழ்காமல் மிதக்கின்றன.

ராமேஸ்வரத்தில் உள்ள துளசி பாபா மடத்தில் இந்தப் பாறைகளை இப்போதும் தண்ணீரில் மிதக்கவிட்டுள்ளார்கள். நீங்கள் நேரில் சென்றால், பாறைகள் தண்ணீரில் மிதக்கும் அதிசயத்தை உங்கள் கண்குளிரப் பார்க்கலாம்.

மேலும், பூரி ஜெகநாதர் கோவில், துவாரகா கிருஷ்ணர் கோவில் மற்றும் ரிஷிகேஷ், பத்ரிநாத், திரிவேணி சங்கமம் போன்ற இடங்களிலும் இந்த மிதக்கும் பாறைகளை காண முடிகிறது. வட நாட்டுக்கு சாதுகள் ராமேஸ்வரம் வந்தபோது எடுத்துச்சென்றவைதான் அவை.

உ

(தொடர்ச்சி...



# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
யாழ்ப்பாணம் - காரைநகர்

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவு
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள வழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்று
ஈண்டு கனக மிசையப் பெறாஅது
ஆண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்

## பதவுரை:

சாந்தம் புத்தூர். சாந்தம்புத்தூர் என்னும் திருப்பதியில், தர்ப்பணம் அதனில்- கண்ணாடியில் வழிபட, வில் பொரு வேடற்கு- வில்லினாற் பொருகின்ற வேடன் ஒருவனுக்கு, ஈந்த விளைவும்- அத்தர்ப்பணத்தினின்றும் வெளிப்பட்டு அவன் வேண்டியதொன்றைக் கொடுத்தருளிய பயனும்.

தர்ப்பணம்- கண்ணாடி. இதனை, "புளக மத்த மாடி படி மக்கல, மொளிவட்டங் கஞ்சனை தருப்பணங் கண்ணாடி" என்னும் பிங்கலந்தை யானுமறிக. சாந்தம் புத்தூர் என்னும் இடத்திலே வேடனொருவன் கண்ணாடியில் இறைவன் திருவுருவமைத்து வழிபாடாற்ற அவ்வழிபாட்டினை இறைவன் ஏற்று அக்கண்ணாடியினின்று வெளிப்பட்டு அவன் விரும்பிய வரத்தைக் கொடுத்தருளினன் என ஒரு வரலாறு ஈண்டுக் கூறப்பட்டுள்ளது. இதனை ஒப்ப, ஏகலைவன் என்னும் வேடன் துரோணச்சாரியரின் வடிவத்தினைத் தான் இருக்கும் இடத்தில் அமைத்து வழிபட்டு அவ்வடிவின் முன்னின்று விற்றொழில் பயின்று அர்ச்சுனனிலும் சிறந்த வில் வீரனாக விளங்கினன் என்னும் பாரத சரித்திரம் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

விளைவு- பயன், "விளைவின்றுண், வீயா விழுமந் தரும்" (குறள் 282) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. ஈந்த விளைவும் என்பதை விளைவு ஈந்ததும் என மாற்றிக் கூட்டி வழிபாட்டின் பயனை ஈந்தருளியதும் எனவும் உரைக்கலாம்.

பொறுமை சாலிகளின் கோபத்திற்கும் பயப்படுங்கள்.

மொக்கணி அருளிய- கொள்ளுப் பையைக் குதிரை வாயிற் கட்டியருளிய, முழுதழல்மேனி- முழுமையாகிய நெருப்பை யொத்த திருமேனியை, சொக்கதாக காட்டிய தொன்மையும்- அழகியதாகப் பாண்டியற்குக் காட்டிய பழைய தன்மையும்.

மொக்கணி- குதிரைக்குக் கொள்ளு முதலிய உணவுகளை இட்டு வாயிற் கட்டும் பை. "கழுவிய பயறுங் கொள்ளுங் கடலையுந் துவரையோடு, முழுவதுஞ் சிறக்க விட்டே மொக்கணி முட்டக் கட்டி" (நம்பி திருவிளை, குதிரை நரியான 6) என வருதலுங் காண்க. முழுத் தழன்மேனி- முழுமையாகிய தழலை யொத்த மேனி. "முழுத்தழல் மேனி முதல்வன் கண்டாய்" எனத் தேவாரத்து (நாவு 237:5) வருதலும் காண்க. குதிரை வாயிற் கொள் ளுப்பை கட்டும்போது முழுத்தழல் போலுந் தன் அருட்டிருமேனியைப் பாண்டியன் காணு மாறு காட்டியமையின் "மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி, சொக்கதாகக் காட்டிய தொன்மையும்" என்றார். சொக்கு- அழகு. "சொக்கணைந்த சுடரொளி வண்ணனை" (தேவாரம்) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

அரியொடு பிரமற்கு அளவு அறி ஒண் ணான்- திருமாலுக்கும் பிரமனுக்கும் எல்லை அறியப்படாதவனாகிய சிவபெருமான், நரியை குதிரை ஆக்கிய நன்மையும்- நரிகளைக் குதிரை களாக்கிய நன்மையும், ஆண்டு கொண்டு அழகு உறு திருவடி அருள- அடிமை கொண்டு அழகு பொருந்திய திருவடியை அருளும்பொருட்டு, பாண்டியன் தனக்கு பரிமா விற்று, பாண்டிய மன்னனுக்குக் குதிரை யாகிய மாவினை விற்று, ஈண்டு கனகம் இசைய பெறாது- அதற்கு விலையான திரண்ட பொன்னைப் பெறுதற்கு உடன்பாடுறாமல், ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்ப- என்னை அடிமை கொண்டவனாகிய இறைவன் தன் திருவருள்வழி யான் இருத்தற்பொருட்டு, தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்- அருள் நெறியை விரும்புமாறு தூண்டுகின்ற ஒளிவடிவினை அடியேனுக்குத் தோன்றச் செய்த தன்மையும்.

அரியொடு என்புழி ஒடு எண்ணுப் பொருட்டு. அளவு- எல்லை. "பேரள வெய்திய பெரும்பெயர்ப் பாண்டில்" (நெடுநல் 123) என் புழியும் இப்பொருட்டாதல் காண்க. திருமாலும் பிரமனும் அடி முடி தேடிய ஞான்று இறை வன் எல்லையறியப்படாதவாறு நின்றானாத லின், 'அரியொடு பிரமற் களவறி யொண் ணான்' என்றார். "வளைக்கை யானொடு மலர வனறியா வானவா" (செத்திலாப் 10) "திருப் பெருந்துறையுறை சிவனே, எல்லை மூவுலகு முருவியன் றிருவர் காணும்நாள் ஆதியீ றின்மை வல்லையாய் வளர்ந்தாய்" (வாழாப் 4) என அடிகள் அருளியமை காண்க. அரியும் பிரமனும் தாம் தாமே பெரியரெனத் தம்முள் தருக்குதலான் இறைவன் அளவறியொண்ணா னாயினன். "இருவரால் மாறுகாணா வெம் பிரன்" (அச்சப் 2) என அடிகள் அருளியமை யுங் காண்க.

நரியைக் குதிரையாக்கியமை "நரிக ளெல்லாம் பெருங்குதிரை யாக்கியவா றன்றே யுன்பேரருளே" (ஏசறு 1) "நரியைக் குதிரைப் பரியாக்கி" (ஆனந்த 7) என வருவனவற்றா லும் அறியப்படும். இழிவுடைய நரியை உயர் வுடைய குதிரையாக்கியமை இறைவனது ஆற்றலைக் குறிப்பது. அதனால் அது நன்மையாயிற்று. இறைவன் நரிகளைப் பரி களாக்கிக் கொணர்ந்தது அடிகள் பொருட் டென்பது, "ஞாலமிகப் பரிமேற் கொண்டு நமையாண்டான்" (பொன்னூசல் 8) என அடி கள் அருளியமையானுமறியப்படும்.

ஆண்டுகொண்டு அழகுறு திருவடி யருள எனக்கூட்டுக. தேவர்களாலும் காண்டற் கரிய இறைவனுடைய திருவடிகளை அவன்

குதிரைச் சேவகனாய்க் குதிரைமீதிவர்ந்து வந்தஞான்று பாண்டியனும் கண்டு களித்து அத்திருவடியைப் பெறுதற்கு ஏதுவான மையின் 'ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி' என்றார். பரிமா- குதிரையாகிய மா. "அரிமாவும் பரிமாவுங் களிறுங் கராமும்" (கலி 103:18) என்புழி பரிமா என்பதற்குக் 'குதிரையாகிய மா' என நச்சினார்க்கினியர் உரைத்தமையுங் காண்க.

ஈண்டு கனகம்- திரண்ட பொன், ஈண்டு தல்- திரளுதல். இப்பொருட்டாதல் "ஈண்டு பெருந் தானையொடு" (முல்லை 90) என்புழி யுங் காண்க. இறைவன் பாண்டியனிடத்துக் குதிரை கொண்டு சென்றது பொன் பெறுதற் பொருட்டாகவன்றி அடிகளை ஆண்டுகொள் ளுதற் பொருட்டாகவென்பார் 'பாண்டியன் றனக்குப் பரிமா விற்று, ஈண்டு கனக மிசையப் பெறாது ஆண்டான் என்றார். திருவடியருள (37) விற்று (38) பெறாஅது (39) ஆண்டான் (40) என முடிக்க.

இறைவன் குதிரைகளைக்கொண்டு பாண்டியன்பாற்போந்து அவன் தம்மை வருத் திய வருத்தத்தினின்றும் நீக்கிக் காத்தருளி யமை, தம்மை அருள்வழியிருக்கச் செய்த மையின் 'எங்கோன் அருள்வழி யிருப்ப' என்றும், அவ்வருள் வழியை விரும்புமாறு தூண்டுவது அவ்விறைவன் ஒளிவடிவென்பார். 'தூண்டு சோதி' என்றும் அருளிச் செய்தார். தூண்டுதல்- செலுத்துதல். "எந்தை நீ யிரத மின்னே தூண்டினை மீற" (கம்ப.தைல 19) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

(தொடரும்...



உ

# திருவாவடுதுறையிலும் தவழும் திருநிறை "ஞானச்சுடர்"

**நீர்வை தி. மயூரகிரி சர்மா** அவர்கள்

அன்றைய மாசிமகப்பூரணை நாளில் கும்பகோணத்திலிருந்து புறப்பட்டு திருப்பனந்தாள் காசிமடத்தையும் அங்கே அருளாட்சி செய்யும் சுவாமிகளையும் தரிசித்துக் கொண்டோம்.

அன்றைய மதிய வேளையில் நாம் தமிழகத்தின் நாகை மாவட்டத்திலுள்ள திருவாவடுதுறைக் கிராமத்தை அடைந்தோம். காவிரிக் கரையோரத்தில் கவினுற அமைந்திருக்கிற இக்கிராமத்தின் புகழுக்கும் வளத்துக்கும் முக்கிய காரணமாக விளங்குவது திருவாவடுதுறையாதீனம். அந்த ஆதீனத்தை நோக்கியதாகவே நமது அன்றைய பயணம் அமைந்தது.

ஆளுடைய பிள்ளையான திருஞான சம்பந்தருக்கு ஆயிரம் பொன் கொடுத்து உதவிய அண்ணலான ஒப்பிலாமுலையம்மை உடனாய கோமுத்தீஸ்வரரை வழிபட்டுக் கொண்டோம். தைத்திங்களிலேயே குடமுழுக்கு நடந்ததால் மிக அழகாக.. கோயில் விளங்கியது.

கோயிற் தரிசனத்தை அடுத்து ஆதீனத்தை அடைந்தோம். ஆதீனத்திற்கு சென்ற எம்மை ஆதீன கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்று விருந்தினர் மாளிகையில் தங்கச் செய்தார். ஆதீனத்தில் இருந்த வயது முதிர்ந்த இரு சுவாமிகள் திருவாசகம் முதலியவற்றைப் பாராயணம் செய்து கொண்டிருந்தனர்.

மகாசந்நிதானம் சுவாமிகள் திருநல்லூர் என்ற ஸ்தலத்தில் அன்றைய நாள் மாசிமக நீராட்டிற்காகச் சென்று விட்டதாயும், விரைவில் வந்து விடுவார் என்றும் அறிந்தோம். அதுவரை ஆதீன நூலகம், ஆதீன பாடசாலை, ஆதீன அன்னதான கூடம் இவைகளைப் பார்த்தோம். அக்கிராமத்தில் உள்ள சிலருடன் பேசும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கிருக்கிற தம்பிரான் சுவாமிகள் மற்றும் பலரையும் கண்டு உரையாடினோம்.

ஆதீன குருமுதல்வரான பேரருட்திரு குரு நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதியையும் வழிபட்டோம். சிறிது நேரத்தில் குருமகா சந்நிதானம் தீர்த்தவாரி நிறைவு செய்து ஆதீனத்தை அடைந்தார்கள். ஆதீன குருமுதல்வர் சந்நிதியை அடைந்து வணங்கிய பின் கொலுமண்டபத்தில் கொலுவீற்றிருந்தார்கள். கோமுத்தீஸ்வர ஸ்வாமியின் பிரசாதம் ஆலய சிவாச்சார்யரால் குருமகாசந்நிதானத்திற்கு வழங்கப்பெற்றது.

அதன் பின் நம்மை அழைத்தார்கள். நாம் அங்கு எழுந்தருளியிருக்கிற ஆத்மார்த்த மூர்த்தியாகிய நடராஜரை வணங்கி சந்நிதானம் சுவாமிகளைத் தரிசித்தோம்.

இவ்வாண்டு குருமகாசந்நிதானத்தின் மணிவிழா ஆண்டு. அது போலவே பீடாரோகண வெள்ளி விழா ஆண்டு. இந்த நல்ல வேளையில் சந்நிதானத்தை தரிசிக்கும் வாய்ப்பு... அதுவும் மாசி மக விழாவில்

சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிட்டிற்று. தற்போது குருமகாசந்நிதானமாக அருளாட்சி செய்கிற 23வது குருமகாசந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் தமிழிலும் சைவசித்தாந்தத்திலும் மிகுந்த ஈடுபாடுடையவர்.

எனவே, இவை பற்றி நிறைவாக சில நிமிடங்கள் நம்முடன் பேசினார். பின் ஆதீன வெளியீடுகளை வழங்கி கௌரவித்தார். அப்போது, நாம் இந்துசாதனத்தில் எழுதிய திருவாவடுதுறையாதீனம் பற்றிய கட்டுரை தொடர்பான பேச்சும் எழுந்தது.

அக்கட்டுரையில் சில குறைபாடுகள் உள்ளது என்று அவைகளையும் குறிப்பிட்ட சுவாமிகள் அக்கட்டுரையின் நடையும் பாணியும் சிறப்பாயிருக்கிறது என்றார்.

அவ்வமயம் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிகளை சுவாமிகள் விதந்துரைத்ததுடன் 'ஞானச்சுடர்' ஆதீனத்திற்கு மாதம் தவறாமல் வருவதாக குறிப்பிட்டு நமக்கு ஆதீனத்திற்கு வந்த ஞானச்சுடர் பிரதிகளைக் காண்பித்தார். ஞானச்சுடரின் பணியைக் கோடிட்டுக் காட்டி மகிழ்ந்தார்கள். கடல் கடந்து இவ்வளவு பிரச்சினைகளுக்கும் மத்தியில் ஞானச்சுடர் ஒழுங்காக திருவாவடுதுறைக்குச் செல்லுகிறது என்ற செய்தி கேட்டு.. அதுவும் சைவ சமயிகளின் பிரதான ஆதீனம் ஒன்றின் மகாசந்நிதானம் அவர்களின் திருவாய்மொழியாகவே.. அதைக் கேட்ட போது உள்ளம் மிக மகிழ்ந்தது.

இவ்வாறாக இனிமையான இந்த தரிசன நிறைவில் 'இலங்கை சென்றதும் இத்தரிசனம் பற்றியும் எழுதுக' என்ற சுவாமிகளின் திருவாணையும் கிடைத்தது.

எனவே,... ஞானச்சுடர் திருவாவடுதுறையிலும் தவழும் செழுமையை வியந்து பாராட்டாமல் இருக்க இயலவில்லை. இதன் மூலம் இச்சஞ்சிகை விரைவில் உலகளாவிய சைவ சமயிகளின் மாபெரும் இணைப்புப் பாலமாக விளங்கும் என்ற நம்பிக்கையும் எமக்கு ஏற்பட்டது.

இந்த மகிழ்ச்சியை புதிய கர ஆண்டின் புத்தாண்டுப் பரிசிலாக.. ஞானச்சுடர் வாசகர்களாகிய நாம் கொண்டாடலாம் அல்லவா?

**எமது பேரவையின் ஆரம்பகாலந் தொட்டு வாராந்த நிகழ்வுகளில் இடம்பெறும் இன்னிசை நிகழ்வுகளுக்கு இசை வழங்குவதில் முதன்மை பெற்ற அமரர் தம்பு சற்குருநாதன் அவர்கள் ஆற்றிய சேவையின் நிமித்தம் பேரவையினால் என்றும் போற்றப்படக்கூடியவராவார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**



**–பேரவையினர்**

முதுமையும் வறுமையும் ஒருவனுக்கு இரண்டு பெரும் சுமைகள்.




### பெரியபுராணக்கதை

## சீராளா வருவாய்!

சோழ நாட்டில் திருச்செங்காட்டங்குடி என்ற நகரம் உள்ளது. அந்த நகரத்தில் பரஞ்சோதியார் என்று ஒருவர் இருந்தார்.

**நரசிம்ம மன்னனு**க்கு படைத் தலைவனாய் விளங்கினார் பரஞ்சோதியார். அவர் உலகில் உள்ள அனைத்துக் கலைகளிலும் போர்புரியும் முறையான வாள்சண்டை முதலான பலவித யுத்த முறையிலும் தேர்ச்சி பெற்று விளங்கினார்.

நரசிம்மவர்மனுக்கும், சாளுக்கிய மன்னன் புலிகேசிக்கும் பெரும்போர் நடைபெற்றது. அப்போரில் பரஞ்சோதியார் சாளுக்கிய புலிகேசியை வென்றார். நரசிம்மனுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். பரஞ்சோதியார் சிவபூஜையிலும், சிவனடியார்களைப் போற்றுவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். பரஞ்சோதியார் சிவனடியார் என்பதை அறிந்த மன்னன் நரசிம்மன் "தாங்கள் இனியும் கொலைத் தொழிலாகிய படைத் தொழிலை செய்யல் ஆகாது. தாங்கள் எம்பெருமான் அன்பர்" என்று போற்றி வணங்கினான்.

பொன்னும் பொருளும் அவர் வாழ்நாள் முழுமைக்கும் போதுமான அளவு கொடுத்தனுப்பினான். சைவத்தொண்டு புரிய தமக்கு ஒரு நிரந்தர தீர்வு கிடைத்ததை எண்ணி மனம் மகிழ்ந்தார் பரஞ்சோதியார். சைவத்தொண்டுடன் இல்லறமும் சிறப்புற நடத்தி வந்தார். பரஞ்சோதியார்க்கு **சீராளன்** என்று ஒரு மகன் பிறந்தான். அவனைத் தன் குலத்திற்கு ஒப்ப சிவநெறியோடு வளர்த்து வந்தனர். சீராளன் சிறந்த பண்போடும் அறிவுக் கூர்மையோடும் பெற்றோர்களின் வார்த்தைகளுக்கு கட்டுப்படும் குணத்தோடும் திகழ்ந்தான். பரஞ்சோதியார் தனது சைவத்தொண்டின் காரணமாய் தினமும் ஓர் சிவனடியார்க்கேனும் உணவளித்துவிட்ட பிறகுதான் உண்பதாக தவம் மேற்கொண்டார். பரஞ்சோதியாரின் துணைவியாரும் அவரது கொள்கைப் பிடிப்புக்கு ஏற்றவராய் சிவனடியாருக்காக உணவுகளை நல்லமுறையில் சமைத்து அவர்களின் பசிதீர்த்த பிறகே பரஞ்சோதியாருடன் உணவு உட்கொள்ளும் பழக்கம் கொண்டார்.

ஒருநாள் பரஞ்சோதியார் இல்லத்திற்கு சிவனடியார் ஒருவரும் வரவில்லை. அதனால் பரஞ்சோதியார் துயருற்றார். "எவரேனும் சிவனடியாரை நான் தேடி அழைத்து வருகிறேன்" என்று கூறித் தன் இல்லம் விட்டு வெளிச்சென்றார். அவர் வெளியே சென்றதும் ஓர் பைரவத் துறவியார் 'சிவமே நிலைக்கும்' என்று கூறியபடி பரஞ்சோதியார் இல்லத்திற்கு

வந்தார். "ஐயனே, வாருங்கள். தங்களைப் போன்ற சிவனடியார் எங்கள் இல்லம் வருவது பாக்கியம். சற்று அமருங்கள். இந்த இல்லத் தலைவரும் வந்திடுவார்" என்று பரஞ்சோதியார் வெளியே சென்றுள்ளதைப் பக்குவமாய் துணைவியார் உரைத்தார். "தலைவன் இல்லாத வீட்டில் நான் இருப்பதில்லை. பரஞ்சோதியார் வந்தால் எம்மை வந்து பார்க்கச் சொல்லுங்கள்" என்று கூறி தான் காத்திருக்கும் இடத்தையும் சொல்லிச் சென்றார் **பைரவத் துறவியார்.**

பரஞ்சோதியார் ஓர் சிவனடியாரும் கண்ணில் தோன்றாமையால் தளர்ச்சியுற்று இல்லம் திரும்பினார். அப்பொழுது அவர் துணைவியார் துறவியைப் பற்றிக்கூற உடனே அவ்விடம் நோக்கி விரைவாகக் கிளம்பினார். பைரவத் துறவியார் அங்கு அமர்ந்திருப்பது கண்டு ஆனந்தப்பட்டார். "தாங்கள் எனது இல்லம் வந்து உணவருந்தி அடியேனை வாழ்த்தியருள வேண்டும்" என்று வணங்கி நின்றார்.

"அன்பனே, யாம் ஆறு மாதத்திற்கு ஒருமுறை தான் உணவு உண்பேன். அதுவும் ஆறு மாதங்களில் குறிப்பிட்ட ஓர்நாள் மட்டுமே உண்பேன்" என்றார் துறவியார். அதைக் கேட்டதும் பரஞ்சோதியார் செய்வதறியாது நின்றார். அத்தகைய நாள் இந்நாள்தான் என்று கூறியதும் "அடியேன் பாக்கியம் அடைந்தேன்" என்றார் பரஞ்சோதியார்.

"நான் உணவு உட்கொள்ளும் நாள் இந்நாள் என்றாலும் எமக்கு விருந்து அளிக்க உன்னால் இயலாது. காரணம் நான் பசுவின் கறியே உட்கொள்வேன்" என்றார். "அடியாரே, எனது வீட்டில் நிறையப் பசுமாடுகள் இருக்கின்றன. தாங்கள் இசைந்தால் பக்குவமாய் சமைத்து விருந்திடுவேன்" என்றார் பரஞ்சோதியார். "நீ நினைப்பதுபோல் யாம் உண்பது வெறும் பசு அல்ல. நர பசு (மனிதக் கறி) அதுவும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தையாக இருக்கவேண்டும். குடும்பத்திற்கு ஒரே பிள்ளையாக இருக்க வேண்டும். தாய் பிடிக்க தந்தை அரிய வேண்டும். அப்படி அரிகின்றபோது எவர் கண்ணிலும் கண்ணீர் வரக்கூடாது. மகிழ்ச்சியோடு இச்செயலை புரியவேண்டும். அக்குழந்தைக்கு உறுப்பு குறைவில்லாமல் இருக்கவேண்டும். அவ்வாறு சமைத்துத் தந்தால் யாம் உண்போம்" என்றார்.

"அவ்வாறே தாங்கள் விரும்பிய வண்ணமே விருந்தளிக்கிறேன். அடியேன் இல்லம் வருதல் வேண்டும்" என்று பரஞ்சோதியார் அழைத்தார். பரஞ்சோதியார் உறுதிகண்டு துறவியார் அவரைப் பின் தொடர்ந்தார். பரஞ்சோதியார் துறவியின் விருப்பத்தைக்கூற, அவரும் அவர் துணைவியாரும் தனது ஒரே மகனான சீராளனையே அடியவருக்கு விருந்தாய்ப் படைக்க முடிவுசெய்தனர்.

கல்வி பயிலகத்திற்குச் சென்றிருந்த சீராளனை பரஞ்சோதியார் சென்று அழைத்து வந்தார். அழைத்து வந்த சீராளனை குளிப்பாட்டி பின்பு தாய்பிடிக்க பரஞ்சோதியார் அரியலானார். தலை கறிக்கு உதவாது என்று அதைத் தனியே எடுத்து வைத்து மற்றவற்றை சமைக்கத் துவங்கினர். பரஞ்சோதியார் துறவியாரிடம் சென்று "பைரவத் துறவியாரே, தாங்கள் உணவு அருந்த வரலாம். அனைத்தும் தயாராக இருக்கின்றது" என்று வேண்டி அழைத்தார். துறவியார் வந்து மணையில் அமர்ந்தார். முன்னே இருக்கும் இலையைப் பார்த்தார். "யாம் கூறிய வண்ணமே செய்தீர்களா" என்றார்.

"தலை கறிக்கு உதவாது என்று அதை மட்டும் ஒதுக்கிவிட்டோம்" என்றனர்.

"யாம் தலைக்கறியே மிக விரும்பி உண்போம். அதையும் சமைத்துத் தருக" என்றார் துறவியார். உடனே பரஞ்சோதியாரின் துணைவியார் அதையும் சமைத்து வந்து துறவியின் இலையில் படைத்து "தாங்கள் இப்பொழுது உட்கொள்ளலாம்" என்றார். "யாம் தனியே உணவு உண்பது இல்லை. தங்கள் வீட்டில் தங்கள் குழந்தை இருந்தால் அழையுங்கள்" என்றார் துறவி. "ஐயனே, இப்பொழுது அவன் உதவான் நமக்கு" என்று கூறினார் பரஞ்சோதியார். "இருவரும் வாயிலில் சென்று அவன் வரும் வழியை நோக்கி அழையுங்கள், வருவான்" என்றார்.

"சீராளா, வருவாய்... உணவு அருந்த துறவியார் அழைக்கின்றார்" என்று அன்புமிகுதியோடு அழைத்தனர். கல்வி பயிலகத்திலிருந்து வருவதுபோல் "சீராளன் ஓடி வந்தான். அதைக் கண்டு தாய் தந்தையர் இருவரும் மனம் மகிழ்ந்தனர். மகன் சீராளனுடன் பரஞ்சோதியாரும் துணைவியாரும் உள்ளே வந்து பார்த்தபொழுது துறவியைக் காணவில்லை. இலையில் படைத்த உணவும் மறைந்து போயிற்று.

"பரஞ்சோதியாரே! உமது அன்பு மிகுதியால் நீர் செய்த சிறு தொண்டை சோதிக்கவே வந்தோம். இன்றுமுதல் சிறுத்தொண்டர் என்று அழைக்கப்பட்டு சிலநாட்கள் பூவுலகில் வாழ்ந்து எம்மை அடைவீராக" என்று சிவபெருமான் அசரீரியாய் உரைத்தார்.

கண்ணில் நீர் மல்க, அசரீரி வந்த திக்கையே நோக்கி, உளம் பூரித்து இறைவனின் திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்தார் பரஞ்சோதியார்.

# தற்கொலை செய்துகொள்வது...

துறவியிடம் வந்த ஒருவன், "எனக்கு அறவே கடவுள் நம்பிக்கை கிடையாது. எதை எதைச் செய்யக்கூடாது என்று சமயநூல்கள் சொல்கின்றனவோ அவற்றை எல்லாம் செய்து முடித்துவிட்டேன்" என்று மிகவும் பெருமையாகச் சொன்னான் அவன்.

"எதற்காக என்னிடம் வந்தாய்?" என்று கேட்டார் துறவி.

"நான் செய்யாமல் விட்டுவிட்ட கொடுஞ்செயல் ஏதேனும் இருந்தால் அவற்றையும் செய்து முடித்துவிடலாம் என்றுதான் வந்தேன்" என்றான்.

"பொய் சொல்லியிருக்கிறாயா? திருடியிருக்கிறாயா? சூதாடியிருக்கிறாயா? குடித்திருக்கிறாயா?" என்று ஒவ்வொரு பாவச் செயலாகத் துறவி கேட்க, அவன் எல்லாவற்றுக்கும், "ஆமாம்" என்று பதில் தந்தான்.

"எனக்குத் தெரிந்து நீ செய்யாத ஒரே ஒரு கொடுஞ்செயல் இருக்கிறது. அதை நீ செய்ய ஒப்புக்கொள்வாயோ மாட்டாயோ என்றுதான் தயங்குகிறேன்" என்று இழுத்தார் துறவி.

"என்னவாக இருந்தாலும் சொல்லுங்கள், செய்து முடிக்கிறேன்" என்றான் அவன். "எல்லாச் சமயங்களும் தற்கொலை செய்துகொள்வது பாவம், கொடுஞ்செயல் என்று கூறுகின்றன. நீ செய்யாத பாவச்செயல் அதுதான். போய்ச் செய்துகொள் என்றார் துறவி.

**இன்பமும் துன்பமும் விதியல்ல, நீயே தானாகத் தேடிக்கொண்டவை.**

உ

(தொடர்ச்சி...



# கந்தனே கலியுகத் தெய்வம்

**கே.வி. குணசேகரம்** அவர்கள்

இருக்கு வேதம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இருக்கு வேதத்தின் முதலாவது மண்டலம் அக்கினியைப் பற்றிக் கூறுகிறது. "அக்கினியே மனிதனுக்கு உணவைக்கொடு, அவனது இன்பங்களுக் கேதுவான அறிவைக் கொடுத்து இறைவனோடு சேர்த்துவை. எம் தந்தையான நீ எமக்கு என்றும் உதவியாக இருந்து ஈடேற்று, இருட்டிலிருக்கும் மனிதருக்கு வெளிச்சத்தைக் காட்டு, பொய்மையில் உழலும் மனிதனுக்கு உண்மையைப் புரியவை, அழியும் நிலையிலுள்ள மனிதனுக்கு அழியா நிலையைக் கொடு" இவ்வாறு அக்கினியைப் பற்றிப் பாடும் பாடல்கள்தான் முதலாவது மண்டலத்தில் உள்ளன.

இரண்டாவது மண்டலத்தில் இந்திரனை வழிபட்டு அவனால் அடையும் இன்பங்களைப்பற்றிய பாடல்கள் உள்ளன. இருக்கு வேதத்தில் உள்ள பாடல்களில் கால்வாசிப் பாடல்கள் இந்திரனைப் பற்றியவையே. இதிகாச புராணங்களில் வரும் இந்திரன் வேறு. வேதத்தில் வணங்கப்படும் இந்திரன்வேறு. வேதத்தில் உள்ள இந்திரன் எந்தக் குறைகளும் இல்லாதவன். தவறான செயல்கள் எதுவும் செய்யாதவன். மக்களுக்கு நன்மை செய்பவனாகவும், அவர்களையும் பசுக்களையும் காப்பவனாகவும், பசுக்களுக்கும் மக்களுக்கும் துன்பம் செய்வோரைத் தண்டிப்பவனாகவும் காணப்படுகிறான். மக்களும், தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும் அவனிடமே தமது குறைகளை எடுத்துக் கூறினர். இவர்களுக்குத் துன்பமேற்படும் வேளைகளில் இந்திரன் அவற்றை நீக்கி அவர்களைக் காப்பாற்றி இன்பமளித்ததாக வேதப் பாடல்கள் கூறுகின்றன.

இருக்கு வேதத்தின் மூன்றாவது மண்டலம் வருணனைப் போற்றுகிறது. மழையை அளித்து உயிர்களைக் காக்கும் கடவுளாக வருணன் போற்றப்படுகின்றான். உலக உயிர்களுக்கு உணவும் நீரும் கொடுப்பவன் வருணன். அதனால் சர்வ சக்தியுள்ளவனாகவும், மக்களின் நண்பனாகவும், நாட்டின் மன்னனாகவும் வருணன் சித்தரிக்கப்படுகிறான். மன்னன் எப்படிக் குடிமக்களைக் காக்கிறானோ, அதுபோல வருணன் உலக மக்களைக் காக்கிறான் என இருக்கு வேதத்தின் மூன்றாவது மண்டலம் கூறுகிறது.

நான்காவது மண்டலம் வாயுவைப் பற்றிக் கூறுகிறது. சிவன் வாயுவை ஒரு கூறாகக் கொண்டவன் என்று புராணங்கள் கூறுகின்றன. அத்துடன் இராமாயணத்தில் வரும் அநுமன் வாயுபுத்திரன் மகாபாரத நாயகர்களுள் ஒருவனான வீமனும் வாயு புத்திரன். வாயு மனிதனுக்கு மிகவும் அத்தியாவசியமான பொருள். வாயு இல்லாவிட்டால் உயிர்கள் ஒரு கணமும் வாழமாட்டா. வாயுவைப்

பிராணன் என்றும் சொல்வர். பிராணன் என்பது உயிர். வேதப்பாடல் வாயுவைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

“வாயுவே உன்மீது யாரும் ஆதிக்கம் செலுத்தமுடியாது
உனக்கு மேற்பட்ட சக்திகள் எதுவும் இல்லை
உன்னைத் தடுக்க யாராலும் முடியாது
உன்னைவிடப் பலசாலியும் யாரும் இல்லை
யாராலும் வெல்ல முடியாதவன் நீ”

அதனால் மக்களுக்குத் தீங்கு செய்யாது அவர்களது வாழ்வை மேம்படுத்துவாயாக” இவ்வாறு வாயுவைப் போற்றும் பாடல்கள் பல இருக்குவேதத்தில் உள்ளன.

இருக்குவேதத்தின் ஐந்தாம் மண்டலம் சூரியனது பெருமைகளைப் பற்றிக் கூறுகிறது. வேதத்தில் சூரியன் பல பெயர்களால் சுட்டப்படுகிறான். அக்கினியின் ஒரு வடிவமான சூரியனே மக்களின் நல்வாழ்விற்கு உதவுவனாகப் போற்றப்படுகிறான். வேதகால மக்கள் இருளுக்குப் பயந்தனர். இருளில் கொடிய மிருகங்கள் தாக்கும். திருடர்கள் திருடுவார்கள், தீய காரியங்கள் அனைத்தும் இருளில் நடைபெறுவதால் விடியலைக் காணும் மக்கள் மிகவும் மகிழ்ந்து போற்றிச் சூரியனை வரவேற்றனர். சூரிய தேவனைப் பற்றிப் போற்றிப் புகழும் பாடல்கள் பல இருக்கு வேதத்தில் உள்ளன. ‘சூரிய தேவனுக்கு உலகில் நடப்பவையாவும் தெரியும். சகல சக்திகளும் உள்ளவன் அவன். அறிவாளிகளின் தலைவன் அவன். அவனால் தான் உலகம் இயங்குகிறது. அவனது உதவியால் உயிர்கள் வாழ்கின்றன. தானியங்களை உற்பத்தி செய்பவன் அவன். உயிர்களுக்கு உணவளிப்பவன் அவன். அவனது வருகையால் தான் உலகம் விழித்துச் செயற்படுகிறது. தர்ம தேவதையின் கண்ணாகச் சூரியன் இருப்பதால் உலகில் தீமை செய்தோரைக் கண்டுபிடித்துச் சூரியனே தண்டனை கொடுக்கிறான்.” இவ்வாறு இருக்கு வேதப் பாடல்கள் சூரியனைப் பாராட்டுகின்றன.

இருக்குவேதத்தின் ஆறாவது மண்டலம் சமூகத்தைப் பற்றிச் சொல்கிறது. “சமூகத்தை நேசி; அதற்கு மதிப்புக்கொடு; பசியால் வருந்துவோருக்கு உணவு கொடு; துன்பப்படுவோரின் துன்பத்தை நீக்கு; உன்சக்தியைப் பெருக்கு; ஆற்றலை வளர்த்துக்கொள்; பலமாக உடலை வைத்திரு; பகைவனிடத்துப் பணிந்துபோகாதே; உயர்ந்த செயல்களை எப்போதும் செய்; மக்களுக்கு வழி காட்டு” என்று சமூகத்தைப் பற்றியும் சரியைத் தொண்டு பற்றியும் இருக்குவேதத்தின் ஆறாவது மண்டலம் கூறுகிறது.

ஏழாவது மண்டலம் விஷ்ணுவைப் பற்றிக் கூறுவதாகச் சொல்லப்பட்டபோதும் அது அவரது பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. வேத காலத்திற்குப் பின்புதான் விஷ்ணுவைப்பற்றிய கருத்துக்கள் உருவாயின. வேதாந்தம் என்னும் புதிய தரிசனம் உருவாக்கப்பட்ட பின்புதான் விஷ்ணு பரம்பொருளாகக் கொள்ளப்படுகிறார்.

‘விஷ்ணுவே நீதான் உயர்ந்த தெய்வம். உனக்குத் தான் பூமியின் எல்லாப் பகுதிகளும் தெரியும். உனது விசுவரூபத்தில் உலகில் உள்ள பொருட்கள் யாவும் அடங்குகின்றன. உனது சிரம் சொர்க்கத்தையும் துளைத்துக்கொண்டு மேலே சென்றுவிட்டது. உனது பலம்பொருந்திய கால்கள் பூமியைத் துளைத்துச் சென்று பாதாளத்தையும் தாண்டிச் சென்றுவிட்டன. உன் நீண்ட கைகள் திக்குகள் அனைத்தையும் தாண்டிச் சென்றுவிட்டன. அதனால் உனது சிரசையும்

கால்களையும், கைகளையும் யாராலும் காண முடியாது" அதனால் உனது பெருமைகளை யும் அளவிட்டுச் சொல்ல முடியாதென்று இருக்குவேதப் பாடல் ஒன்று கூறுகிறது.

எட்டாவது மண்டலம் வேதங்களின் உயர்வைப் பற்றியும் அதனைப் பின்பற்று பவர்கள் அடையும் நன்மைகள் பற்றியும் கூறுகிறது. 'வேதத்தை அலட்சியப்படுத்துபவன் மாறுபட்ட புத்தியை உடையவன். வேதம் தான் உயிர்களைப் பாதுகாத்து பிறவாத இன்பநிலையைத் தந்து இறைவனுடன் சேர்த்துவைக்கிறது. வேதச் சொற்கள் மனிதனுக்கு ஒளியைத் தந்து நேர்வழியைக் காட்டும். அது எல்லாத் திசைகளிலும் பரந் திருந்து மனிதனைத் தீயவற்றிலிருந்து காப் பாற்றுகிறது' என்று வேதத்தின் எட்டாவது மண்டலப் பாடல்கள் கூறுகின்றன.

இருக்கு வேதத்தின் ஒன்பதாவது மண்ட லம் விடியலைப் பற்றிக்கூறுகிறது. இம்மண்ட லத்தில் உள்ள பாடல்கள் சூரியனை வரவேற் பனவாயும்; விடியலுக்குமுன் செய்யப்படும் செயல்களைப் பற்றியும் கூறுவனவாக உள்ளன.' இரவின் கொடுமை முடிந்துவிட்டது. சூரியனை வரவேற்று மகிழ மிருகங்களும் பறவைகளும் இன்பகீதம் இசைக்கின்றன. சூரியனின் வருகை அவற்றிற்கு எவ்வளவு ஆனந்தம். புத்திக்கூர்மை யுள்ள கதிர்கள் உலகெங்கும் பரவி அறிவை யூட்டத் தயாராகின்றன. அழகான பல நிறங் களில், பல்வேறு வடிவங்களில் அறிவைக் கொடுப்பேன் என்ற குறிக்கோளுடன்

ஒவ்வொரு நாளும் கிழக்கே தோன்றும்
விடியலே உன்னை வணங்கி வரவேற்கிறோம்
சொர்க்கம் பெற்றெடுத்த பொன்மகளே!
பளபளப்பான ஆடைகளால் மூடப்பெற்ற
கன்னிப் பெண்ணே!
உன்னைக் கண்களாற் காணும்போது உலகே
உன்னடிமையாகிறது.
புனிதமான விடியலே, உயர்ந்த சூரியதேவனை

எமக்கு தருபவளே வாழ்க' என்று இருக்கு வேதத்தின் ஒன்பதாவது மண்டலத்தில் உள்ள பாடல்கள் கூறுகின்றன.

இருக்கு வேதத்தின் பத்தாவது மண்டலம் சூதாட்டத்தினைப் பற்றியும் அதன் தீமைகளைப் பற்றியும் கூறுகிறது. சூதாட்டத்தில் ஈடுபட்ட ஒருவன் தனது பொருட்களையெல்லாம் இழந்து புலம்பு வதாகச் சில பாடல்கள் கூறுகின்றன. வேத காலம்; வேதகாலத்திற்கு முற்பட்ட காலத் தில் சைவசமயம் பற்றிய குறிப்புக்கள் இல்லை. இருப்பினும் சிவன், மகாவிஷ்ணு, பெண் தெய்வ வழிபாடுகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. வேதகாலத்தின் பின் வேதத்தில் குறிப்பிட்ட தெய்வங்களின் மகிமை குறைந்து சிவன், மகாவிஷ்ணு, விநாயகர், சூரியன், முருகன், பெண் தெய் வங்களான மகாலட்சுமி, காளி, பராசக்தி போன்ற தெய்வ வழிபாடுகள் முனைப்புப் பெற்றன.

(தொடரும்...

போலி கௌரவத்தால் ஒருவனும் பெரிய மனிதனாகிவிடமுடியாது.

# இனிய இனிய ஆனந்தமே...

**-சத்குரு ஜக்கி வாசுதேவ்-**

இமயமலையின் அடிவாரம். நீண்ட பயணத்திற்குப் பின் பஸ்ஸிலிருந்து அந்த இளைஞன் இறங்கினான். அவனுடைய இரண்டு துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு மலையேற, காத்திருந்த கழுதைகளில் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டான்.



'எங்கே போகவேண்டும் சாஹேப்?- கழுதையை வழிநடத்துபவன் கேட்டான். 'ஏதாவது ஒரு நல்ல சாமியார் ஆச்சிரமத்துக்குப்போ'. 'எத்தனை நாட்கள் தங்கப் போகிறீர்கள்'. 'நாட்களா? இனி என் வாழ்க்கையே இங்கேதான். என் மனைவி, குழந்தைகள், அம்மா, அப்பா, பிஸினஸ் எல்லாவற்றையும் உதறி விட்டு வந்துவிட்டேன். இதோ என் கழுத்தில் இருக்கிறதே தங்கச் சங்கிலி... இதைக்கூட உனக்கு கொடுத்துவிடப் போகிறேன்.' கழுதைக்காரன் வியந்து நிற்கிறான். 'இந்தச் சின்ன வயதில் உங்களுக்கு எப்படி இதெல்லாம் சாத்தியமாயிற்று?'

இளைஞனின் முகத்தில் பெருமிதம் வழிந்தது. 'எங்கள் ஊருக்கு வந்திருந்த குரு ஒருவர்

## ஆசையைத் துறப்பது முட்டாள்தனம்

சொன்னது என்னை ஆழமாகத் தொட்டுவிட்டது. ஆசைகள்தான் துன்பத்திற்கெல்லாம் காரணமாம். அதுதான் எல்லா ஆசைகளையும் உதறிவிட்டு வந்துவிட்டேன்.'

'எல்லாவற்றையும் உதறிவிட்டு இந்த மூட்டைகளில் என்ன கொண்டுவந்து இருக்கிறீர்கள், சாஹேப்?' 'இங்கே குளிர் அதிகம் என்று சொன்னார்கள். அவசரத்திற்குப் பக்கத்தில் கடைகளும் கிடையாதாமே. அதனால், இந்த மூட்டைகளில் எனக்கு வேண்டிய கம்பளிகளை எடுத்து வந்திருக்கிறேன்.'

கம்பளியைக்கூட உதற முடியாமல் வாழ்க்கையையே உதறியதாகச் சொல்லும் அந்த இளைஞனைப்போல ஆசையைத் துறந்ததாகப் பலர் சொல்லிக்கொண்டு அலைகிறார்கள்.

ஆசையில்லாமல் இந்தப் பிரபஞ்சம் இல்லை. ஆசை இல்லாமல் இந்த உடல் இருக்காது... உயிர் இருக்காது. ஆசைப்படக்கூடாது என்று இந்தப் பிரபஞ்சம் ஒருநாளும் உங்களுக்குச் சொல்லித்தரவில்லை. ஆசையைத் துறந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பதைப்போன்ற முட்டாள்தனமான தத்துவம் எதுவும் இல்லை.

ஆசையைத் துறக்க தீர்மானித்துவிட்டேன் என்று உங்கள் மனம் போலித்தனமாக துறவு பேசும். மனம் தந்திரசாலி எதையோ சொல்லி உங்களை நம்பவைத்து ஏமாற்றும். அந்த சூட்சுமம் அதற்குத் தெரியும். ஆனால் உடம்பு? காற்றுப் புகமுடியாதபடி உங்கள் வாயையும் மூக்கையும் இறுகப்பொத்திக்கொண்டு வேடிக்கை பாருங்கள்.

ஒரு நிமிடம் இரண்டு நிமிடம் வேண்டுமானால் உடம்பு பொறுத்துக்கொள்ளும். அப்புறம், உயிர் வாழவேண்டும் என்று உங்கள் உடம்புக்குள் பீறிட்டு எழும் ஆசை உங்கள் கையைப் பிடுங்கிப்போடும். விட்டுப்போனதற்கும் சேர்த்து அள்ளி அள்ளி ஆக்ஸிஜனைக் குடிக்கும். ஆசையில்லை என்று உங்கள் மனம் சொன்ன தத்துவங்கள் எல்லாம் உடம்பிடம் எடுபடாது. ஏனென்றால் அதற்குப் பொய்சொல்லி ஏமாற்றத்தெரியாது.



உடம்பு என்று மொத்தமாகக்கூடச் சொல்ல வேண்டாம். அதில் இருக்கும் ஒவ்வொரு செல்லும் ஆசையில்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. விருந்தாளியாக உள்ளே ஒரு நோய்க்கிருமி நுளைந்து பார்க்கட்டுமே... உடனே ஒவ்வொரு செல்லும் ஆயுதத்தை தூக்கிக் கொண்டு கடுமையான போருக்குக் கிழம்பிவிடும். எதற்காக?

பிரபஞ்சம் அதற்கு வாழும் ஆசையைக் கொடுத்திருக்கிறது. இன்னும் அழகாகப் பார்த்தால், ஆசைகளைத் துறக்கவேண்டும் என்று விரும்பினால் அடிப்படையில் அந்த விருப்பமும் ஓர் ஆசைதானே? உங்கள் ஊருக்கு ஒரு சாமியார் வந்திருப்பார். 'நீ பணத்தின்மீது ஆசை வைத்தாய் அதுதான் உன் துன்பத்திற்கு எல்லாம் காரணம் கடவுளின்மீது ஆசைவை' என்பார். உங்களிடம் பத்துக்கோடி ரூபாய் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். கடவுளை நம்பி உங்கள் பணத்தை எல்லாம் தேசத்தில் இருக்கும் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்து விட்டால் உடனே நிம்மதி வந்துவிடுமா?

நாளையிலிருந்து இந்தத் தேசத்தில் உங்களையும் சேர்த்து ஏழைகளின் எண்ணிக்கையில் ஒன்றுகூடிப்போகும். அவ்வளவுதான்.

பணம் கையில் இருந்தால் என்னவெல்லாம் செய்யமுடியும் என்பதாவது உங்களுக்குத் தெரியும். கடவுளால் என்ன செய்யமுடியும், என்ன செய்ய முடியாது என்று உங்களுக்கு எந்த அனுபவமும் கிடையாது. இன்பத்திற்கு ஆசைப்படாதே; சொர்க்கத்துக்கு ஆசைப்படு. அதிகாரத்திற்கு ஆசைப்படாதே; அமைதிக்கு ஆசைப்படு என்று வேறொரு அறிவுரையும் அடிக்கடி கிடைக்கும்.

சங்கரன்பிள்ளைக்கு ஒருமுறை மோசமான முதுகுவலி வந்தது. டாக்டர் எக்ஸ்ரேயை வெளிச்சத்தில் பார்த்தார். இந்த எக்ஸ்ரேயைப் பார்த்தீர்களா? உங்கள் முதுகுத்தண்டு

தீவிரமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆபரேஷன்தான் செய்யவேண்டும். எவ்வளவு செலவாகும், டாக்டர்? 'என் ஃபீஸ் இருபத்தைந்தாயிரம் ரூபாய். ஆஸ்பத்திரியில் ஆறு வாரம் தங்கி ஓய்வு எடுக்க வேண்டியிருக்கும்' சங்கரன்பிள்ளை திகைத்தார். அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?

"இதோ வந்துவிடுகிறேன் டாக்டர்" என்று எக்ஸ்ரேயை வாங்கியவர் நேராக எக்ஸ்ரே எடுத்தவரிடம் விரைந்தார். "டாக்டருக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்து ஒரு மணி நேரத்தில் முடிகிற மாதிரி இந்த எக்ஸ்ரேயை திருத்தித் தரமுடியுமா... ப்ளீஸ்?" என்று கேட்டார்.

அப்படி எக்ஸ்ரேயைத் திருத்தித்தரும் சாமியார்கள் தான் ஆசைகளை ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றிக்கொள்ளச் சொல்பவர்கள்.

இன்னொரு சாமியார் வருவார்... "சரி, சரி ஆசையை மொத்தமாக விட்டொழிக்க வேண்டாம் கொஞ்சமே கொஞ்சம்... இதோ இத்தினியூண்டு வைத்துக்கொள், பரவாயில்லை" என்று அனுமதி தருவார்.

விரும்பினால் எனக்கு இன்னும் கிடைக்கும். ஆனால் எனக்கு இதுபோதும் என்று ஒரு வைராக்கியத்துடன் ஆசையைக் குறைத்துக்கொண்டீர்களேயானால் அதை ரசிக்கலாம். அது உங்களுக்கு நிறைவைத் தரும்..... சந்தோசத்தைத் தரும்.

ஆனால் 'எனக்கெங்கே அதெல்லாம் கிடைக்கப்போகிறது? இதுவே போதும்' என்று தத்துவம் பேசி, உங்கள் ஆசைகளின் சிறகுகளைக் கத்திரித்தீர்களேயானால் அது கோழைத்தனம்.

பக்கத்துவீட்டுக்காரன் படு பேராசைக்காரன். ஆனால் அவனுக்கு எல்லாம் கிடைக்கிறது. நான் ஆசைப்பட்டதே இத்துனூண்டு. அதுகூட எனக்குக் கிடைக்க மாட்டேன் என்கிறதே? என்றால் துயரம்தான் மேலும் அதிகமாகிப்போகும். அதனால் தான் சொல்கிறேன், ஆசைப்படுங்கள்; மிகப்பெரிதாக ஆசைப்படுங்கள். அந்தத் தைரியம்கூட இல்லாமல் அற்பமாக ஆசையை சுருக்கிக்கொண்டீர்களேயானால், வாழ்க்கையில் வேறு எதைப் பெரிதாக நீங்கள் சாதித்துவிடப் போகிறீர்கள்?

உங்களின் வாழ்க்கையின் தரத்தையே நிர்ணயம் செய்யப்போகும் ஆசைகளைப்பற்றி இன்னும் ஆழமாகத் தெரிந்து கொள்வோமா...? (வளரும்....

## நல்லதே நடக்க நாதனே அருள்வாய்

கடந்த விகிர்தி வருடம் தந்த
கவலைகள் போதும் போதும் இறைவா
நடந்தவை எல்லாம் நாடே அறியும்
நாளும் நாளும் புதுப்புது மாற்றம்
முடிந்தவை எல்லாம் இறைவன் தீர்ப்பே
முடிந்த முடிபு என்றார் யோகர்
நடக்க இருக்கும் 'கர' வருடத்தில்
நல்லதே நடக்க நாதனே அருள்வாய்

*-கவிஞர் வ. யோகானந்தசிவம்-*

தன்னடக்கமும் சுறுசுறுப்பும் மனிதனுடைய நிவாரணங்கள்.

உ



# சந்நிதி - ஆச்சிரமம்
# திரு மோகனதாஸ் சுவாமிகளும்
# 160ஆம், ஞானச்சுடர் மலரும்




**முதுபெரும்புலவர், கலாபூஷணம், புலவர்மணி**
**வை.க. சிற்றம்பலம்** அவர்கள்

கந்தனெனச் சங்கரன்
மைந்தனென ஐங்கரனின்
சார்ந்தவுயர் சோதரனென்ன
கலியுகவரதனாய்ச்
சந்நிதி யமர்ந் தானைக்
கைகூப்பித் தொழுதேத்தியே
வந்தனைக் குரியநல்
அன்னக் கொடை யோடு பல
அறக்கொடைகள் தாங்கி நடாத்தும்
அருளாளர் ஆச்சிரமப்
பொருளாளர் அருந்தலைவர்
அரிய பெரும் மாமனிதராம்
சிந்தனைச் சிற்பியாம்
செந்தில்வேல் தம்பதி பெற்ற
செம்மனச் செல்வரான
திருவாளர் மோகனதாஸ்
சுவாமிகளின் திருத் தொண்டை
செப்பியங் கெழுத முடியுமோ!
அந்த நல் நெஞ்சத்தார்

அகிலமெல் லாம் போற்றும்
அருள்ஞானச் சுடரை அச்சேற்றி
ஆண்டாண்டு வெளியி டல்போல்
இவ்வாண்டும் வெளியிடும்
அதிசயம் அதையும் அறிவிரே
திருசார்ந்த ஆயிரத்துத்
தொளாயிரத்தொண் ணூற்றெட்டில்
சேர்சந்நிதி ஆச்சிரம மிருந்தே
சிறியதாய் நடைதொடங்கி
பெரியதா யின்றுயர்ந்த
சிறந்த மலர் ஞானச்சுடரினை
ஒருஞான உலாவாக
உலகெலாஞ் சுற்றிவர
ஓயாது வெளியிட்டு வருகின்ற
உயர் சைவப் பண்பாட்டுக்
கலை வளர்க்கும் பேரவையின்
ஒப்பிலா மோகனதாஸ் சுவாமி
குருவாக அவ்வேட்டின்
நூற்றியறு பதாம் மலரை
குலாவுமிவ் வாண்டு சித்திரையில்
குறித்து வெளியீட் டுரைதனை
கலாநிதி பாலகிருஷ்ணன்
கோலாகாலமாய் விடுக்க
அருஞான மதிப்பு ரையை
ஓய்வுபெற்ற அதிபராம்
தவமலர் சுரேந்திரநாதன் உரைக்க
அருளாளர் ராய்ச் சபையில்
அனைவர்க்கும் வழங்கினார்
அடியேன் அவரை வாழ்த்தினேனே.

உ



# ஆலயங்களில் அபிஷேகங்கள் செய்வது ஏன்?

**காரை எம்.பி. அருளானந்தன்** அவர்கள்

சமயத்தை வாழ்க்கையோடு ஒன்றிய வழிமுறையாக வகுத்த நம் முன்னோர்கள் காரண காரியங்களின்றி சடங்குகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் காலத்தால் ஏற்பட்ட மாறுதல்களாலும் இத்தகைய சடங்குகளின் உண்மைத் தத்துவத்தை சமுதாயம் தெரிந்து கொள்ளாததன் காரணத்தாலும் இத்தகைய கேள்விகள் எழுகின்றன.

இறைவனுக்குப் பூஜை செய்யும் பொருட்களைவிட மனோபாவமும் பக்தியுமே முக்கியம் என்கிறது நமது இந்து சமயம். நம்மைப்போலவே இறைவனையும் பாவித்து அவனுக்கு ஆசனம், ஸ்நானம், ஆபரணம், அலங்காரம் எல்லாம் செய்து நம் பக்தியைப் பிரதிபலிக்கவே பூஜை விதிகளில் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தமுறையில் மூல விக்கிரகத்துக்கோ அல்லது உற்சவமூர்த்திக்கோ செய்யப்படுகின்ற ஸ்நான சடங்கையே "அபிஷேகம்" என்கிறோம். அபிஷேகம் செய்கின்ற தீர்த்தமும், பாலும் மற்ற திரவியங்களும் வீணாகாமல் கர்ப்பக்கிரகத்திற்கு வெளியே ஓர் அபிஷேகத் தொட்டியில் விழுவதை நாம் ஆலயங்களில் பார்க்கலாம். தெய்வத்தின்மீது ஊற்றப்படும் பால், பஞ்சாமிர்தம், பன்னீர் போன்ற திரவியங்கள் இந்தத் தொட்டியில் விழுந்து அதனை தரிசனத்திற்கு வரும் அனைவரும் பிரசாதமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஏழை- பணக்காரன் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் அது ஒரேவிதமான பிரசாதமாக வழங்கப்படுகிறது. தேன், பழச்சாறு, இளநீர், பால் போன்ற விலையுயர்ந்த சத்துள்ள பொருட்களை வாங்கிப் பருகமுடியாத ஏழை- எளிய மக்களுக்கு அது ஆலயத்தில் இலவசமாகவே அருளுடன் கூடிக் கிடைக்கிறது.

சிவன் கோவிலில் அர்ச்சனை செய்யப்படும் வில்வமும், விஷ்ணு கோவிலில் அர்ச்சனை செய்யப்படும் துளசியும் எத்தனையோ நோய்களைத் தீர்க்கவல்ல சக்தியைப் பெற்றுள்ளன என்று இன்றைய விஞ்ஞானிகள் கண்டறிந்ததை அன்றே நம் சித்தர்கள் தெரிந்து வைத்திருந்தனர். துளசியிலும்-வில்வத்திலும் ஊறிவந்த அபிஷேகநீர், நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது. சில ஆலயங்களில் மூல விக்கிரகமே மூலிகைகள் கலந்த ஒருவகை சாந்தினால் செய்யப்பட்டது என்றும், அதன்மீது ஊற்றப்படும் அபிஷேகநீர், நோய் தீர்க்கும் சக்தி வாய்ந்ததாகும் என்றும் கூறுவர். மூல விக்கிரகத்தை அசையாமல் பீடத்தில் இருக்கச் செய்யும் "அஷ்டபந்தனம்" எனப்படும் சாந்தும் மூலிகைகள் கலந்ததுதான். எனவே ஆலய மூர்த்திகளுக்கு மேல் ஊற்றப்பட்ட அபிஷேக திரவியங்கள் அன்பர்கள் உடல் நலத்தைக் காக்கும் மருந்தாகவும் உள்ளத்துக்கு ஆறுதல் தரும் அருட் பிரசாதமாகவும் கிடைக்கிறதென்றால், ஆண்டவனுக்கு அபிஷேகம் போற்றப்பட வேண்டிய தொரு சடங்குதான் அல்லவா?

**இறைவனிடம் பக்திபூண்டு தொழுது நிற்பவனே ஞானி.**

சிவனுக்கு உடல் ஒரு வாழ்விடம். உடல் வாழ உணவு அவசியம். நாம் பரமாத்மாவிடமிருந்து தோன்றினோம். அவர் பிம்பம். நாம் பிரதிபிம்பம், பிரதி பிம்பமான (போட்டோ படமான) நாம் நன்றாக, சுகமாக வாழவேண்டுமாயின் அவர்- பரமாத்மா, நன்றாக இருக்க வேண்டும். பிம்பமான நமது முகத்தில் அழுக்கிருந்தால், நமது படம் அழகாயிராது. பசி-தாகமில்லாத பரமாத்மாவாக எண்ணப்படுகின்ற திருக்கோயிலிலுள்ள இறைவனுக்கு அபிஷேகம், நிவேதனம், பூசை விழா முதலியவை நடைபெற வேண்டும்.

ஒளி வடிவினராகிய- அக்கினி வடிவினராகிய சிவனுக்கு அபிஷேகத்தில் அதிக விருப்பம். மகாவிஷ்ணுவுக்கு அலங்காரத்தில் அதிக விருப்பம். அக்கினி, நீர் முதலியன பகவானின் உடலே, நமது துயரமெல்லாம் நீங்க அப் பரமனைக் குளிரச் செய்தல் வேண்டும். அப்பரமன் குளிர்ந்தால் நம் மனம் குளிரும். நம் சிந்தையானது ஜலதாரை போல் இடைவிடாது இறைவன் திருவடியிலேயே செல்லுதல் வேண்டும். இறைவனுக்குப் பால் அபிஷேகம் செய்யும்படி வேதங்கள் கூறுகின்றன. அவ்வாறு செய்வதால் சிவனது உக்கிரங்களை சாந்தமாக்கி உலகநலம் உண்டாகும் என்பது சித்தாந்தம்.

நதிகளெல்லாம் சென்று கடலில் விழுந்து அவற்றின் பெயர்களும் சுவையும் நீங்கி ஒரே கடலாவதுபோல், சீவன் பரமனிடம் சென்று சேர்தல் வேண்டும் என்று உபநிடதம் கூறுகின்றது. இதுபோன்ற பல தத்துவங்களை உணர்த்துவனவே அபிஷேகங்கள்.

இறைவன் அபிஷேகத்திற்குப் பயன்படுத்துகின்ற பொருள்களுக்கேற்ப பலன்கள் உண்டாகின்றன. அவையாவன:

**நீர் அபிஷேகத்தால் - சாந்தி உண்டாகும்.**
**திருமஞ்சன நீரில் வாசனைப் பொருட்களும் மலர்களும் இட்டு அபிஷேகம் செய்தால் - மல நிவாரணம்**
**வாசனைத்திரவிய அபிஷேகம் - செல்வம் உண்டாகும்**
**பால் அபிஷேகம் - ஆயுள் விருத்தி**
**தயிர் அபிஷேம் - மக்கள் விருத்தி**
**நெய் அபிஷேகம் - மோட்சம் உண்டாகும்**
**தேன் அபிஷேகம் - சங்கீத வன்மை**
**கருப்பஞ்சாறு அபிஷேகம் - நித்தியசுகம்**
**சர்க்கரை அபிஷேகம் - பகை அழித்தல்**
**வாழைப்பழ அபிஷேகம் - பயிர் விருத்தி**
**பலாப்பழ அபிஷேகம் - உலகவசியம்**
**மாம்பழ அபிஷேகம் - சகல விஜயம்**
**தமரத்தம்பழ அபிஷேகம் - பூமி இலாபம்**
**மாதுளம்பழ அபிஷேகம் - பகை நீக்கம்**
**நாரத்தம்பழ அபிஷேகம் - சற்புத்தி**
**எலுமிச்சம்பழ அபிஷேகம் - மருத்துவ நிவாரணம்**
**தேங்காய் துருவல் அபிஷேகம்- அரசுரிமை**
**இளநீர் அபிஷேகம் - சற்புத்திரப்பேறு**
**கோரோசனை அபிஷேகம் - தீர்க்காயுள்**
**பச்சைக்கற்பூர அபிஷேகம்- அச்சம் நீங்கும்**
**கஸ்தூரி அபிஷேகம் - வெற்றி உண்டாகும்**
**பன்னீர் அபிஷேகம் - சாலோக்கியம்**
**சந்தனக் குழம்பு அபிஷேகம் - சாயுச்சியம்**
**அன்னா அபிஷேகம் -ஆயுள், ஆரோக்கியம், அரசு- தேசம் விருத்தியுண்டாகும்.**
**மாக்காப்பு - மலநாசம்**
**நெல்லிக்காப்பு - நோய் நீக்கும்**
**மஞ்சட்காப்பு - இராசவசியம்**
**பஞ்சவியம் - ஆன்மசுத்தி**
**இரச பஞ்சாமிர்த அபிஷேகம் - செல்வம் உண்டாகும்**

இவ் அபிஷேகங்களை எத்தெய்வத்திற்குச் செய்தாலும் பலன்கள் ஒன்றே. இவ்வாறாக ஆலயங்களில் அபிஷேகங்களை மேற்கொள்ளும்பொழுது இறைவனின் திருவருள் எம்மைச் சேரும். எல்லோரும் எல்லா நலன்களையும் பெற்று இன்பமாக வாழலாம்.



# சண்முகப்பெருமான்

**க. சிவசங்கரநாதன்** அவர்கள்

பகவான் கிருஷ்ணர் கீதையில் தன்னைப்பற்றி விளக்குகின்றார். "என்னைப் பற்றி உண்மையாக அறியப்படுபவர் ஒரு சிலரே. இறைவனிடத்தில் எல்லாம் அடக்கம். ஆனால் அடங்கிய அனைத்தும் இறைவனை முழுமையாக அறிந்துகொள்ள இயலாது. முக்குணங்களினால் கவரப்பட்ட (விருப்பு, வெறுப்பு, மயக்கம்) மனிதர்களில் "உலகியல் களில் மோகமுள்ளவர்கள்" என்னை அறி வதில்லை. அறிந்தவர்கள் காப்பாற்றப் படுகின் றார்கள்". இதை அழகாக இராமகிருஷ்ண பரமஹம்சர் விளக்குகின்றார்.

பாலும் நீரும் கலந்து இருப்பதுபோல் இறைவன் மாயையோடு கலந்து இருக்கின் றார். அன்னப்பறவை பாலிலிருந்து நீரை அகற்றி பாலை மட்டும் பருகுவதுபோல மாயையோடு கலந்த என்னை மாயையை அகற்றிப் பார்ப் பது யோகிகளே. ஈசுவரனோடு கலந்த மாயை ஈசுவரனைப் பற்றுவதில்லை. எப்படிப் பாம்பின் விஷம் அதனுள் இருந்தாலும் அதனால் பாம்புக்குக் கேடு இல்லையோ, பூனைக் குட்டியை பூனை கவ்வினால் அதற்குத் துன் பம் ஏற்படாதோ அதேபோல்தான். ஆனால் எலியைக் கவ்வினால் எலி நாசமாகும். அதே போல் மாயை பற்றினால் மனித வாழ்வு நாசம். ஆனால் உண்மையான பக்தனை மாயை கட்டுப்படுத்தாது. எங்கெங்கும் பிரகாசமாய் விளங்கும் சூரியனைப் போன்றவன் இறைவன். ஆனால் அவனது பெருமை எல்லோராலும் உணரப்படுவதில்லை. எவ்வாறு ஒரு பூதக் கண்ணாடி- தண்ணீர்- உலோகம் இவைகள் சூரியஒளி பட்டவுடன் அந்த ஒளியை ஏற்று சூடாக மாறுகின்றதோ அதேபோல் தூயவர் களின் மனதில் இறைவன் இருப்பதை உணரும் அனுபவம் ஏற்படுகின்றது.

எங்கும் நிறைந்த பரம்பொருளை அவ்வாறே உணர்ந்தவர்கள் அபூர்வமாக உள் ளனர் என கண்ணன் கீதையிலே சொல்லியுள் ளார். இந்த இறைவனை சாதாரண மனிதன் அனுபவிப்பது எப்படி? இதற்கு ஆதிசங்கரர் அழகாகப் பதில் கூறியுள்ளார். இறைவன் என்பது உருவமற்றது. அது பிரம்மம். அது அறிவாக உள்ளது. ப்ரக்ஞானம் ப்ரம்ம ஞானம் அந்த அறிவை நேராகக் காணமுடியாது. அதற்குப் பல மார்க்கங்கள் இருப்பினும் சுலப மான மார்க்கம் இறைவனை உருவாய் வடித் துக் காண்பதாகும். அந்த உருவிற்கு ஒரு பெயர் கொடுத்து அதனைப் போற்றித் தொழு தால் அந்த பிரார்த்தனையே இறைவனை யார் என்று உணர்த்தும்.

ஷண்மதஸ்தாபனம் செய்தவர் ஆதி சங்கரர். ஆறுவகை வழிபாட்டின் வரிசையில் காணபத்யம், சாக்தம், சௌரம்,, வைஷ்ண வம், சைவம், குமாரம் (கௌமாரம்) ஆகியன வாகும். பெயர்கள் வெவ்வேறாகயிருப்பினும் இந்த ஆறும் ஒன்றே என்ற உண்மையையும் சங்கரர் பிரகடனப்படுத்தியுள்ளார். இந்த ஆறு வகையில் கௌமாரம் எனப்படும் குமரனின்

வழிபாட்டைக் காண்போம். இந்துமதம் என அழைக்கப்படும் சனாதனதர்மம் மிகவும் நலிந்துகிடந்த நிலையில் ஆதிசங்கரர் ஷண் மதஸ்தாபனத்தைச் செய்தார். தெய்வங்களில் பேதநிலை கிடையாது என்பதைக் காட்டவே கௌமாரம் என்னும் முருக வழிபாட்டைக் காட்டியுள்ளார். பிரணவ மந்திரமான "ஓம்" என்ற சொல்லே சிவ- குமர ஐக்கியத்தைக் குறிப்பிடும் சொல்லாகும்.

"ஈசானஸ் ஸர்வவித்யானாம் ஈஸ்வரஸர்வ பூதாணம்
பிரம்மாதிபிர் ப்ரம்மா சிவோமே அஸ்து சதாசிவோம்"

என்ற சிவமந்திரத்தில் பிரம்ம க்ஷணத்தைக் குறிக்கும் பிரம்மாதிபதிர் பிரம்மணோபதிர் என்ற வார்த்தைகள் சுப்பிரமணியனைக் குறிப்பதாகவும் "சுப்ரமண்யோஹம்" என்ற மந்திரம் ப்ரணவத்தைக் குறிப்பதாகவும் மகனீயர்கள் உணர்கிறார்கள். நம என்ற ப்பரண மந்திரமே அகாரம். உகாரம் "ம" காரம் என ஸ்வரூபமான சுப்பிரமணியனை குறிப்பதாகும்.

"அ" காரோ விஷ்ணுர்த்திஷ்ட
"உ" காரஸ்து மகேஸ்வர
"ம" காரஸ்து ஸ்ம்ருதா ப்ரஹ்மா
பிரணவஸ்து திரியாத்மக

பிரம்ம விஷ்ணு சிவனாக பிரணவ ஸ்வரூபமாக விளங்குபவர் சுப்பிரமணியர் என்பது தெளிவாகிறது. மற்றுமொரு வருணையில் கிருதயுகத்தில் ப்ரஹம விசாரணையும் கிரேதாயுகத்தில் ஸ்ரீராமனும் த்வாபரயுகத்தில் ஸ்ரீ கிருஸ்ணரும் கலியுகத்தில் முருகனும் (ஸ்கந்தனும்) வரதமூர்த்திகள் எனக் கூறுகின்றனர். இவனுக்கு குமரன் என்ற பெயரே, அவனை என்றும் இளைஞனாகக் காட்டுகின்றது. மாறுபடாத இளவயதுடையவன் குமரன் என்றும் இளையாய்- அழகனாய்- ஏருந்தான் உளையாய் என் உள்ளத்தே உறை எனப் போற்றுகின்றனர். ஆதலால் இவனை வருணிக்கும் வழிபாட்டிற்கு "கௌமாரம்" என்று பெயர். அருவமாய் இருக்கும் பிரம்மத்திற்கு உருவமாய்க் காட்சியளிப்பவன் முருகன். கச்சியப்பச் சிவாச்சாரியார் இவ்வாறு கூறுகின்றார்; "அருவமும் உருவமாகி அனாதியாய் பலவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பதோர் மேனியாகி" இப்படி அருவமும் உருவமும் ஒன்றாகித் திகழும் இத்தெய்வத்தைத் தென்னாட்டு தெய்வமாக விஷேசமாக தமிழ்த் தெய்வமாகக் கொண்டாடுவது சிறப்பாகும். ஈழத்தில் செல்வச்சந்நிதி கோயில், நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில், புலோலி உபயகதிர்காமம், மண்டூர் முருகன் கோயில், வெருகல் முருகன் ஆலயம் வடக்கு கிழக்கில் ஆங்காங்கே முருகன் ஆலயங்கள் பலவுள்ளமையும் தென்னிலங்கையில் கதிர்காமமும் முருக வழிபாட்டின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும்.

சிவசக்தி பிணைப்பின் சின்னம் முருகன். இவனுக்கு இந்த இணைப்பினால் கிட்டிய பெயர் ஆறுமுகம். லலிதா சகஷ்ர நாமத்தில் அம்பாளை "சுக்லாவர்ண ஷடானனா" வெண்மை நிறம் கொண்ட ஆறுமுகத்தவனே என்று வருணிக்கும்போது ஐந்துமுக சிவமானது; அதோமுகம் கொண்டு ஆறுமுகமாகத் திகழ்ந்து நிற்கின்றது என்று புலப்படும். பஞ்சபூதங்களும் சர்வ சராசரங்களின் முடிவில் ஓங்காரப் பொருளோடு ஐக்கியமாகிறது. அந்த ஓம்காரப் பொருள்தான் முருகன்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த முருகனை ஸ்வாமிநாதன் (சுவாமிநாதன்) என்ற

பெயரோடு அழைக்கின்றனர். தந்தைக்கு உபதேசம் செய்ததால் இவன் "சுவாமிநாதன்" என அழைக்கப்படுகின்றான். இதில் ஒரு சிக்கலும் ஒரு ஸ்வராஸ்யமும் உள்ளன. சிக்கல் 'சிவனுக்குப் ப்ரணவத்தின் பொருள் தெரியாதா? மகன் தந்தைக்கு உபதேசமா? இங்குதான் சூசுஷ்மம் உள்ளது. சிவ-சுப்பிரமணியன் என்ற பிணைப்பு பிரம்மத்தின் ஒருமுகத் தோற்றம் இதற்கு பேதமோ பிளவோ இல்லை. ஆக தனக்குத்தானே உபதேசம் செய்யத் தேவையா? ஆகவே இது ஒரு விளையாட்டு. தன் குழந்தைக்குத் தெரிவதை தான் ஆவலோடு கேட்டறிந்த தந்தையின் உவகைதான் இங்கு சித்தரிக் கப்படுகிறது. இவ்வாறு பேரறிவை உப தேசித்ததால் இவன் "ஞானஸ்கந்தன்" என அழைக்கப்பட்டான். இவனுக்கு ஆயிரமாயிரம் நாமங்கள். இவை யாவும் குமர தத்துவத்தின் பெருமையை பறைசாற்றுகின்றது.

இவனுக்கு "குகன்" என்ற பெயரும் உண்டு. மந்திரங்களில் சிறப்புப் பெற்றது "ஓம்". இந்தப் பிரணவ மந்திரமாக எல்லா ஜீவராசிகளின் இதயக்குகைகளிலே அமர் வதால் இவனுக்கு "குகன்" என்ற பெயர் கிட்டியது. ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் எங்கும் நிறைந்த பிரம்ம தத்துவத்தை தன் னில் கொண்டவனாக பிரம்மண்யன் சுப்பிர மணியனாகத் திகழ்கின்றான். அவன் அனைத் திடத்திலும் பரவி உள்ளதால் உள்ளக் குகையிலும் இருக்கின்றான். ஆக பூஜை களுக்கு முன்னோடியாக செய்யப்படும் ஆத்ம பூஜை என்பது குகனுக்கு உகந்ததாகும்.

வேதமயப்பொருளாகும் இம்முரு கனுக்கு உகந்தது வேல். இது முருகனுடைய ஆயுதமாகச் சொல்லப்படுகிறது. வேல் தாயா ரால் கொடுக்கப்பட்ட ஆயுதம். சூரனைக் கொல்ல எத்தனிக்கையில் அவன் தலை விழுந்தவுடன் வேறு தலை முளைப்பதைக் கண்ட முருகன் தன் தாயிடம் வேண்ட ஈசன் அம்பாள் இருவரும் இணைந்து தாய்மூலமாக வேலைப்பெற அது முருகன் கையில் வந்த வுடன் மூன்று சக்திகளும் இணைந்து சூரனை அழித்தது. ஆகவே, வேலைத் தொழுதால் அம்மூவரையும் தொழுத பலன் கிட்டும். ஆகவேதான், "வேலுண்டு பயமில்லை" என் கிறார்கள். குமரனைப் பற்றிய பெருமைகள் அநேகம் கணக்கிட முடியாதவை. ஏதோ சில வற்றை காணமுடிந்தது. முருகவழிபாட்டின் சிறப்பை கச்சியப்ப சிவாசாரியாரின் கந்த புராணம், குமரகுருபர சுவாமிகளின் பாடல்கள், அருணகிரிநாதரின் திருப்புகழ் மூலம் யாவரும் உணரலாம். இந்தத் தெய்வத்தை நினைத்து கார்த்திகைமாத கார்த்திகை நட்சத்திரத்தில் விரதத்தை ஆரம்பித்து மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதம் இருப் பதும் வழிபாடு செய்வதும் நல்லதாகும். அது மட்டுமல்ல; வைகாசி விசாகம், மாதந்தோறும் வரும் வளர்பிறை ஷஷ்டி திதியிலும் விரத மிருந்தும் வழிபாடு செய்வோர் இன்றும் உள்ளனர்.

இந்தத் தெய்வம், இந்தப் பரந்த உலகில் உள்ள துன்பங்களை நீக்கி இன்ப மான அன்பைப் பொழிந்து காட்டிய நாள்தான் கந்தசஷ்டி எனப் புகழ்பாடுகின்றது. சூரனைப் போன்று நம்மிடையேயுள்ள அசுர குணங்கள் யாவும் முருக பக்தியினால் அடங்கி, சூரனைப் போல் முருகனையே தஞ்சமடைந்து அவ னோடு இணையும் நாள் புனிதநாளாகும். ஷஷ்டி விரதமிருந்து நமது மனதைப் புனிதப் படுத்துவோம்.

உ

# திருவிளையாடல்

-ஆறுமுகநாவலர்-

படலம்: 48

## நாரைக்கு முத்திகொடுத்த படலம்

பாண்டிநாட்டின் தென்திசையிலுள்ள ஓரூரிலே ஒரு தாமரைத் தடாகமுண்டு. அதில் உள்ள மீன்களையெல்லாம் புசித்துக்கொண்டு ஒரு நாரை இருந்தது. சிலநாள் மழையில் லாமற்போய் தடாகம் வற்றிப்போனதால் அந் நாரை இரையை விரும்பி, அங்கிருந்து நீங்கி, விரைந்துபோய் ஒரு காட்டை அடைந்தது. நான்கு பக்கமும் படித்துறையுடையதும், கரையிலே சந்தியா மடம் உடையதுமாகிய ஒரு பெரிய குளம் இருந்தது. இரையை விரும்பி வந்த நாரையானது அக் குளக்கரையை அடைந்தது. அந்தத் தீர்த்தத்திலே இருடிகள் முழுகி எழும்போது அவர்களது தோட்புறத் திலேயும், சாய்ந்த சடையின் மீதும் தத்து கின்ற மீன்கள் பாய்ந்து பாய்ந்து புரளுதலைப் பார்த்ததும் அதற்கு நல்லறிவு வந்தது. "இம் மீன்கள் இவ் இருடிகளுடைய திருமேனியைத் தீண்ட என்ன தவம் செய்தனையோ! இம் மீன் களை நாம் புசிக்கலாகாது" என்று இரையை வெறுத்திருந்தது.

இருடிகள் அனைவரும் அத்தீர்த்தத் திலே நீராடிக் கரையேறி நித்திய கருமம் முடித்து, சந்தியா மடம் வந்தமர்ந்து மதுரைப் புராணம் வாசித்தார்கள். சோமசுந்தரமூர்த் தியின் விஷேடமும், மதுரைத் தல விசேடமும், பொற்றாமரைத் தீர்த்த விசேடமும், சோமசுந் தரக்கடவுள் செய்தருளிய திருவிளை யாடல்களும் மதுரைப் புராணத்தில் வாசிக்கப் பட்டது. இதனைக் கேட்டுக்கொண்டிருந்த நாரை அறியாமை நீங்கி முழுமையான மெய் யறிவு வரப்பெற்று, சிவபெருமானிடத்து உண் டான பேரன்பு பிரகாசிக்க மதுரையை அடைந் தது. அங்கு பொற்றாமரை வாவியிலே மூழ்கி எழுந்து சோமசுந்தரக் கடவுளை வலஞ் செய்து வணங்கி, அவர் திருமுன் இருந்து தியானம் செய்தது. இவ்விதமே பதினைந்து நாட்கள் நியமமாக அனுஷ்டித்தது. அதன் பின்னர் ஒருநாள் பொற்றாமரை வாவியிலே ஸ்நானம் செய்யப் புகுந்தபோது பசியினாலே மிகவருந்தி, அங்குள்ள மீன்களைக் கவர்ந் துண்ணும் எண்ணம் சிறிதளவு ஏற்பட்டது. ஆனால், சிவபெருமானுடைய திருவருட் பார்வையினாலே, "ஐயையோ! இந்தப் புண் ணிய தீர்த்தத்திலே உள்ள மீன்களைப் புசிக் கும் ஆசை எழுந்ததே! இந்தப் பாவம் எப் போது நீங்கும்?" என்று நினைத்துத் துக்க மடைந்து வெட்கப்பட்டு, பின்னும் சோமசுந் தரக் கடவுளைத் தியானித்தபடியே இருந்தது.

அப்படியிருக்கும்போது, சோமசுந்தரர் நாரைக்கு முன் தோன்றி, "உனக்கு வேண்டும் வரம் யாது? சொல்!" என்று திருவாய் மலர்ந் தருளினார். நாரை வணங்கி, "எம்பெருமானே! இப் பிறவியை நீக்கித் தமியேனைச் சிவ லோகத்தில் சேர்த்தருள வேண்டும்.

தமியேனுடைய குலத்தினராகிய நாரைகளும் மற்றைப் பறவைகளும் இந்தப் புண்ணிய தீர்த்தத்தில் உள்ள மீன்களைப் புசிக்கின், ஒரு காலத்தும் நீங்காத பழி வந்துசேரும். ஆதலால் இந்தத் தீர்த்தத்திலே மீன்கள் எக்காலத்தும் இல்லாதொழியும் பொருட்டு ஒரு வரந்தரவேண்டுமென" விண்ணப்பஞ் செய்தது. சோமசுந்தரக் கடவுளும் அவ்வாறே வரங் கொடுத்து மறைந்தருளினார். நாரை சிவசாருப் பியம் பெற்றுச் சிவலோகத்தை அடைந்து நந்திகணத்துள் இருந்தது.

அன்றுதொட்டு இன்றுவரையும் பொற் றாமரை வாவியிலே நீர் வாழும் உயிரினங்கள் இல்லாதொழிந்தன. இந்நாரையானது, தன் சுற்ற மேயன்றி வேற்றுப் பறவைகளும் தன்னைப் போல நற்கதியடையும்படி வேண்டிய பெருந் தன்மைதான் என்னே! தன் அன்பர்க்கெல்லாம் எளியராகி நிற்கும் இறைவனின் கருணையை என்னவென்பது? சுகுண பாண்டியனும் தன் னாட்டிலே இறை சிந்தனையுடனிந்து தரும காரியங்கள் பலவுஞ் செய்து இறுதியில் சுவர்க்கத்தை அடைந்தான்.

படலம்: 49

# திருவாலவாயான படலம்

சுகுணபாண்டியன் சுவர்க்கமடைந்த பின்னர் சித்திரபூடணன், சித்திரத்துவசன் என வழி வழி மைந்தர்களாய் இருபத்திரண்டு பாண்டியர்கள் அரசியற்றினார்கள். அதுல கீர்த்தி பாண்டியனுக்குப்பின், அவன் குமார னாகிய கீர்த்தி விபூடணன் ஆட்சியின்போது பிரளய காலம் வந்தது. அப்பொழுது சமுத் திரம் கரைகடந்து, ஆர்ப்பரித்து எழுந்து உலகத்தை அழித்தது. சோமசுந்தரக் கட வுளுடைய விமானமும், மீனாட்சியம்மை கோயிலும், இடபமலையும், யானை மலையும், நாக மலையும், பசுமலையும், பன்றிமலையும் அழியாதிருந்தன. வெள்ளம் வற்றிய பின், சிவபெருமான், உலகத்தை முன்போலப் படைத்துச் சந்திரன்- சூரியன்- அக்கினி எனும் மூவருடைய குலத்தினின்றும் தமிழ்வேந்தர் மூவரையும் படைத்தருளினார்.

அப்பொழுது சந்திரகுலத்துதித்த வம்மிசசேகர பாண்டியன் சோமசுந்தரக் கட வுளுடைய திருக்கோயிலைச் சூழ ஒரு சிறு நகரம் உண்டாக்கி அதில் இருந்துகொண்டு அரசு செய்தான். அவன் நீதிவழுவாது அரசு செய்தமையால், அவன் நாடெங்கும் எல்லா வளங்களும் பெருக சனப்பெருக்கம் அதிக மாகியது. சனப்பெருக்கத்திற்கு ஏற்றபடி இடம் போதாமையினாலே, ஒருநாள், பாண்டியன் திருக்கோயிலை அடைந்து சோமசுந்தரக் கட வுளை வணங்கி விண்ணப்பித்தான்.

"எம்பெருமானே! இத்தனைபேரும் இருக்கத்தக்கதாக ஒரு நகரம் வேண்டும். இந்நகரத்துக்கு ஆதியிலே வரையறுக்கப்பட்ட எல்லையைக் காண்கிலேன். இன்றைக்கு அதனைக் காட்டியருள வேண்டும்" என்றான். அப்பொழுது சிவபெருமான், அரைஞாண்- கௌபீனம்- பூணூல்- குண்டலம்- பாத கிங்கிணி- கங்கணம் என்பவையெல்லாம் பாம்பினாலே தரித்த ஒரு சித்தராக எழுந் தருளி வந்து, மகாமண்டபத்தின் பக்கத்திலே நின்றார். தனது திருக்கரத்தில் கங்கண மாயுள்ள பாம்பைப் பார்த்து, "நீ இவனுக்கு இந்நகரத்து எல்லையை அளந்துகாட்டு" என்று பணித்தருளினார். பாம்பு, அவரை வணங்கி, "எம்பெருமானே! இந்நகரம் அடியேன் பெயரினால் விளங்கும்படி அருள் செய்யும்" என்று பிரார்த்தித்தது. சிவ பெருமான், "அப்படியே ஆகுக" என்றருள்

செய்தார். பாம்பு விரைந்து, கிழக்குத் திக்கிலேபோய் வாலை நீட்டி, நகரத்தை வலமாகச் சூழும்படி உடம்பை வளைத்து, வாலை வாயில் வைத்துப் பாண்டியனுக்கு எல்லை காட்டிவிட்டுத் திரும்பிப்போய் சித்தர் கையிற் கங்கணமாயிற்று. சித்தரும் தமது திருக்கோயிலினுள் எழுந்தருளினார்.

பாண்டியன், அப்பாம்பு கோலியபடியே சுவரெடுத்து மதில் செய்வித்துத், தெற்கு வாயிலுக்குத் திருப்பெருங்குன்றமும்- வடக்கு வாயிலுக்கு இடபமலையும்- மேற்கு வாயிலுக்கு திருவேடகமும்- கிழக்கு வாயிலுக்கு திருப்பூவணமும் எல்லையாக வகுத்தான். அன்றிலிருந்து அம்மதில் **"ஆலவாய் மதில்"** எனவும் அந்நகரம் **"ஆலவாய் நகரம்"** எனவும் பெயர் பெற்றன.

பாண்டியன் அந்நகரத்தையும், கோயிற் கோபுரம் முதலானவற்றையும் புதிதாக நிர்மாணித்தும், சோமசுந்தரக் கடவுளுக்கு இரத்தின கிரீடமும் இரத்தினாபரணங்களும் செய்து சாத்துவித்தும் மகிழ்ந்தான். அத் "திருவாலவாய்" நகரத்திலே பலவகைக் குடிகளையும் இருத்திப் பல வளங்களும் பெருக, அரசு செய்துகொண்டிருந்தான்.





**திருக்கேதீச்சரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளின் கலாசார மண்டப நிர்மாணக் கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதன் ஒரு பகுதி தோற்றத்தை மேலுள்ள படங்களிற் காணலாம். சபையின் செயலாளர் 'கலா பூஷணம் த. துரைராசா, கட்டட நிர்மாண ஒப்பந்தக் காரர் தீ. சிறீகாந்தா, கட்டட மேற்பார்வையாளர் திரு கார்த்திகேயனையும் காணலாம். இக்கட்டிட நிதியுதவி செய்ய விரும்புவோர்**

***A/C No: 039010166499, H.N.B*யில் வைப்பிலிடலாம்.**

**தொடர்புகள்**

***Mr. T. Thurairajah,***
***31A, Janki Lane,***
***Colombo- 04,***
***Srilanka.***
***Tel: 011 4852232.***

உ

# இருள்வெளி இரணிமறந்து இடங் ஒளிற

சிவ சண்முகவடிவேல் அவர்கள்

சூரபன்மன் நான்கு நாட்களாக முருகப்பெருமானோடு போரினை ஆற்றினான். எல்லாம் இழந்தான். தனி ஒருவனாகப்பெருங் கோபத்தோடு நின்றான். சுடர்நெடும் தனிவேல் அண்ணல் அவன் முகத்தைப் பார்த்துப் பகர் கின்றார்.

"சூரபன்மா! மேகத்தில் மின்னல்கள் தோன்றித் தோன்றி அழிவதுபோல என் முன்னிலையில் அளவற்ற மாயா வடிவங் களை எடுத்துக் காட்டினாய். அவற்றை எல் லாம் அம்புகளை விடுத்து அழித்தோம். அழி விலாத நமது பெருவடிவம் காட்டுவோம். நன்று காண்பாய்.

முருகக்கடவுள் இவ்வாறு கூறியருளி; ஒலிக்கும் கடல்கள், உலகங்கள், திக்குகள், அண்டங்கள், தேவர்கள், உயிர்கள், ஏனைய பொருள்கள் யாவும் ஆறுமுகப்பெருமானு டைய திருமேனியில் அன்றி வேறுஇல்லை என்ன ஆங்கு ஓர் பெருவடிவம் கொண்டருளி னார்.

முருகப்பெருமானுடைய திருவடிகளின் மத்தியில் மலைகளும் மண்ணுலகம் முதல் கீழ் உள்ள உலகங்கள் அமையவும், திருப் பாதங்களின் முற்பாகத்தில் நீர்நிலைகள் யாவும் அடங்கவும், பாதவிரல்களில் இடியேறு களும் நட்சத்திரங்களும் கிரகங்களும் பொருந்தி நின்றன. பரடு என்னும் உறுப்பில் பூத சூரியன் சந்திரன் நிருதி அரக்கர்கள் நின்றார்கள்.

கணைக்காலில் முனிவர், சிந்தாமணி முதலியன அமைந்தன. முழந்தாளில் வித்தி யாதரர், தேவ கணத்தவர்கள் நின்றார்கள். தொடை நடுவில் இந்திரனும்- சயந்தனும், தொடையின் அடிப்பாகத்தில் யமன்- காலன் திருவரையின் முற்பக்கத்தில் அசுரர்கள். விலாப்புறத்தில் அனைத்துத் தேவர்கள்.

மூலாதாரத்தில் நாகங்கள், இலிங் கத்தில் அமிர்தம். நாடியில் சீவராசிகள், மார்பில் சாத்திரங்கள், முப்புரிநூலில் ஞானம். ரோமங்களில் அண்டங்கள், அங்கையில் உலக போகங்கள், திருத்தோளில் நான் முகன், நாராயணன்.

விரல்களில் சகல போகங்கள் பொருந்திய தேவ மகளிர், திருக்கழுத்தில் ஒலி, அக்கினி, வாயில் வேதம், பற்களில் எழுத்துக்கள், நாவினில் சிவாகம வேதங்கள், அதரங்களில் மகாமந்திரங்கள், நாசியில் வாயு, கருணைக் கண்களில் சந்திர சூரியர், செவிகளில் திக்கு, நெற்றியில் பிரணவம், சிரசில் பரசிவம் திகழவும் தமது மாறுபாடி லாது இருக்கும் திருப்பெருவடிவத்தைக் காட்டி நிற்கத் தேவர்கள் கண்டார்கள்.

ஆதியும் அந்தமுமில்லாத அப்பெரு வடிவத்தை சூரனும் கண்டான். ஆச்சரியத்தில்

அமிழ்ந்தி நின்றான். மெய்ஞ்ஞானிகளாலும் உணர்தற்கரிய ஆறுமுகப்பெருமான் சூரபன்மனுக்குச் சிறிது திருவருள் நல்க அவன் பின்வருமாறு கூறுவான்.

"கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப் பாலன் என்று இருந்தேன் அந்நாள் பரிசு இவை உணர்ந்திலேன் யான் மால் அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூல காரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ!

"எம்பெருமான் தாங்கி நிற்கும் திருமேனியின் அழகுகள் அனைத்தையும் பார்த்து முடிக்க வல்லவர் யார்? உடம்பு முழுவதும் அளவற்ற கண்களைப் பெற்றவர்களுக்கும் அனந்தகோடி கற்பகாலங்கள் கடக்கும் அல்லவா?

"ஆயிரகோடி மன்மதர்களுடைய அழகெல்லாம் ஒருங்கு திரண்டு ஒன்றாயின வாயினும் செவ்வேள் பெருமானுடைய திருவடி அழகிற்கு ஒப்பாகாது என்றால் இப்பெருமானுடைய பெருவடிவத்திற்கு உவமை யாவர் விரித்துரைக்க வல்லார்?

"என்னுடைய மாறுபாடாகிய சினம் தீர்ந்தது. போர் ஊக்கம் போன்றியது. உரோமங்கள் புளகாகீதம் கொள்கின்றன. கண்களில் இன்பக் கண்ணீர் உதிர்க்கிறது. அன்பு அரும்புகின்றது. மனம் கரைகிறது. எலும்புகளும் உலை முகத்து மெழுகுபோல உருகுகின்றது.

"அகந்தை அகன்றது. அறிவு உதயமாகின்றது. வலக் கண்ணும் தோளும் வலியத் துடிக்கின்றது. இது என்தவப் பயன் அன்றோ".

என் கால்கள் கந்தனை வலம் வருதல் வேண்டும். கைகள் கூப்பித் தொழுதல் வேண்டும். தலை தாழ வேண்டும். வாய் வாழ்த்த வேண்டும். மீளா அடிமையாக ஆட்படல் வேண்டும். என்று விரும்பும் மனத்தை நெஞ்சில் குடியிருக்கும் அபிமானம் தடுக்கின்றது! புதிய சூரன் பழைய ஆணவம் பிடித்த சூரனானான். முருகப்பெருமானும் பரமேசுவர வடிவத்தை மாற்றி மயில்மேல் அழகரானார்.

சூரனுடைய மனமாற்றத்தைக் கண்ட தேவர்கள் கலக்கமுற்றார்கள். நண்ணினார்க்கு இனியாய் ஓலம்- ஞான நாயகனே ஓலம் என்று பண்ணவர்கள் பரிதவித்தார்கள். பரஞ்சுடர் சூரசம்காரம் நிகழ விரிசுடர் வேலை விடுத்தருளினார்.


## பதவி எப்பொழுது வரும்?

நாளைய அறிஞர்களும், பெரிய அதிகாரிகளும், மேதைகளும், சிறியவர்களாகிய குழந்தைகளான உங்களிடையேதான் இருக்கிறார்கள். ஆகையால், நீங்கள் எல்லோரும் எப்பொழுதும் பிற்காலத்தைப்பற்றிக் கவலைப்படாமல் முன்னேற்பாட்டுடன் நடந்து கொள்ளுங்கள்.

நீ எப்போதும், பசித்திரு, தனித்திரு, விழித்திரு இப்ப இதுக்கு விளக்கம் சொல்லப் போறேன். பசித்திரு: சுறுசுறுப்பு உள்ளவர்கள் கிட்டதான் பசி இருக்கும். தனித்திரு: இது படித்ததை எல்லாம் ஒரு செயல்ப்பட வாய்ப்பாகும். விழித்திரு: எந்தக் காரியத்திலும் விழிப்புடன் இருக்கப்பழகிக்கொள். ....தானே வரும். (இதே இடத்தில் சில விநாடிகள் திருவாரியார் சுவாமிகள் பேச்சை நிறுத்த, ஒரு சிறுவன், 'எதுங்க தானே வரும்...? என்று கேட்டான்.)

நான் சொன்ன பதத்தின் முதல் எழுத்துக்களைச் சேர்த்துப்பார். உனக்கே புரியும் (என்று சிரித்தபடியே மென்மையாகக் கூறினார். முதல் எழுத்துக்களைச் சேர்த்தால் வருவது: பதவி.

உ




**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்** அவர்கள்

"அகதிகள் சென்றுகொண்டிருந்த படகு கவிழ்ந்து எல்லோரும் கடலினுள்ளே மூழ்கிவிட்டார்களாம்" என்று ஒருவர் அனுதாபத்துடன் கூறினார்.

"படகு ஒன்று பனிப்பாறையில் மோதி மூழ்கிவிட்டதாம்" என்று வேறொரு சந்தர்ப்பத்தில் மற்றொருவர் கூறிய செய்தி.

இப்படி அடிக்கடி பலரும் படகு விபத்தைப்பற்றிக் கவலையோடும் அனுதாபத்தோடும் பேசிக்கொள்கிறார்கள். மரணமடைந்தவரைப் பற்றி இறப்பை எதிர்நோக்கும் நாம் கவலைப்படுவது போன்றுதான் இதுவுமிருக்கிறது. நாமெல்லோருமே இத்தகைய ஆபத்தான படகுப்பயணத்திலேதான் ஈடுபட்டிருக்கிறோம். அந்தப் படகுமோதி மூழ்கிவிடக்கூடிய எத்தனையோ ஆபத்தான பாறைகள் நிறைந்த சமுத்திரத்திலே பயணஞ்செய்கிறோம். ஆண்டவன்தான் நம்மைக் காப்பாற்றவேண்டும். இந்த நிலையில் மற்றவரைப் பார்த்து அனுதாபப்படுகிறோம்.

"உங்களுக்கென்ன பைத்தியமா? நாங்கள் படகில் சென்றுவரும் எந்த அவசியமுமற்றவர்கள். எங்களைப் படகில் பயணிப்பவர்கள் என்று எப்படிக் கூறுவீர்கள்?" என்று இதை வாசிப்போர் நினைக்கலாம்.

நாம் படகிலே பயணித்துக்கொண்டிருப்பதாக நான் கூறவில்லை. திருநாவுக்கரசு நாயனார் கூறுகிறார். அவர் சொன்னால் அதில் ஏதோ விஷயமிருக்கிறது என்று நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள்.

தத்துவங்களை இலக்கியச் சுவையுடன் சேர்த்துத் தருவதனால் எம்மால் அவற்றை விளங்கிக்கொள்ள முடிகிறது என முன்னைய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தேன். அதேவகையில் இது நாவுக்கரசர் சித்திரிக்கும் அற்புதமான இலக்கியக்காட்சி.

தோணியிலே சரக்கை ஏற்றி, துடுப்புப்போட்டு பயணிக்கும்போது, அந்தத்தோணி பாறையிலே மோதிவிடுகிறது. அந்த வேளையில் "ஐயோ என்னுடைய படகு" என்றோ "என்னுடைய பொருட்கள் போகிறதே" என்றோ "என் ஆவி பிரியப்போகிறதே" என்றோ எண்ணாமல் "சிவசிவா" "சிவசிவா" என இறைவனை நினைக்கும் உணர்வு எனக்கு வேண்டும் என அப்பர் பெருமான் வேண்டி நிற்கின்றார். மேலும் விளக்கமாகவே அவர் பாடியிருக்கின்றார். தேவாரம் இதுதான்.

மனமெனுந் தோணி பற்றி மதியெனும் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச் செறிகட லோடும் போது

மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணா
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே

இத்தேவாரத்தைப் பாடும்போது நாமெல்லோருமே படகில் பயணிக்கிறோம் என்ற எண்ணம் ஏற்படுகிறதல்லவா? நாம் மனம் என்ற தோணியிலே அறிவு என்னும் துடுப்பை ஊன்றி சினம் என்ற பொருளை ஏற்றிக்கொண்டு வாழ்க்கைப் பயணத்தை நடத்தும்போது காமன் என்கிற பாறை மோதுகிறது. படகு கவிழ்கிறது. இது எந்த நேரம்? நாம் வாழ்க்கையில் தத்தளிக்கும் நேரம். அல்லது மரணிக்கும் கணம். இந்த வேளையில் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையில் நடந்துகொள்வார்கள். அவ்வாறில்லாமல், "ஒற்றியூரிலுறையும் ஈசனை எண்ணும் உணர்வை அருள்" என வேண்டி நிற்கிறார் நாவுக்கரசுப் பெருமான்.

அந்த இறைவன் எப்படிப்பட்டவன் என்பதையும் இங்கு குறிப்பிடுகிறார். எம்மால் அறியமுடியாத இறைவன். அறியவொண்ணாத அவனை நினைக்கும் நிலை அதுவும் அத்தகைய அவல நேரத்தில் எண்ணும் நிலை கிட்டுமானால் மெஞ்ஞானம் சித்திக்கும். அந்நிலையை அடைய அப்பர் வழிகாட்டுகிறார்.

அறியவொண்ணாத ஈசன் எப்படி மறைந்திருக்கின்றான். அவ்வாறு மறைந்திருப்பவனை எவ்வாறு கண்டுகொள்வது என்பனவற்றையும் மிக்க சுவையுடன் அப்பரடிகள் எடுத்துரைத்துள்ளார்.

விறகிலே தீ தெரிவதில்லை. பாலிலே நெய் புலனாவதில்லை. அதேபோலத்தான் இறைவனும் மறைந்து நிற்கின்றான். பாலிலுள்ள நெய்யை அதிலிருந்து பிரித்தெடுக்கின்றோம்தானே. மத்தையிட்டு கயிறுகட்டிக் கடைந்தால் வெண்ணெய் மேலெழுந்து வரும். உறவு என்ற மத்தையிட்டு உணர்வு என்ற கயிற்றால் நன்கு கடைய இறைவன் முன்னே நிற்பான். "ஆம்!" எம்முள்ளே இறைவன் இருக்கிறான். எங்குமிருக்கிறான். பக்தியால் எம்முள்ளத்தைக் கடைந்தால் அவன் எம்முன்னே தோன்றுவான்.

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

என்பது அப்பரது தேவாரம்.

தத்துவப் போதனைகளைக் கேட்டு, சிந்தித்து, தெளிந்து, உணர்ந்து இறைவனை அறிவதைவிட, துவைதம், அத்துவைதம், சித்தாந்தம் என்றெல்லாம் விவாதித்து கலங்கித் தெளிவதைவிட, மிக இலகுவாக நாளும் பொழுதும் நாம் காண்கின்றவற்றை உருவகித்து அப்பர்பெருமான் எம்மை இறைவன் வசப்படுத்தி விடுகிறாரல்லவா? சிந்தித்துப் பாருங்கள்.

சிந்திக்கவே வேண்டியதில்லை. இனிமேல் படகைப்பற்றிய செய்தியைக் கேட்டாலோ, வாசித்தாலோ, படகில் பயணித்தாலோ அந்தக் கணமே அப்பரின் தேவாரம் நினைவிற்கு வந்து ஈசனை எண்ணவைக்கும். மரத்தைக் கண்டாலும் விறகைக் கண்டாலும், பாலைக் கண்டாலும், தயிரைக் கண்டாலும் இன்று உறியையும், மத்தையும் காணமுடியாவிட்டாலும் அதற்குப் பதிலாக உபயோகிக்கும் இயந்திர உபகரணத்தைக் கண்டாலும் இறைவன் எங்கிருக்கிறான்? என மனம் தேடும். அவனை எப்படிக் காணலாமென அவாவும், திருநாவுக்கரசப் பெருமானின் தேவாரங்களின் மகிமையினால் இவை நிகழும்.

தமிழகத் திருக்கோயில் வரிசை: ௨

# திருவலஞ்சுழி

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை, தஞ்சாவூர், பாபநாசம் செல்லும் பேருந்துகள் திருவலஞ்சுழிப் பாதையூடாகவே செல்கின்றன. நான்காவது படைவீடான சுவாமிமலையிலிருந்து 1கி.மீ தூரத்தில் வலஞ்சுழி திருக்கோயில் உள்ளது. இந்த இடத்தைக் காவேரி ஆறு வலமாக வளைத்துச் செல்வதால் **"வலஞ்சுழி"** எனப் பெயர் பெற்றது. சக்திவனம், தக்ஷிணாவர்த்தம் என்பன இந்தத்தலத்தின் வேறு பெயர்கள்.

கிழக்குநோக்கிய அழகிய சிறிய கோபுர வாசல் கடந்து வந்ததும் விநாயகரை வணங்கி உட்புறமாக உள்ள சிவஸ்தலத்திற்குச் செல்கிறோம். அழகிய அலங்காரத்துடன் மூலவர் சந்நிதியும், அம்பாள் சந்நிதியும் தனித்தனியாக உள்ளன.


இறைவன்: கற்பகநாதர், செஞ்சடைநாதர், வலஞ்சுழிநாதர்
இறைவி: பெரியநாயகி, பிருகந்நாயகி
தலமரம்: வில்வம்
தீர்த்தம்: காவேரி

இங்குள்ள பைரவமூர்த்தி மிக உக்கிரம் வாய்ந்தவராக உள்ளார். கருவறைச் சுவரிலுள்ள கோஷ்ட மூர்த்தங்களும், உட்பிரகாரத்தின் பரிவார மூர்த்தங்களும் வழமையான இடங்களில் அமர்ந்துள்ளன. சனீஸ்வரர் சந்நிதி தனியாக உண்டு. திருவலஞ்சுழி "சிவஸ்தலம்" என்பதைவிட "விநாயகர் தலம்" என்பதே பிரபலமாக உள்ளது. இனி, திருவலஞ்சுழி ஸ்தலத்திற்குச் சிறப்புச் சேர்க்கின்ற **"வெள்ளைப் பிள்ளையார்"** கோயிலைத் தரிசிப்போம்.

கற்பக நாதரைக் காணும் ஆசையினால் அவசரமாக விநாயகர் சந்நிதியைக் கடந்து உள்ளே நுழைந்தோமல்லவா? மீண்டும் அந்தச் சந்நிதி வாசல்வரை வந்து, "சொல்லிக்கொள்ளாமல் வாயில் கடந்துபோன" தவறுக்காக தலையிலே குட்டிக்கொண்டு நிமிர்ந்து பார்க்கிறோம். ஒரு அளவான கருங்கல் மண்டபம். அந்த மண்டபம் சமச்சீர் இல்லாமலும், சில இடங்களில் சற்று வளைந்தும் நிமிர்ந்தும், கற்றூண்கள் சில முறைப்படி செதுக்கப்பட்டும்- சில செதுக்கப்படாமல் சதுரத் தூண்களாகவும், மேலே மூடப்பட்டிருந்த கருங்கல் விதானம் சில இடங்களில் சரியாக மட்டம் பண்ணப்படாமல் உள்ளமையையும் கண்டு நமக்கு பெரு வியப்புண்டாகிறது. சிற்பக்கலைக்கு தாய்மடியாக விளங்குகின்ற தமிழ்நாட்டின் பல சிறப்புமிக்க கோயில்களையும், மண்டபங்களையும், சிற்பங்களையும் பார்த்து- ரசித்து- வியந்த நம் கண்களுக்கு இந்த மண்டப அமைப்பு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. "நம்ம மேத்திரிமாரும் ஆசாரிமாரும் இதைவிடத் திறமாகக் கட்டுவார்கள்" என்று சொல்லிச் சிரித்தபடி மண்டப முடிவுப்பகுதிக்கு வருகிறோம். கடைசித் தூணில் ஒரு அறிவிப்புப் பலகை. **"அபராத மண்டபம்"** என்று தலைப்பிட்டு **"சோழ மன்னனின்**

கட்டளைக்கிணங்க ஒரே இரவில் கட்டி முடிக்கப்பட்டது இம்மண்டபம்" என்கிற வாசகமும் நம் கண்ணில் படுகிறது. நெற்றிப் பொட்டில் யாரோ ஓங்கி அடித்தமாதிரி இருந்தது. நமது அவசர புத்தியையும் கோணல் விமர்சனத்தையும் எண்ணி நாணித் தலை குனிந்தபடி கூனிக்குறுகி நடக்கிறோம்.

"அபராத மண்டபத்தின்" முடிவுப் பகுதி இன்னொரு நேர்த்தியான மூடிய மண்டபத்தில் ஆரம்பமாகிறது. கதவு இருக்கவேண்டிய இடத்தில் ஒரு பலகணி (யன்னல்) காணப்படுகிறது. கருங்கல்லில் நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட அப் பலகணியை நெருங்கிக் கைகளால் தொட்டுத் தடவிப் பார்க்கிறேன். இந்நாளில் நாம் யன்னல்களுக்கு வைக்கும் இரும்புக் "கிறில்" போன்று, 1" கனத்தில் செதுக்கப்பட்ட "கருங்கல் பலகணி" அது. கீழ்ப்புறத்தில் உள்ள பலகணியின் இடைவெளிகள் பெரியதாகவும், மேலே போகப்போக அந்த இடைவெளிகள் சிறுத்தும் செல்கின்றன. அத்துடன் மேல் இரு வரிகளிலும், சுற்றிவரவுள்ள ஓரத்திலும் இன்னொரு நுணுக்கம் காணப்படுகிறது. ஒவ்வொரு சதுர வடிவத்தின் மையத்திலும்- இன்னொரு சிறிய சதுரவடிவம் நூலிழைக் கனத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது. (புகைப்படத்தினைக் கவனமாக உற்றுப்பாருங்கள்) இந்தப் பலகணியை, நடுவே இரண்டும்- ஓரங்களில் அரை அரைத் தூண்கள் இரண்டுமாகத், தனியாக இல்லாமல் இந்தப் பலகணியுடன் இணைந்தபடியே (நமது முள்ளந்தண்டு வடத்திலுள்ள எலும்புக் கோவையை ஒத்ததாக) காணப்படுகிறது. ஆஹா... அற்புதமான கலைப்படைப்பு.... சிற்பக் கலையின் சிகரம்.... இதனைச் செதுக்கிப் பிரசவித்த சிற்பியின் திறமையையும் பொறுமையையும் வர்ணிக்க வார்த்தைகள்தான் உண்டோ?



"முற்காலத்தில் கோயிற் சிற்பங்களை வடிக்க முச்சலிக்காவில் (ஒப்பந்தப் பத்திரம்) சிற்பிகள் கையெழுத்திடும்போது கீழ்க்கண்டவாறு எழுதிக் கையொப்பமிடுவார்களாம். ஆவுடையார் கோயில்- கொடுங்கை; கடாரங்கொண்டான்- மதில்; திருவலஞ்சுழி- பலகணி; தஞ்சாவூர்- பிரமாந்திர விமானம் இவைகளைத் தவிர்த்து ஏனைய வேலைகளைச் செய்து முடிப்போம்" என்ற நிபந்தனையுடன் ++கையொப்பமிடுவார்களாம். இந்த ஒப்பந்தக்குறிப்பிலிருந்து இவற்றின் மகத்துவம் புரிகிறதல்லவா?

அற்புதப் படைப்பான இந்தக் கருங்கற் பலகணியைப் பார்த்தபடியே பக்கவாட்டாக நடந்து அந்தச் சிறிய மண்டபத்தினுள்ளே செல்கிறோம். வேலைப்பாடமைந்த சித்திரத்

++இந்தக் குறிப்பு, வல்வை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் மஹா கும்பாபிஷேக மலர்- 2004, பக்கம் 134இல் காணப்படுகிறது.

தூண்களும்- கல் குத்துவிளக்கும் கொண்ட இம் மண்டபத்தினை இந்திரனே அமைத்து, மண்டபத்தினுள்ளே "வெள்ளைப் பிள்ளையாரையும்" பிரதிஷ்டை செய்தான் என கோயிற் குறிப்புக் கூறுகிறது. இந்தக் கருவறை விநாயகர் கடல் நுரையினால் ஆக்கப்பட்டதனால் "நுரைப் பிள்ளையார்" என்றும், வெண்மையாக இருப்பதனால் "வெள்ளைப் பிள்ளையார்" என்றும் அழைக்கப்படுகின்றார். நுரையினால் ஆக்கப்பட்டதனால் இந்த விநாயகருக்கு அபிஷேகம் கிடையாது. ஒரு நாளில் பலமுறையும் பச்சைக் கற்பூரத்தைத் தூவி விடுகின்றனர். அளவான அலங்காரம் செய்யப்படுகிறது. மொத்தத்தில் மூர்த்தி சிறியதேயாயினும் கீர்த்தி மிகப்பெரியது.

வெள்ளைப் பிள்ளையாரின் அருள் வேண்டியும், பலகணியைப் பார்த்து மகிழவும் தினமும் பலநூறுபேர் வந்து போகிறார்கள். இவர்களுடன் நாமும் சேர்ந்து கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி விக்கினங்கள் தீர்த்தருளும் இந்த விநாயகனைப் பணிந்து வணங்கி நிற்கிறோம். இப்பொழுது நமக்குப் பின்புறமாக உள்ள பலகணியருகே (இது பலகணியின் உட்புறம்) வந்து நின்று பலகணியின் பெரியதும் சிறியதுமான துவாரங்களினூடாக வெளியே பார்க்கிறோம். நாம் ஏற்கனவே கடந்து வந்த அபராத மண்டபமும், அதற்கூடாக நடந்து வரும் பக்தர்களையும் தெளிவாகப் பார்க்கமுடிகிறது. மீண்டும் ஒருமுறை விநாயகனை வணங்கி விடைபெற்று பக்கவாட்டிலுள்ள கதவினூடாக வெளியே வந்து, அபராத மண்டபத்தினூடாக நடந்து கோபுர வாயில் தாண்டி எமது வாகனத்தை நோக்கி நடக்கிறோம். கருங்கல் பலகணியின் அமைப்பு நம் கண்களிலே நிழலாடுகிறது.

"என்னபுண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம்(ம்) நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தளரங்கள்
மன்னு காவிரிசூழ் திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே"

-சம்பந்தர் தேவாரம்-

# தியானம் என்பது என்ன?



**கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருப்பது அல்ல. நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அதற்கு அர்ப்பணித்துவிடு. ஒருமுறை சன்னியாசிப் பெரியவர் ஒருவரை நான் சந்தித்தேன். அவர் தமது கடவுள் வழிபாட்டிற்கும் தியானத்திற்கும் எவ்வளவு ஊன்றிக் கவனமும் கருத்தும் செலுத்தினாரோ, அதே அளவுக்கு ஊன்றிய கருத்தோடும் கவனத்தோடும் தமது பித்தளைச் சமையல் பாத்திரங்களையும் தேய்த்துப் பொன்போலப் பிரகாசம் உள்ளதாகச் செய்துகொள்வார். இதுவே தியானம்.**

**-சுவாமி விவேகானந்தர்-**

**அமைதி நிறைந்த மனதிற்கு எல்லா இடமும் கோயிலே.**

உ

# வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**06.05.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆன்ம ஈடேற்றம்"

வழங்குபவர் :- யாழ் சின்மய நிறுவனத்தின் பிரம்மசாரி ஜாக்கிரத் சைதன்யா சுவாமி அவர்கள்

---

**13.05.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- இன்னிசை

வழங்குபவர் :- அ. அகிலதாஸ் [அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி]

அவர்களின் நெறிப்படுத்தலில்

செல்வன் ஜெகதீஸ்வரன் மதுராசிகன் அவர்கள்

(பக்கவாத்தியசகிதம்)

---

**20.05.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**27.05.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் 161ஆவது மாத வெளியீடு

வெளியீட்டுரை :- சி. சிவபாலசிங்கம் அவர்கள்

[கிராம உத்தியோகத்தர் பொலிகண்டி]

மதிப்பீட்டுரை :- துரை கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர் யாழ்ப்பாணக்கல்லூரி]

வைகாசி 2011

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

